பக்கங்கள்: இருபது

# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 25 வள்ளுவர் ஆண்டு 2040 மார்கழி 11 சனிக்கிழமை (26.12.2009) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 030

# உள்நாட்டுக்குள் உருவாக்கப்படும் தீர்வு குறித்து பூர்வாங்க ஆராய்வு

## சரத், ரணிலுடன் கூட்டமைப்பு நேற்றுப் பேச்சு

கொழும்பு, டிசெம்பர் 26

பிரதான எதிர்க்கட்சிகளின் பொதுவேட்பாளராக எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் ஜெனரல் சரத் பொன்சேகாவுக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் இடையில் நேற்றும் தொடர்ந்து உயர்மட்டப் பேச்சுகள் நடைபெற்றன.

நேற்று முற்பகல் நடைபெற்ற இந்தப் பேச்சுகளில் ஜெ[illegible]ல் பொன்சேகாவுடன் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, ஜனநாயக மக்கள் [illegible]யின் தலைவர் மனோ கணேசன் ஆகியோர் எதிரணித் தரப்பில் பங்குபற்றினர். தமிழ் [illegible] கூட்டமைப்பின் சார்பில் அதன் நாடாளுமன்றக் குழுத் தலைவர் இரா.சம்பந்தன் மற்றும் சுரேஷ் பிரேமச்சந்திரன் எம்.பி. ஆகியோர் இப்பேச்சுகளில் கலந்துகொண்டனர்.

(19ஆம் பக்கம் பார்க்க)

## தபால் மூலம் வாக்களிக்க 4 லட்சம் பேர் விண்ணப்பம்

கொழும்பு, டிசெ. 26

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தபால்மூலம் வாக்களிப்பதற்காக நான்கு லட்சத்திற்கும் அதிகமானோர் விண்ணப்பித்துள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தபால் மூலம் வாக்களிப்பதற்காக விண்ணப்பித்துள்ளவர்களின் தகுதி குறித்து ஆராயும் நடவடிக்கைகள் ஆரம்பமாகியுள்ளன.

தபால் மூலம் வாக்களிப்பதற்காக குருநாகல் மாவட்டத்திலிருந்தே அதிகமானோர் விண்ணப்பித்திருக்கின்றனர் என

(20ஆம் பக்கம் பார்க்க)

## பொன்சேகாவின் தேர்தல் பிரசாரத்துக்கு சென்று வீடு திரும்பியோர் மீது தாக்குதல்

### மாவனல்லையில் சம்பவம்

கொழும்பு, டிசெ. 26

கடந்த 22 ஆம் திகதி இரவு மாவனல்ல நகரில் நடைபெற்ற எதிர்க்கட்சிகளின் கூட்டணியின் பொது வேட்பாளர் சரத் பொன்சேகாவின் கூட்டத்துக்கு வந்து விட்டு திரும்பி வீடு நோக்கிச் சென்றவர்கள் மீது அரநாயக்க வீதியில் மூன்று இடங்களில் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

ஜெனரல் சரத் பொன்சேகாவின் ஊடகவியலாளர்களை ஏற்றிச் சென்ற வானையும், ஜீப் வாகனத்தையும் வழிமறித்த கோஷ்டியினர் தொடுத்த தாக்குதலில் ஊடகவியலாளர்கள் சிறு காயங்களுக்குள்ளானார்கள்.

இந்தச் சம்பவத்தைப் பார்வையிட ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் லலித் திஸாநாயக்க வந்த போது இனந்தெரியாதோர் அவரது ஜீப் கண்ணாடியை உடைத்துள்ளனர் எனவும் கூறப்படுகின்றது.

(20ஆம் பக்கம் பார்க்க)

## ஆழிப்பேரலை அனர்த்தத்தின் 5ஆம் ஆண்டு நினைவு இன்று

### காலையில் 2 நிமிடம் மௌனாஞ்சலி

கொழும்பு, டிசெ. 26

பல்லாயிரக் கணக்கானோரைக் காவு கொண்ட ஆழிப்பேரலையின் ஐந்தாம் ஆண்டு நினைவு நாளான இன்று தேசிய பாதுகாப்புத் தினமாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

ஆழிப்பேரலையால் காவு கொள்ளப்பட்டவர்களை நினைவுகூரும் வகையில் நாடளாவிய ரீதியில் இன்று காலை 9.25 மணிமுதல் 9.27 மணிவரை இரண்டு நிமிடமௌன அஞ்சலியில் ஈடுபடுமாறு சகலரையும் மனித உரிமைகள் மற்றும் இடர் முகாமைத்துவ அமைச்சர் மஹிந்த சமரசிங்க கேட்டுள்ளார்.

ஆழிப்பேரலை அனர்த்தத்தை நினைவுகூரும் வகையிலும், மக்களை எச்சரிக்கையூட்டும் வகையிலும் நாடளாவிய ரீதியில் பல நிகழ்வுகள் இன்று இடம்பெறுகின்றன.

இந்நிகழ்வுகளில் ஆழிப்பேரலையால் உயிரிழந்தவர்களை நினைவு கூர்ந்து அவர்களுக்காகப் பிரார்த்தனைகளும், வழிபாடுகளும் இடம்பெறவுள்ளன. (சி)

## ஜி.எஸ்.பி. சலுகையைப் பெற இலங்கை தொடர்ந்து முயற்சி

கொழும்பு, டிசெ. 26

இலங்கைக்கான 'ஜி.எஸ்.பி.' வரிச்சலுகையை இடைநிறுத்தும் முடிவை எடுத்தமைக்காக ஐரோப்பிய ஒன்றியத்திற்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கும் எண்ணம் எதுவும் இலங்கைக்கு இல்லை எனத் தெரிவித்துள்ள இலங்கை அரசு தொடர்ந்தும் இச்சலுகையைப் பெறுவதற்கான பேச்சுகள் மேற்கொள்ளப்படும் எனவும் தெரிவித்துள்ளது.

மனித உரிமைகள் அமைச்சர் மஹிந்த சமரசிங்க இதனை 'ஏசியன் டிரிபியூன்' இணையத்தளத்திற்குத் தெரிவித்துள்ளார்.

ஐரோப்பிய ஒன்றியத்திற்கு எதிராக எந்தச் சட்ட நடவடிக்கையையும் எடுக்கப்போவதில்லை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பாக பல கருத்துகள் முன்வைக்

(20ஆம் பக்கம் பார்க்க)

## நந்தாவில் கோயில் கேணியில் மூழ்கி இரு மாணவர்கள் பரிதாப மரணம்

### அவர்கள் தாக்கப்பட்டு விழுத்தப்பட்டனரா?

கோண்டாவில், டிசெ.27

கொக்குவில், நந்தாவில், அம்மன் கோயில் கேணியில் குளிக்கச் சென்ற இரு பாடசாலை மாணவர்கள் நேற்று முற்பகல் 11 மணிக்கு நீரில் மூழ்கி மரணமான பரிதாபகர சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இந்தச் சம்பவத்தில் கோண்டாவில் இந்து மகாவித்தியாலய மாணவனான ரஞ்சன் மயூரன் (வயது - 15- கோண்டாவில் கிழக்கு) சடலமாக கேணியிலிருந்து மீட்கப்பட்டார்.

மூச்சுத் திணறிய நிலையில் மீட்கப்பட்ட கோண்டாவில் பரஞ்சோதி வித்தியாலய மாணவனான ரவி ரதிமதன் (வயது - 18-கோண்டாவில் கிழக்கு)ஆஸ்பத்திரிக்கு எடுத்துச்செல்லும் வழியில் மரணமானார்.

இந்தச் சம்பவம் குறித்து முதற்கொண்டு கிடைத்த தகவல் வருமாறு:-

கொக்குவில் நந்தாவில் கற்புலத்து மனோன்மணி அம்மன் ஆலய தீர்த்தக் கேணியில் நீராடுவதற்காக இளைஞர்கள் மூவர் சென்றிருந்தனர். அவர்களில் இருவர் நீரினுள் மூழ்குவதை வெளியே இருந்து

(19ஆம் பக்கம் பார்க்க)

## 3 லட்சம் அகதிகளின் வாக்குரிமை பாதிக்கப்படும் அபாயம் உண்டு என கண்காணிப்பு அமைப்பு எச்சரிக்கிறது

கொழும்பு, டிசெ. 26

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் சுமார் மூன்று லட்சம் வன்னி அகதிகளுக்கு தமது வாக்குரிமையைப் பிரயோகிக்க முடியாமல் போகும் அபாயம் ஏற்பட்டுள்ளது என்று தேர்தல் நடவடிக்கைகளைக் கண்காணிக்கும் 'கபே' அமைப்புத் தெரிவித்துள்ளது.

தேர்தல் ஆணையாளரும் ஜனாதிபதி வேட்பாளர்கள் 22 பேரும் சேர்ந்து அந்த அகதிகளின் வாக்குரிமையைப் பாதுகாக்க உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் அந்த அமைப்பு வேண்டுகோள் விடுத்துள்ளது.

(19ஆம் பக்கம் பார்க்க)

அறிமுகப்படுத்துகிறோம்
யாழ் நகரிலும், கொழும்பிலும்
ஒரே சுவை, ஒரே தரம், ஒரே விலை
Cosy Hotel & Restaurant
Open 06.00am to 11.00pm
விசேட வடஇந்திய காலை உணவு
பூரி, சப்பாத்தி, பரோட்டா, நாண், சைவ, அசைவ கறிவகைகளும் மற்றும்
Indian, Chinese, Panjabi & Jaffna Foods
கொசி உணவகம்
Feel like home
இல: 25, புகையிரத நிலைய வீதி, வெள்ளவத்தை. HOTLINE: 0112504020
இல:15, சிறாம்பியடி லேன், யாழ்ப்பாணம். HOTLINE: 021-2225899

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# சங்கக்காரவின் முடிவு தவறானது என்கிறார் அதிரடி வீரர் ஷேவாக்



''நாணயச்சுழற்சியில் வென்ற இலங்கை அணியின் தலைவர் சங்கக்கார முதலில் துடுப்பாட்டத்தைத் தெரிவு செய்தது தவறான முடிவு'' - என்று இந்திய அணியின் தற்காலிக அணித்தலைவர் ஷேவாக் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் இலங்கையுடனான போட்டியில் வெற்றிகொண்டதன் பின்னர் கருத்துக் கூறும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் கூறியவை வருமாறு:-

''இந்த மைதானப் பகுதியில் பனியின் தாக்கம் முக்கிய பங்கு வகிக்கும் என்பது எங்களுக்குத் தெரியும். நாங்கள் நாணயச் சுழற்சியில் வென்றிருந்தால் முதலில் களத் தடுப்பைத்தான் தெரிவு செய்திருப்போம்.

''சங்கக்கராவின் முடிவு நமது சுழற் பந்து வீச்சாளர்களுக்குச் சாதகமாக அமைந்து விட்டது. அப்போது பனிப்பொழிவு இல்லாதமையால் பந்து ஈரப்பதம் இல்லாமல் இருந்தமையால் சிறப்பாகப் பந்துவீச முடிந்தது.

''நானும், டெண்டுல்கரும் விரைவில் ஆட்டமிழந்த போதிலும், கம்பீரும், ஹோக்லியும் அற்புதமாக விளையாடினார்கள்''-என்றார்.

# அக்தரின் எதிர்காலம் கேள்விக்குறி

பாகிஸ்தான் உள்ளூர்அணிகளில் கூட விளையாடுவதற்கு அக்தர் தெரிவுசெய்யப்படாதமையால் அவர் தனது திறமையை நிரூபித்து தேசிய அணியில் இடம்பிடிப்பதற்கான வாய்ப்புக் குறைவாக உள்ளமையால் அவரின் கிரிக்கெட் வாழ்க்கை கேள்விக்குறியாகியுள்ளது.

பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் சர்ச்சைக்குரிய வேகப்பந்து வீச்சாளரான சொயப் அக்தர் மீண்டும் தேசிய அணியில் இடம்பிடிப்பதற்காகப் போராடி வருகிறார். அதற்காக உள்ளூர் போட்டிகளில் தனது உடல்தகுதியை நிரூபித்தால் மட்டுமே பாகிஸ்தான் அணிக்கு தெரிவுசெய்யப்படுவது குறித்துப் பரிசீலிக்கப்படுவார்.

இந்த நிலையில் எதிர்வரும் முதலாம் திகதி தொடங்கும் 5 அணிகளுக்கிடையிலான உள்ளூர் கிரிக்கெட் போட்டியில் அவர் எந்த அணியிலும் தெரிவு செய்யப்படவில்லை. ரெஸ்ட் ஆப் பாகிஸ்தான் அணியில் தெரிவு செய்யப்படலாம் என்று எதிர் பார்த்தவர்களுக்கு ஏமாற்றமே மிஞ்சியது.



மேலும் அடுத்த மாதம் அறிவிக்கப்படவுள்ள பாகிஸ்தான் கிரிக்கெட் சபையின் புதிய ஒப்பந்த வீரர்களின் பட்டியலிலும் அக்தர் இடம் பெற வாய்ப்பில்லை என்று தெரியவருகிறது. இதனால் அக்தரின் கிரிக் கெட் வாழ்க்கை கேள்விக்குறியாகியுள்ளது.

# உதைபந்து உலகில் நான் ஒன்றும் ராஜா அல்ல 'தங்கப் பந்து' விருது பெற்ற மெஸி கூறுகிறார்

உதைபந்து உலகில் நான் ஒன்றும் ராஜா அல்ல. முதிலிடத்தில் எனக்கு நம்பிக்கையும் இல்லை. என்னைப் பொறுத்த வரை நான் பங்கேற்கும் போட்டிகளில் எனது அணி வெற்றி பெறவேண்டும். இதுவே எனது விருப்பம்'' - எனக் கூறியுள்ளார் லியோனல் மெஸி.

22 வயதான இவர், அண்மையில் ஐரோப்பாவின் சிறந்த உதைபந்து வீரருக்கு வழங்கப்படும் 'தங்கப்பந்து' விருது மற்றும் சர்வதேச உதைபந்துக் கூட்டமைப்பு (பிபா) வழங்கிய ஆண்டின் சிறந்த வீரர் விருதையும் தன்வசப்படுத்தியுள்ளார் மெஸி. இதன் மூலம் கிறிஸ்டியானோ றொனால்டோவைப் பின்னுக்குத் தள்ளி உலகின் முதல் நிலை வீரர் என்ற அந்தஸ்துக்கு உயர்ந்துள்ளார்.

இதுகுறித்து அவருடன் சிறிய சந்திப்பு-

கேள்வி:- ஆண்டின் சிறந்த வீரர் விருது வென்றமை மகிழ்ச்சியளித்ததா?

பதில்:- சிறந்த வீரர் விருது வென்றமையானது எனது வாழ்வின் மறக்க முடியாத தருணம். இருப்பினும் விருது வெல்ல வேண்டும் என்ற நோக்கில் போட்டிகளில் பங்கேற்பது இல்லை. உதைபந்து அரங்கில் தொடர்ந்து சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்த விரும்புகிறேன்.



கே:- உலகின் முதல் நிலை வீரராக உருவெடுத்துள்ளது பற்றி உங்கள் கருத்து?

ப:- உதைபந்து உலகில் நான் ஒன்றும் ராஜா அல்ல. முதிலிடத்தில் எனக்கு நம்பிக்கையும் இல்லை. என்னைப் பொறுத்தவரை நான் பங்கேற்கும் போட்டிகளில் எனது அணி வெற்றி பெறவேண்டும். இதுவே எனது விருப்பம்.

கே:- உங்களது ஆட்டம், மரடோனாவின் ஆட்டத்துடன் ஒப்பிடப்படுவது பற்றி உங்கள் கருத்து?

ப:- உலகின் தலைசிறந்த வீரர் மரடோனா. அவரை என்னுடன் ஒப்பிடுவது மகிழ்ச்சியே. என்றாலும், அதற்கான தகுதி எனக்கிருக்கிறது என நான் கருதவில்லை.

கே:- உங்களுக்கு நாட்டுப்பற்று இல்லை என சமீபத்தில் எழுந்த குற்றச்சாட்டு பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

ப:- அது ஊடகங்களில் வெளியான தவறான குற்றச்சாட்டு. முதலில் நான் ஆர்ஜென்ரீனாவைச் சேர்ந்தவன். தேசிய அணியில் தாய்நாட்டுக்காக விளையாடுவதையே பெருமையாகக் கருதுகிறேன். பார்சிலோனா அணி சார்பாக உள்ளூர் போட்டிகளில் பங்கேற்பது காலத்தின் செயல். அதற்காக என்னை நாட்டுப்பற்று இல்லாதவன் என்று கூறுவது ஏற்றுக் கொள்ளமுடியாதது.


## தேவை

யாழ்.மாநகர எல்லைக்குள் வசிக்கும் கணக்குப்பதிவுனர் (ஆண்) உடன்தேவை.

T.P.: 0773583879

## லீலா

## பஞ்சாங்க சித்திரக் கலண்டர்

இம்முறையும் புதுப்பொலிவுடன் பல சித்திரங்களுடன் மாணவ சமுதாயத்திற்கு வேண்டிய பொது அறிவு, விஞ்ஞானம், உலகத் தலைவர்கள், சமயப் பெரியார்கள், அறிஞர்கள், இந்து, கிறிஸ்தவ, முஸ்லிம் திருநாள்கள் யாவற்றையும் பார்க்கக்கூடிய முறையில் ஒரே ஒரு சித்திரக்கலண்டராக இரண்டு நிறங்களில் அச்சிட்டு வெளிவந்துவிட்டது.

வெளிநாடுகளுக்கும், உள்நாடுகளுக்கும் அனுப்பிக் கொண்டு இருக்கின்றோம். வியாபார அன்பர்கள், பாவனையாளர்கள், வாடிக்கையாளர்கள் தாமதிக்காது உடன் ஆடரை அனுப்பி தேவையான கலண்டர், டயரிகளை பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தயாரிப்பாளர்கள்:

லீலா பிறஸ் பிரைவேட் லிமிட்டட்

இல.400, கே.சிறில், சீ பெரேரா மாவத்தை,
கொழும்பு - 13.
தொலைபேசி: 2325930, 2325933
பக்ஸ்: 2446077
ஈ-மெயில்: leela@sltnet.lk



MUSIC WORLD
THE LEADING IT SUPPER MARKET IN JAFFNA

வழங்கும்

நத்தார், புது வருட கால சிறப்புத் தள்ளுபடிகள்

டிசெம்பர் 18 முதல் ஜனவரி 05 வரை மட்டும்

*இச் சலுகை உடனடிப் பணக் கொடுப்பனவுகளுக்கு மட்டுமே*

| LCD MONITORS | | |
|---|---|---|
| AOC 16" | ~~12,900/=~~ | 12,000/= |
| Viewsonic 16" | ~~14,500/=~~ | 13,500/= |
| LG 19" | ~~15,900/=~~ | 15,250/= |
| DELL 19" | ~~16,900/=~~ | 15,750/= |
| Samsung 19" (943) | ~~17,900/=~~ | 16,750/= |
| Viewsonic 19" | ~~18,900/=~~ | 17,750/= |

| PROCESSORS | | |
|---|---|---|
| Intel celeron 1.8 Ghz | ~~5,400/=~~ | 4,900/= |
| Intel 2.50 Ghz Dual Core | ~~8,750/=~~ | 8250/= |
| Intel 2.60 Ghz Dual Core | ~~9,300/=~~ | 8500/= |
| Intel c2.93 Ghz Core 2 Duo | ~~15,250/=~~ | 14600/= |

| MOTHER BOARDS | | |
|---|---|---|
| Asrock G 31 | ~~5,750/=~~ | 5,400/= |
| Foxconn | ~~5,900/=~~ | 5,500/= |
| Biostar | ~~6,200/=~~ | 5,750/= |
| Gigabyte G 31 | ~~6,400/=~~ | 5,750/= |
| Asus G 31 | ~~6,500/=~~ | 6,000/= |
| Intel DG 31PR | ~~7,500/=~~ | 7,000/= |

| HARD DISK (SATA) | | |
|---|---|---|
| 80 GB SATA | ~~4,700/=~~ | 4,400/= |
| 160 GB SATA | ~~5,300/=~~ | 4,900/= |
| 250 GB SATA | ~~5,900/=~~ | 5,250/= |
| 320 GB SATA | ~~6,250/=~~ | 5,650/= |
| 500 GB SATA | ~~7,250/=~~ | 6,900/= |

| WRITERS (SATA) | | |
|---|---|---|
| DVD Combo | ~~3,000/=~~ | 2,750/= |
| LG 22 X | ~~3,500/=~~ | 3,100/= |
| Samsung 22 X | ~~3,600/=~~ | 3,100/= |
| Liteon 24 X | ~~3,750/=~~ | 3,400/= |
| Hp 24 X | ~~3,900/=~~ | 3,700/= |
| Asus 24 X | ~~4,250/=~~ | 3,900/= |

| PRINTERS | | |
|---|---|---|
| Hp D 1660 | ~~5,200/=~~ | 4,750/= |
| Epson Tio | ~~5,250/=~~ | 4,500/= |
| Samsung Laser printer | ~~14,900/=~~ | 13,500/= |

| SCANNERS | | |
|---|---|---|
| Mustek USB | ~~5,780/=~~ | 5,250/= |
| Cannon LIDE 100 | ~~6,250/=~~ | 5,950/= |
| Hp G 2410 | ~~7,900/=~~ | 7,500/= |

| ADSL ROUTERS | | |
|---|---|---|
| TP Link ADSL 2 Port | ~~4,500/=~~ | 3,900/= |
| TP Link ADSL 4 Port | ~~6,250/=~~ | 5,900/= |
| TP Link 4 Port Wireless | ~~8,250/=~~ | 7,900/= |

| SUB WOOFERS | | |
|---|---|---|
| Microlab 2.1 | ~~3,250/=~~ | 2,750/= |
| Creative 2.1 | ~~3,100/=~~ | 2,700/= |
| Microlab 5.1 | ~~6,400/=~~ | 5,700/= |

HSDP MODEMS
Broadband 7.2 G USB SIM Model ~~9,250/=~~ 7,750/=

ATX CASING (With Power supply) ~~3,250/=~~ 2,600/=

COMPUTER CHAIR ~~3,900/=~~ 3,250/=

COMPUTER TABLE ~~3,250/=~~ 2,750/=

SONY DIGITAL CAMERA CyberShot 10.1 Mega Pix 14,900/= Only

SAMSUNG DIGITAL CAMERA 12.2 Mega Pix 16,900/= Only

Credit cards & Debit Card are Acceptable

VISA MasterCard

MUSIC WORLD
THE LEADING IT SUPPER MARKET IN JAFFNA
241B, Palaly Road, Thirunelvely, Jaffna - Phone : 021 222 ...
musicworld@dialognet.lk / musicworld@sltnet.lk


## புதிய பாடத்திட்ட செயலமர்வு

யாழ்ப்பாணம், டிசெ.26

தென்மராட்சி கல்வி வலய பாடசாலைகளில் தரம் -9 வகுப்புக்களில் தமிழ் மொழியும், இலக்கியமும் பாட ஆசிரியர்களுக்கான புதிய பாடத்திட்ட செயலமர்வு இன்றும், நாளையும் வலயக்கல்வி அலுவலக கேட்போர் கூடத்தில் நடைபெறும் என வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிறேமகாந்தன் அறிவித்துள்ளார். (ஓ)

## பொன்சேகாவுக்கு எதிராக ஆர்ப்பாட்டம்

யுத்தத்தின் இறுதிக்கட்டத்தில் வெள்ளைக் கொடிகளுடன் படையினரிடம் சரணடைய வந்த புலித்தலைவர்களைச் சுட்டுக் கொல்லுமாறு பாதுகாப்புச் செயலர் உத்தரவிட்டார் என்ற சாரப்பட ஜெனரல் சரத் பொன்சேகா கருத்து வெளியிட்டுள்ளார் என்று தெரிவித்து, அதற்கு எதிராக அரசுத் தரப்பு நேற்றுக் கொழும்பில் ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தியது.

கொழும்பு புறக்கோட்டை ரயில்நிலையத்திற்கு முன்பாக நேற்றுப் பிற்பகல் இரண்டு மணிக்கு இந்த ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது. பெரும் எண்ணிக்கையான அரச ஆதரவாளர்கள் இதில்கலந்துகொண்டு பொன்சேகாவுக்கு எதிராகக் கோஷங்களை எழுப்பினர்.


## கட்டடம் தேவை

கொழும்பில் பிரபல்யம் வாய்ந்த கல்விசார் நிறுவனம் ஒன்றிற்கு யாழ்.நகரை அண்டிய இடங்களில் சகல வசதிகளுடனும் கூடிய 750-2000 சதுர அடி பரப்பளவு உடைய கட்டடம் வாடகைக்குத்தேவை.

தொடர்பு: 0777209446, 0776995009.


## மரண அறிவித்தல்

### திருமதி திலகவதி வாமதேவன்



சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும் உடுவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி திலகவதி வாமதேவன் நேற்று (25.12.2009) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஐயாத்துரை - நீலமணி தம்பதியினரின் புதல்வியும் வாமதேவனின் (ஓய்வுபெற்ற புகையிரத சாரதி) அன்பு மனைவியும் ஞானகலாவதி (கனடா), Dr.சித்திரா, விக்னேஸ்வரன், ரோகினி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும் தனேந்திரன் (கனடா), Dr.கடம்பநாதன், ஜெயராஜ் (பிரான்ஸ்), அருள்நிதி ஆகியோரின் அன்பு மாமியாரும் அமுதினி, அபிநவன், அனந்தன், அனிஷா ஆகியோரின் அம்மம்மாவும் அட்ஷயனின் அப்பம்மாவும் லோகேஸ்வரி, சறோஜினிதேவி, விஜயலக்சுமி, கெங்காதரன் ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.12.2009) சனிக் கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பூவோடை இந்து மயானத்தில் தகனஞ் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

'முருகோதயம்',
அம்பலவாணர் வீதி, முதலாவது ஒழுங்கை, உடுவில். தொ.பே. 021 224 0034

தகவல்: கணவர், பிள்ளைகள்.

(91862)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# சிவாஜிலிங்கத்தின் குற்றச்சாட்டு

'உதயன்', 'சுடர் ஒளி' இரு பத்திரிகைகளும் ஐக்கிய தேசியக் கட்சியின் நிகழ்ச்சி நிரலில் இயங்குகின்றன என்ற தமது புதிய கண்டுபிடிப்பை லண்டனில் போய் வெளியிட்டிருக்கின்றார் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் சுயேச்சை வேட்பாளராகப் போட்டியிடும் எம்.கே.சிவாஜிலிங்கம் எம்பி.

அது மாத்திரமல்ல, மேற்படி இரு பத்திரிகைகளின் நிர்வாகிக்கு நாடாளுமன்ற உறுப்பினராகி, அமைச்சராக வேண்டும் என்ற ஆசை எனவும் -

அதனால் நாடாளுமன்றத் தேர்தலில் ஐ.தே.கட்சி சார்பில் கொழும்பு மாவட்டத்தில் போட்டியிட்டுத் தெரிவாகும் நோக்கத்துடன் அவர் செயற்படுகின்றார் எனவும் - ஆனால் தாம் உயிருடன் இருக்கும்வரை அதற்குத் தாம் இடைஞ்சலாக இருந்து அதைத் தடுப்பார் எனவும் - சாரப்பட, அவர் கருத்து வெளியிட்டிருக் கின்றமை மிக வேடிக்கையானது; கேலித்தனமானது.

'உதயன்', 'சுடர் ஒளி' நாளிதழ்களின் தோற்றமும், போக்கும், செயல்நோக்கும், இலக்கும் அறியாதவர் அல்லர் சிவாஜிலிங்கம். அந்த நன்நோக்கின் பயன் மீது சவாரி செய்தே இன்று அவர் மக்கள் பணி விடுத்து ஆண்டனுபவிக்கும் இந்த நாடாளுமன்றப் பதவியைப் பெற்றுக்கொண்டார் என்பதும் அவர் தமது மனச்சாட்சிக்கு மறைக்க முடியாத உண்மை.

ஈழத் தமிழரின் விடுதலைக்கான உரிமைப் போர், அஹிம்சை வழியிலிருந்து ஆயுத வழிக்குத் திரும்பி, புதிய பரிமாணம் கொள்ளத் தொடங்கிய வேளையில் - காலத்தின் கட்டாயம் கருதி - தமிழர் தம் பேரெழுச்சியை உலகுக்கு எடுத்து அறையும் உன்னதப் பொறுப்பின் தேவையை நிறைவு செய்வதற்காக முகிழ்ந்து எழுந்து, சுமார் இருபத்தியைந்து ஆண்டுகள் இடையறாப் பணியில் தன்னை ஈடுபடுத்தி நிற்பவன் 'உதயன்'.

அதேபோன்று, தமிழர் தரப்பு நியாயத்தை, தமிழர் தாயகம் கடந்து இலங்கைத் தீவின் எல்லாப் பகுதிகளிலும் தேசிய ரீதியிலும், அதனைத் தாண்டி சர்வதேச ரீதியிலும் வலியுறுத்தி வெளிப்படுத் தச் செய்யவேண்டிய வரலாற்றுக் கட்டாயம் எழுந்தபோது அதனைத் தன் தோள்மீது சுமந்து முன்னெடுப்பதற்காக ஒன்பது ஆண்டுகளுக்கு முன் கொழும்பில் இருந்து பிரகாசிக்கத் தொடங்கியது 'சுடர் ஒளி'.

'உதயன்', 'சுடர் ஒளி' இதழ்களின் உயிர்ப்பின் நோக்கமும், இயக்கத்தின் வீச்சும், செயற்பாட்டின் தாற்பரியமும், இலக்கு மீதான குறியும் உயர்ந்தவை; தெளிவானவை; மாற்றத்துக்கே இடமில்லாதவை.

தமது தோற்றம் முதலே அவை அதில் தெளிவாகவும், உறுதியாகவும், தடுமாற்றம் இன்றியும் இருந்து வந்துள்ளன. அதனால்தான் எத்துணை எதிர்ப்பும், அழிவும், நாசமும், அச்சுறுத்தலும், அடக்குமுறையும் வந்த சமயங்களில்கூட அவை அடங்கிப் போய்விடவில்லை. அல்லது நாட்டை விட்டு ஓடிப் போய்விடவில்லை. அல்லது மௌனித்து விடவில்லை.

நேரடி விமானத்தாக்குதல்களை, இலக்கு வைக்கப்பட்ட ஷெல் தாக்குதல்களை, கிரனேட் குண்டு வீச்சுக்களை, ஆயுததாரிகளின் கண்மூடித்தனமான துப்பாக்கிச் சூடுகளை, கோரப் படுகொலைக் கொடூரங்களை, அச்சுறுத்தல் அடாவடித்தனங்களை, 'சீல்' வைப்புகளை, ஆள்கடத்தல்களை, உடைமை அழிவுகளை எல்லாம் கண்டு அஞ்சி, ஓடிவிடாமல் - அதேசமயம், அவற்றுக்குத் தலைகுனிந்து, பணிந்து அடங்கியும் போகாமல் 'உதயன்', 'சுடர் ஒளி' பணியாற்றி வருகின்றமைக்கு பின்புலக் காரணமாக ஒரு நிகழ்ச்சிநிரல் உண்டு என்பது உண்மைதான்.

இந்திய அமைதிப் படையின் ஆக்கிரமிப்பு வேளை என்றாலும் - புலிகளின் கட்டுப்பாட்டுக்கு உட்பட்ட பிரதேசங்களில் செயற்பட்ட காலத்தில் என்றாலும் - இலங்கைப் படைகளின் அதிகாரத்துக்கு உட்பட்ட சமயத்தில் என்றாலும் - ஏனைய ஆயுதக் குழுக்களின் அட்டகாச சந்தர்ப்பங்களில் என்றாலும் - 'உதயன்', 'சுடர்ஒளி' அடங்கி அடிபணிந்து விடாமல் இருந்தமைக்குப் பின்னால் ஒரு நிகழ்ச்சிநிரல் இருந்தது, இருக்கிறது என்பது வாஸ்தவம்தான்.

ஆனால், அது சிவாஜிலிங்கம் தமது அரசியல் உள்நோக்கங்களை மனதில் வைத்துக்கொண்டு இப்போது குற்றம் சுமத்துகின்ற மாதிரி ஐ.தே.கட்சியின் நிகழ்ச்சி நிரல் அல்ல. அல்லது, தமது வேட்புமனுத்தாக்கல் மூலம் யாருடைய வெற்றியை உறுதிப்படுத்துவதற்கு சிவாஜிலிங்கம் துடியாய்த் துடிக்கின்றாரோ அவருடைய - ஆளும் தரப்பு வேட்பாளரான - ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிற்கு ஆதரவான நிகழ்ச்சி நிரலும் அல்ல.

அது - இலங்கைத் தமிழ் பேசும் மக்களின் நலன் என்ற நிகழ்ச்சி நிரல்தான்.

இந்த நிகழ்ச்சி நிரலில் இருந்து யாருடைய அச்சுறுத்தல் காரணமாகவும் - யாராவது வழங்கும் சலுகைகளைக் கைமாறாகப் பெற்றுக்கொள்வதற்காகவும் - விலகிக் கொள்வதற்கு 'உதயன்', 'சுடர் ஒளி' இணங்கியது கிடையாது: இனியும் இணங்க மாட்டாது.

இலங்கையில் மட்டுமல்லாது, புலம்பெயர் தேசங்களிலும் வாழ்கின்ற அனைத்துத் தமிழர்களுக்கும் தெரிந்த இந்த சாசுவத உண்மையை சிவாஜிலிங்கத்துக்கு ஒரு தடவை நினைப்பூட்ட விரும்புகிறோம்.

தமிழ்ப் பொது வேட்பாளர் என்ற கோஷத்தை - தான் சார்ந்திருந்த தமிழ்க் கூட்டமைப்பின் ஐக்கியத்தை உடைத்து, தாம் முதல்வர் என்ற பெயரை அலங்கரிக்கும் ரெலோ அமைப்பைப் பிளக்க வைத்து, அந்த இழி நிலையில் இருந்தபடி முன்னெடுக்க முயலும் சிவாஜிலிங்கம், அதன் பெறுபேறாக எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் யாருடைய வெற்றியை உறுதிப்படுத்துவதற்கு இப்படித் தலையால் கிடங்கு கிண்டுகின்றார், அவரின் நிகழ்ச்சி நிரல் யாருடையது என்பவை எல்லாம் உலகறிந்த பரகசியம். அந்த நிகழ்ச்சி நிரலை முன்னெடுப்பதற்காக அவரும் அவர் சார்ந்தோரும் 'மஹிந்த ராஜபக்ஷ அண்ட் பிறதர்ஸ்' கம்பனியுடன் கூட்டு உடன்பாடு வைத்துப் பெற்றுக்கொண்டவை, வாங்கிய உறுதிமொழிகள், விட்டுக்கொடுப்புகள் போன்றவை இன்று மெல்ல மெல்ல மக்கள் உய்த்துணர்ந்து புரிந்துகொள்ளும் அளவுக்குக் கசியத் தொடங்கிவிட்டன என்பதுதான் இன்றைய யதார்த்தமாகும்.

எம்.பி. பதவி என்ற குதிரையோட்டப் போட்டியில் 'உதயன்', 'சுடர் ஒளி' நாளிதழ்களின் பிரதிநிதிகளும் வந்துவிடுவார்களோ என அஞ்சி இன்று ஏதோ பிதற்றுகின்றார் போலும் சிவாஜிலிங்கம்.

அப்படி ஓர் ஆசை 'உதயன்', 'சுடர்ஒளி' நிர்வாகத்துக்கு இருந்திருக்குமானால் - சிவாஜிலிங்கம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் ஒட்டி எம்.பியாவதற்கு முன்னரே அவர்களால் வந்திருக்க முடியும். அத்தகைய குறுகிய - பதவி ஆசை மிக்க - எண்ணமேதும் 'உதயன்', 'சுடர்ஒளி' நிர்வாகத்தினருக்கோ, ஆசிரியபீட உயர் உறுப்பினருக்கோ அடியோடு இல்லை என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் உறுதியோடு கூறிவைக்க விரும்புகிறோம்.

சிவாஜிலிங்கம் அவர்களே!

அடக்குமுறையின் குரூர - கோர - அடாவடித்தனங்களுக்கு தம் உயிரையே கொடுத்து, மக்கள் பணிக்காகத் தம்மை அர்ப்பணித்த நமது ஊடகத் தோழர்களின் இலட்சிய வழியில் - ஈகப் பாதையில் - பயணிக்கும் ஓர் ஊடகத்துக்கு உங்கள் அரசியல் கோமாளித்தனக் கணிப்பில் தவறான நாமம் கற்பிப்பது இன்றைய உங்களின் அரசியல் அணி சாரலுக்கு உதவக்கூடும். ஆனால், அந்த உயர்ந்த பணிக்குத் தவறான சாயம்பூசும் உங்களின் பண்பியல்பைத் தமிழினம் இலகுவாக சகித்துக்கொள்ளாது. தகுந்த பதில் மக்களிடமிருந்து கிட்டும். காத்திருங்கள்!

# சிவாஜிலிங்கத்தின் கூற்று அபத்தமானது; விளங்கிக்கொள்ள முடியாததும் ஆகும்

இன்றைய(25.12.2009) உதயன் நாளிதழில் ''உதயன்'', ''சுடர் ஒளி'' இரண்டு பத் திரிகைகளுமே ஐ.தே.க நிகழ்ச்சி நிர லில் இயங்குகின்றனவாம் என்ற தலைப்புடன் கீழ் வெளியிடப்பட்டிருக்கும் செய்தி மிகவும் கவலை தருவதாக உள்ளது. தமிழ்த்தேசியத்திற்காக குடாநாட்டுப் பத்திரிகைகள் சந்தித்து வந்த கொடுமைகள் ஏராளம். அதிலும் ''உதயன்'' பாரிய அழிவுகள், தாக்குதல்கள், படுகொலைகள் எனப் பல கொடூரங்களைச் சந்தித்த ஒரு தமிழ்த் தினசரி. சிவாஜிலிங்கம் அவர்களால் குற்றஞ்சாட்டப்படும் பத்திரிகை ஆசிரியர் ந.வித்தியாதரனையும், நிர்வாகப் பணிப்பாளர் ஈ.சரவணபவனையும் உதயன் பத்திரிகை ஆரம்பித்த காலத்தில் இருந்தே அறிந்தவன் என்ற முறையில் அவர்கள் ஐ.தே.கவின் நிகழ்ச்சி நிரலில் செயற்படுவதில்லை என் பதை உறுதியாகக் கூறமுடியும்.

ஐ.தே.கவை காரசாரமாக பலநூறு முறை இரண்டு பத்திரிகைகளுமே விமர்சித்திருக்கின்றன. அது மட்டுமின்றி ஐ.தே.கவின் காலத்திலேயே பல தாக்குதல்களை உதயன் சந்தித்திருக்கிறது.

பத்திரிகையாளர் என்பதற்காக அவர்கள் அரசியலுக்கு வரக்கூடாது என்ற நியதி எதுவும் இல்லை. ஏனைய பிரஜைகளுக்கு உள்ள ஜனநாயக உரிமை இவர்களுக்கும் உண்டு. அதற்காக சரவணபவன் அவர்கள் தேர்தலில் பங்குபற்றப் போகின்றார் என்று கூறுவது மிகவும் பொருத்த மற்றது. அதிலும் கொழும்பு மாவட்டத்தில் களமிறங்கப் போகின்றார் என்று கூறுவது அபத்தமானது.

அரசியலில் யாழ்ப்பாணத்தவர் ஒருவர் கொழும்பில் தேர்தலில் போட்டியிட்டு வெற்றியடைய விதிவிலக்காக பார்க்கப்படும் அமரர் மகேஸ்வரன் போன்றவர் அல்லர் சரவணபவன். பத்திரிகைத்துறை சார்ந்தவர் என்பதால் தன்வலி, மாற்றான்வலி, துணை வலி எல்லாம் தெரியாதவர் அல்லர் சரவணபவன்.

அப்படித்தான் ஒருவேளை தேர்தலில் சரவணபவன் போட்டியிட்டாலும் - நிச்சயமாக அது நடைபெறாது - அதற்குத் தான் உயிருடன் இருக்கும் வரை இடைஞ்சலாக இருப்பார் என சிவாஜிலிங்கம் கூறியிருப்பது விளங்கிக்கொள்ளமுடியாதது. தேர்தலில் வெல்வதும் தோற்பதும், மக்கள் ஆதரவையும், வாக்களிப்பையும் பொறுத்தது.

கொழும்பில் வாக்குரிமை கூட இல்லாத சிவாஜிலிங்கம் தமது உயிரையே பணயம் வைப்பதாகக் கூறுவது புரிந்து கொள்ளக்கூடியது அல்ல. இந்த நாட்டில் எத்தனை பேர் யார் யாரது நிகழ்ச்சி நிரலில் செயற்படுகிறார்கள் என்பதை மக்கள் தெரிந்து கொண்டு தான் இருக்கிறார்கள். உதயனையும், வித்தியாதரனையும், சரவணபவனையும் யாழ்ப்பாணத்து மக்களுக்கு நன்றாகவே தெரியும். ஆகவே இப்படியான கூற்றுக்கள் பற்றி எவரும் அலட்டிக் கொள்ளத் தேவையில்லை என்றே கருதுகின்றேன்.

சீ.வி.கே.சிவஞானம்,
நல்லூர்.

## மக்கள் மன்றம்

# வீண்பழி சுமத்துவதும் எச்சரிக்கைத் தொனியில் கருத்துச் சொல்வதும் அரசியல் அநாகரிகமானது

''உதயன்'', ''சுடர்ஒளி'' பத்திரிகை அரசியல் பக்கச்சார்புடையவை என திரு.எம்.கே.சிவாஜிலிங்கம் (நா.உ) அவர்களால் லண்டனில் வெளியிடப்பட்டிருக்கும் கருத்துக்கள் மனக் கவலையையும் வேதனையையும் தருகின்றன.

முக்கியமாக இன்றைய ஜனாதிபதித் தேர்தல் காலத்தில் தமிழ் பேசும் மக்கள் வேற்றுமையில் ஒற்றுமையைப் பேணிக்காத்து, அரசியலுக்கப்பால் நின்று, தாங்கள் சுயமாகவும், சுதந்திரமாகவும், கௌரவமாகவும் வாழ்வதற்கு குரல் கொடுக்க வேண்டிய நேரத்தில், நாம் தொலை நோக்குடன் விரும்பியோ, விரும்பாமலோ மௌனம் சாதிப்ப தால் தமிழ் மக்கள் நன்மையடையார். 'நான்' என்றதைத் தவிர்த்து நாங்கள் எல்லோரும் தமிழ் மக்கள் என்ற கருத்தைக் கொண்டு இயங்குவோமாயின் நற்பலன் கிடைக்கும் என்பதில் மன உறுதியுடன் இருக்கலாம்.

'உதயன்', 'சுடர் ஒளி' பத்திரிகைகள் ஆரம்பகாலத்தில் இருந்து தமிழ் மக்களுக்கு எதிராக நடத்தப்படும் அநீதிகளைத் துணிவுடன் உலகரங்கிற்கு வெளிக்கொண்டு வருவதன் காரணமாக பல எதிர்ப்புகளையும், நஷ்டங்களையும் அடைந்துள்ளன. மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழுக்கும், அதன் நிர்வாக இயக்குநர் ஈ.சரவணபவன் மீதும் வீண்பழி சுமத்துவதும், எச்சரிக்கை செய்யும் தொனியில் கருத்துச் சொல்வதும் அரசியல் அநாகரீகமானது. இத்தகைய நடத்தைகள், அபகீர்த்தி ஏற்படுத்துவது கவலைக்குரியது; தவிர்க்கப்பட வேண்டியன.

சு. பரமநாதன், கொக்குவில்.

# உண்மையற்ற கருத்துக்களை வெளியிட்டால் மக்கள் மதிப்பை இழக்க நேரிடும்

மக்கள் சேவைக்கென முன்வந்தவர்கள் பொறுப்பற்ற கருத்துகளை வெளியிடும் போது கவலையாக உள்ளது. 25 ஆம் திகதி உதயன் பத்திரிகையில் வெளிவந்த செய்தியைப் பார்க்கின்ற போது எமது கருத்தையும் தெரிவிக்கத் தோன்றுகின்றது. இரு பத்திரிகைகளையும் நடத்திக் கொண்டிருக்கும் நிறுவனத்திற்கு தலைமை காத்துக்கொண்டிருக்கும் உரிமையாளர், நிர்வாக இயக்குநர் ஈ.சரவணபவனை விமர்சனம் செய்து பொறுப்பற்ற கருத்துக்கள் வெளிவந்துள்ளமை கண்டிக்கப்பட வேண்டியதாகும். கருத்துக்களை வெளியிடும் போது பொறுப்பில்லாது நடந்து கொள்வது பண்பல்ல. பண்புடன் கருத்தை வெளியிட்டுக் கொள்வதுடன் ஒவ்வொருவரும் பொறுப்புடன் நடந்துகொள்ள வேண்டும். அதை விட்டுவிட்டு பொறுப்பில்லாத கருத்துக்களை எப்படியும் சொல்லலாம் என்று செயற்பட்டிருக்கும் தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவம் செய்யும் நாடாளுமன்ற உறுப்பினர் கே.சிவாஜிலிங்கம் பண்பாடற்ற முறையில் செயற்பட்டிருப்பது ஏற்புடையதல்ல; கண்டிக்கத்தக்கது. இது குறித்து நாம் கவலை அடைகின்றோம். உண்மையான கருத்துக்களை வெளியிட்டு தங்கள் நன்மதிப்பினை மக்கள் மத்தியில் இழந்து விடாமல் இருக்க சம்பந்தப்பட்டவரைக் கேட்டுக்கொள்வதோடு இனிவரும் காலங்களில் நியாயத்துடன் சரியான கருத்துக்களை வெளியிடுமாறு வலியுறுத்துகிறோம். இதுவே மக்களுக்கு வழிகாட்டும்.

அ.கி. சிவசுப்பிரமணியம்,
கொழும்புத்துறை வீதி,
சுண்டிக்குளி.

# கூட்டமைப்பினர் விக்கிரமபாகுவுடனும் பேச்சு வார்த்தை நடத்தினால் என்ன?

## வெளிநாட்டுத் தமிழர்கள் எழுப்பும் கேள்வி

யாழ்ப்பாணம்,டிசெ.26

ஜனாதிபதி தேர்தல் போட்டியில் களமிறங்கியுள்ள இடதுசாரி ஐக்கிய முன்னணியின் வேட்பாளர் டாக்டர் விக்கிரமபாகு கருணாரத்னவை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆதரிக்க முன்வந்தால் என்ன?

வெளிநாட்டில் இடம்பெயர்ந்து வாழும் மக்களில் ஒரு சாரார் இப்படியும் குரல் எழுப்பியுள்ளனர்.

விக்கிரமபாகு கருணாரத்ன சிறுபான்மையினரின் உரிமைக்காகத் தயக்கமின்றியும் பின்வாங்காமலும் போராடி வந்துள்ள ஒருவர். தமது உயிரைப் பணயமாக முன்வைத்து அவரும் அவரது சகாக்களும் நியாயமாக போராடி வந்துள்ளார்கள்.

இவ்வாறு இக்கருத்தை முன்வைத்துள்ள வெளிநாட்டில் வாழும் தமிழர் சார்பிலான குழுவினர் தெரிவிக்கின்றனர்.

வெளிநாட்டில் வாழும் தமிழர்களின் ஒரு பிரிவினரின் சார்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனுக்கு ஒன்ராரியோ - கனடாவில் வாழும் கரிகாலன், எஸ்.நவரட்ணம் என்பவர் எழுதியுள்ள நீண்ட கடிதத்தில் இக்கருத்தைத் தெரிவித்துள்ளார்.

டாக்டர் விக்கிரமபாகு கருணாரத்ன பிறப்பினால் ஒரு கலப்படமற்ற சிங்கள பௌத்தர். இவர் தமிழர்களின் பிரதேசங்கள் சிங்கள மயமாக்கப்படுவதை எதிர்த்தும் கூட போராடி இருக்கின்றார். போட்டியிடும் மூன்று பிரதான வேட்பாளர்களில் இன்று அதியுயர் பதவியை வகிப்பதற்கான அரசியல் அடிப்படை அறிவு,புலமைத்துவம் மற்றும் நிபுணத்துவத் தன்மை இவரைத் தவிர வேறு எவருக்கு இருக்கின்றது எனக் கேள்வியெழுப்பியுள்ளார் கரிகாலன், எஸ்.நவரட்ணம். நீங்கள் (சம்பந்தன்) மஹிந்தவோடும் ரணி லோடும் சந்திப்புக்கள் நடத்தி இருப் பதாக அறிகின்றோம்.

விக்கிரமபாகு கருணாரத்னவுக்கும் இதே விதமான கௌரவத்தை அளித்தால் என்ன?என்றும் குறிப்பிட்டுள்ளார். (ப)

## நாளை

| | |
|---|---|
| மார்கழி 12 | 27.12.2009 |
| | ஞாயிற்றுக்கிழமை |
| திதி: | தசமி |
| | மு.ப.08.24 வரை |
| நட்சத்திரம்: | அச்சுவினி |
| | மதியம் 12.01 வரை |
| சுபநேரம்: | 09.27-10.57 வரை |
| ராகுகாலம்: | 04.57-06.27 வரை |

# சான்றுப் பொருள்கள் இன்று ஏலத்தில்

வடமராட்சி, டிசெ.26

பருத்தித்துறை நீதிமன்றத்தில் இடம்பெற்ற வழக்குகளின் போது பறிமுதல் செய்யப்பட்ட இதுவரை உரிமை கோரப்படாத சான்றுப் பொருள்கள் இன்று சனிக்கிழமை பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப் படவுள்ளன. (ஒ- 236)

# சிறுவர் கழகங்களுக்கு விளையாட்டு உபகரணங்கள்

நவாலி, டிசெ.26

'யுனிசெவ்' நிறுவனம் சண்டிலிப்பாய்ப் பிரதேச செயலர் பிரிவிலுள்ள வினைத்திறமையுடன் செயற்படும் 21 சிறுவர் கழகங்களுக்குப் பெறுமதி மிக்க விளையாட்டு உபகரணங்களை வழங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஒ - 100)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்.துரையப்பா அரங்கில் நாளை நத்தார் கரோல் கீத நிகழ்வு

யாழ்ப்பாணம், டிசெ. 26

நத்தார் தினத்தை ஒட்டி கரோல் கீத நிகழ்வுகள் நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 6 மணி முதல் 9 மணிவரை யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் இடம்பெறவுள்ளன.

51 ஆவது படையணித் தலைமையகத்தின் கீழ் இயங்கும் அனைத்துப் படைப் பிரிவுகளின் ஏற்பாட்டில் இந்த விசேட நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வுகளில் மதத்தலைவர்கள், கலைஞர்கள், பாடசாலை மாணவர்கள், கிறிஸ்தவ மக்கள் பங்கேற்கவுள்ளனர். இறுதியில் வாணவேடிக்கையும் இடம்பெறும்.

முப்பது வருட போரின் பின்னர் முதல் தடவையாக இடம்பெறும் நிகழ்வு இது என பலாலி படைகளின் தலைமையகம் தெரிவித்துள்ளது. (ஒ-1)

# கொடிகாமம் ப.நோ. கூ. சங்கம் தேசிய ரீதியில் சிறந்த சங்கமாக தெரிவு

## இன்று பணியாளர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு

தென்மராட்சி கிழக்கு, டிசெ.26

கொடிகாமம் தென்மராட்சி கிழக்கு ப.நோ.கூ. சங்கம், தேசிய ரீதியில் சிறந்த சங்கமாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளது. இதனை முன்னிட்டு பணியாளர்களை கௌரவிக்கும் நிகழ்வு இன்று சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு சங்கப் பணிமனையில் நடைபெறவுள்ளது.

சங்கத்தின் தலைவர் வே.விநாயகமூர்த்தி தலைமையில் இடம்பெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். கூட்டுறவு உதவி ஆணையாளர் பொ. சிவலிங்கமும், சிறப்பு விருந்தினர்களாக தென்மராட்சி பிரதேச செயலர், செ.சிறிநிவாசன், ஈ.பி.டி. பியின் தென்மராட்சி அமைப்பாளர் சூ.அலெக்சாண்டர், யாழ் மாவட்ட உதவி தொழில் ஆணையாளர் க.கனகேஸ்வரன், சாவகச்சேரி பிரதேச சபைச் செயலாளர் வே.சிவராஜலிங்கம், தென்மராட்சி கல்விக்கோட்ட அதிபர் கு. சிவானந்தம், சாவகச்சேரி மக்கள் வங்கி முகாமையாளர் க. சண்முகலிங்கம், கொடிகாமம் அஞ்சல் அதிபர் திருமதி யோ. வல்லிபுரநாதன் ஆகியோரும் கலந்து கொள்வர். தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவனத்தினால் நடத்தப்பட்ட போட்டியில் தேசிய ரீதியில் சிறந்த கூட்டுறவுச் சங்கமாகத் தெரிவு செய்யப்பட்டது தொடர்பான உரிய சான்றிதழ் அண்மையில் மகிந்த ராஜபக்ஷவினால் ஜனாதிபதி செயலகத்தில் வைத்து வழங்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. (ஒ - 122)

# சுனாமியில் உயிர் நீத்தவர்கள் நினைவாக உடுத்துறை சமாதியில் வழிபாட்டு நிகழ்வு

## அமைச்சர் டக்ளஸ் பொதுச் சுடர் ஏற்றுவார்

யாழ்ப்பாணம்,டிசெ.26

சுனாமியில் உயிர் நீத்த உறவுகளின் நினைவாக உடுத்துறையில் அமைந்துள்ள சமாதியில் இன்று நினைவு வழிபாட்டு நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன

காலை 9.05 மணிக்கு பொதுச் சுடரை சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஏற்றுவார்.

அதைத் தொடர்ந்து உயிர் நீத்தவர்களின் உறவுகள் சமாதியில் வணக்கம் செலுத்துவதைத் தொடர்ந்து அஞ்சலி உரைகள் இடம்பெறும்.

அமைச்சர் டக்ளஸ் பிரதான உரை நிகழ்த்துவார்.

இந்த நிகழ்வில் பங்கு பற்ற விசேட பஸ் சேவையை ஈ.பி.டி.பியினர் ஏற்பாடு செய்தள்ளனர்.

இதேவேளை ஆழிப்பேரலை அனர்த்தத்தினால் உயிரிழந்தவர்களின் ஞாபகார்த்த திருப்பலிப் பூசை ஆராதனை தும்பளை லூர்த்து மாதா ஆலயத்தில் இன்று சனிக்கிழமை காலை 6.15 மணிக்கு நடைபெறவுள்ளது. திருப்பலிப் பூசையை பங்குத் தந்தை ஜே.எச் றெக்னோ ஒப்புக்கொடுக்கவுள்ளார்.

புலோலி சூசையப்பர் ஆலயத்திலும் காலை 7.30 மணிக்கு சுனாமியால் உயிரிழந்தவர்களின் ஞாபகார்த்த திருப்பலிப் பூசை ஆராதனை நடைபெறவுள்ளது.

பருத்தித்துறை மெதடிஸ் திருச்சபையினால் உயிரிழந்தவர்களின் ஞாபகார்த்த வழிபாடு பிற்பகல் 3 மணிக்கு தும்பளை நேசகம் வளாகத்தில், பருத்தித்துறை கட்டைவேலி சேகர முகாமைக்குரு அருட்திரு என். அருள்நாதன் தலைமையில் நடைபெறும். (ஒ-1-7-190)

## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணில் 07.10.1933

விண்ணில் 26.12.2007

அமரர் அன்னலட்சுமி கணபதிப்பிள்ளை

உலகின் கண்களுக்கு உருவத்தை மறைத்து
எம் உள்ளங்களில் உயர்ந்து நின்றாய்
அன்பின் திரு உருவே
உந்தன் பிரிவின் வலியை தாங்க முடியவில்லை
உன் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கின்றோம்.

நாவலர்மடம், கரவெட்டி. (சி/583505) குடும்பத்தினர்.

# பருத்தித்துறையில் இன்று பிற்பகல் சுனாமிக்கான பாசாங்கு எச்சரிக்கை

## மக்களே அச்சம், குழப்பம் அடையாதீர்கள்!

பருத்தித்துறை பிரதேசத்தில் உள்ள சுனாமி முன்னெச்சரிக்கைக் கோபுரம் அமைந்துள்ள பகுதியில் இன்று பிற்பகல் 3 மணிக்கு சுனாமிக்கான பாசாங்கு எச்சரிக்கை ஒத்திகை நிகழ்வு இடம்பெறவுள்ளது. இதனால் அந்தப் பிரதேச மக்கள் அச்சமோ குழப்பமடையவோ தேவையில்லை.

யாழ். அரச அதிபர் கே.கணேஸ் மேற்கண்டவாறு அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக அரச அதிபர் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

கடல்கோள் ஏற்பட்டு ஐந்தாவது வருட நினைவாக இன்று பிற்பகல் 3 மணிக்கு பருத்தித்துறை பிரதேசத்திலுள்ள,சுனாமி முன்னெச்சரிக்கை கோபுரம் அமைந்துள்ள ஜே/401 கிராம உத்தியோகத்தர் பிரிவில் அனர்த்த முகாமைத்துவப் பிரிவினரால் சுனாமிக்கான பாசாங்கு எச்சரிக்கை மற்றும் போலி நடிப்புப் பயிற்சி செயற்பாடு மேற்கொள்ளப்படும்.

இந்தப் பயிற்சி சம்பந்தமாக பொதுமக்கள் அமைதியாக இருக்குமாறும் இது ஒரு ஒத்திகை செயற்பாடு என்றபடியால் ஒருவரும் அச்சமோ குழப்பமடையவோ தேவையில்லை என்றும் பொதுமக்கள் அறிவுறுத்தப்படுகின்றார்கள். என்றுள்ளது. (ஒ-01)

## விற்பனைக்கு

OLYMPIA தட்டச்சு இயந்திரம் ஆங்கில பெரிய எழுத்துக்கள் உடையது. உடன் விற்பனைக்கு.

தொடர்பு: 0777049364

## மரண அறிவித்தல்

### திருமதி வேலுப்பிள்ளை தங்கம்மா



சாமியன் அரசடி, கரவெட்டி மத்தியை வசிப்பிடமாகக் கொண்ட மரக்காலை வேலுப்பிள்ளையின் மனைவி தங்கம்மா 23.12.2009 மார்கழித் திருவெம்பாவை அன்று இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் அம்பிகைபாகன், அம்பலவாணன் ஆகியோரின் அன்புத் தாயும் சஞ்ஜீவ், பாரத், கார்த்திகா, கீர்த்தனன், துவாரகா, தனுஷன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் அமரர் கந்தசாமி, பசுபதி (கனடா), சின்னத்தம்பி, ஐயாத்துரை (கனடா), அமரர் இராமலிங்கம், கந்தையா ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (27.12.2009) ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சோனப்பு மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கரவெட்டி மத்தி, கரவெட்டி. (91006) தகவல்: பொ.கந்தையா (சகோதரர்).

# வரவு செலவுத்திட்டம் பொதுமக்கள் பார்வைக்கு

யாழ்ப்பாணம்,டிசெ.26.

வலிகாமம் தென்மேற்குப் பிரதேச சபையின் 2010 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் பொதுமக்களின் பார்வைக்காக பிரதேச சபையின் தலைமையலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ளது. அலுவலக நேரத்தில் இதனைப் பொது மக்கள் பார்வையிடலாம் என வலி.தென்மேற்குப் பிரதேசசபைச் செயலாளர் தெரிவித்துள்ளார். (04-07-100)

# வதிரியில் நாளை நத்தார் விழா

நெல்லியடி,டிசெ.26.

வடமராட்சி செவிப்புலனற்றோர் நிறுவனத்தின் வருடாந்த நத்தார் விழா நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு கரவெட்டி வதிரியில் உள்ள நிறுவன மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இந்த விழாவில் கலை நிகழ்ச்சிகளுடன் சிறுவர்களுக்கு பரிசில்களும் வழங்கப்படும். (ஒ-01)


# கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், டிசெ.26.

யாழ். கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்தின் அனைத்து ஆசிரியர்களையும் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு பாடசாலையில் நடைபெறவுள்ள விசேட கலந்துரையாடலில் தவறாது கலந்துகொள்ளுமாறு கல்லூரி அதிபர் கேட்டுள்ளார். (ஒ-01)

## 5ஆம் ஆண்டு நினைவஞ்சலி

### ஆழிப்பேரலை அனர்த்தத்தின்போது




சி.கீர்த்தனா 29.07.1999



சி.நகைஜீதா 09.05.1983



ச.இராசபாக்கியம் 12.07.1939



ந.நாகசோதி 14.02.1964



தி.நிரஞ்சனா 16.12.1995 (வர்வடமிராட்சி இராமநாதன் கல்லூரி மாணவியர்)

எம் உதிரத்து உறவுகளே!
எம் குலதெய்வங்கள் எம்மை விட்டு
எங்கே சென்றீர்கள்
நீங்கள் ஒன்றாக கூடிமகிழ்ந்த
இடங்களை இன்று எம்மால்
காணமுடியாது தத்தளிக்கின்றோம்!
எம் பாசக்கிளிகளே!
கடலன்னை செய்த தாண்டவத்தால்
எம்மை விட்டுத் தவறினீர்கள்

எம் உதிரத்து உறவுகளே!
பூவான பேச்சும்
புன்னகை தவழும் சிரிப்பொலியும்
எம் கண்முன்னே நிஜமான நிழலாக
உலா வருகின்றீர்கள்
உங்கள் பூமுகம் தேடுகின்றோம்
இவ் இனிய உம் நினைவு நாளில்
கடலில் அலை கடலாக வந்து
உம் முகம் காட்டுவீரா?

நிரந்தர முகவரி: உடுத்துறை வடக்கு, தாளையடி.
தற்காலிக முகவரி: மணியம் பதி, அல்வையூர் பதி, துன்னாலை. (91008) குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்கள்

### நாகன் மாணிக்கம்

அச்சுவேலி வடக்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட நாகன் மாணிக்கம் அவர்கள் வெள்ளிக்கிழமை (25.12.2009) இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற அன்னலட்சுமியின் பாசமிகு கணவரும், தங்கவேல் (பிரதம லிகிதர், பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், அச்சுவேலி), மகாலட்சுமி (பிரான்ஸ்), காலஞ்சென்ற கணேசவேல் மற்றும் நாகலட்சுமி, வரதலட்சுமி, இரத்தினவேல், ரூபலட்சுமி, சோதிலட்சுமி, மாணிக்கராசா ஆகியோரின் பாசமிகு தந்தையும், கந்தசாமி (பிரான்ஸ்), சறோசாதேவி, மாசிலாமணி, ஜெயராணி (கொழும்பு), தங்கவேலு (ஜேர்மனி), இளங்கோ ஆகியோரின் அன்பு மாமனாரும், துஸ்யந்தன், விபுசிதா (பிரான்ஸ்), கஸ்தூரி, பிரணவன், லக்ஷன், மெலினா, மெலானி, தனுஜன், மயூரா, ஆக்த்தியா ஆகியோரின் பாசமிகு பேரனும் காலஞ்சென்ற சின்னம்மா மற்றும் கண்மணி, சின்னையா (ஓய்வுபெற்ற கணக்காளர், இ.போ.ச.) ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்றவர்களான முத்து, சின்னராசா, பேபிசறோசா ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இல்லத்தில் இன்று (26.12.2009) சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு இறுதிக்கிரியைகள் நடைபெற்று, பூதவுடல் அச்சுவேலி வல்லை இந்துமயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அச்சுவேலி வடக்கு. தொ.பே.- 0217911951

தகவல்: மா. தங்கவேல் (மகன்).

### சின்னையா கனகசபை (செல்லத்துரை சாஸ்திரியார்)



பருத்தித்துறை, தும்பளையை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னையா கனகசபை (சாஸ்திரியார்) நேற்று (25.12.2009) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற திருமதி கனகசபை தங்கம்மாவின் அன்புக் கணவரும், திருமதி இராசதுரை முத்துமலர், காலஞ்சென்ற சிசுபாலசுந்தரம் மற்றும் ஜெயசுந்தரம், திருமதி ஜெ.இன்பமலர், காலஞ்சென்ற யோகமலர் மற்றும் பாலசுந்தரம் (பருத்தித்துறை .ப.நோ.கூ.சங்கம்), திருமதி குமாரலிங்கம் தேவமலர், ஞானசுந்தரம் (Swiss) ஆகியோரின் பாசமிகு தந்தையாரும், இராசதுரை, காலஞ்சென்ற பரமேஸ்வரி மற்றும் இந்திரா, ஜெகதீஸ்வரன், கிருஸ்ணலீலா, குமாரலிங்கம் (லொறிஉரிமையாளர்),சாந்தி ஆகியோரின் அன்பு மாமனாரும், ராஜ்ஸ்ரீ (லண்டன்), ஸ்ரீரஞ்சனி (திட்டமிடல் நிதி உதவியாளர், யா/ஹாட்லிக் கல்லூரி), மகிந்தராஜ் (L.I.C, Colombo), காந்தராஜ் (Ceylinco), மைதிலி (பொறியியலாளர்), மயூரன் (அஞ்சல் அலுவலர்), மேகலா (லண்டன்), ஜங்கரன் (லண்டன்), ஞுதர்சன்(Swiss), கௌடில்யன் (Swiss), கௌசல்யன் (Swiss) ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தும்பளை வீதி, தும்பளை, பருத்தித்துறை. 021 226 3958 (சி/ 563506)

தகவல்: குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org













5 வருடங்களுக்கு முன் இதே நாளில்.....

# ஆழிப்பேரலை அனர்த்தங்களைத் தடுக்க தீர்மானங்கள் எடுத்தால் மட்டும் போதுமா?

## வீடமைப்புத் திட்டங்களும் பூர்த்தியாகாத நிலையில்

சுனாமி, புயல், கடும் காற்று, சூறாவளி, கடற்பெருக்கு போன்ற கடல் வழியாக வரும் அனர்த்தங்களை முன்கூட்டியே தடுப்பதற்கான நடவடிக்கைகள் வடமராட்சி கரையோரப் பிரதேசத்தில் விரைவாக மேற்கொள்ளப்பட வேண்டும்.

கடந்த 5 ஆண்டுகளுக்கு முன்னர் ஆழிப்பேரலை அனர்ததம் ஏற்பட்ட போது யாழ். மாவட்டத்தில் அதிக எண்ணிக்கையான உயிர்கள், உடைமைகள், சொத்துக்கள், வளங்கள் என்பனவற்றை நூறு வீதம் இழந்த பிரதேசம் வடமராட்சி வடக்கு (பருத்தித்துறை), வடமராட்சி கிழக்கு (மருதங்கேணி) பிரதேசங்களாகும்.

இப்பிரதேசங்களில் சுனாமியால் காவு கொள்ளப்பட்டோரின் எண்ணிக்கை சுமார் ஆயிரத்து 65 பேராகும். இவர்களில் 2 பேர் மாதகல் பகுதியைச் சேர்ந்தவர்கள். 18 பேர் வடமராட்சி வடக்கு (பருத்தித்துறை) பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள். ஏனைய அனைவரும் மணற்காடு தொடக்கம் சுண்டிக்குளம் வரையான வடமராட்சி கிழக்கு (மருதங்கேணி) பிரதேசத்தைச் சேர்ந்தவர்களாவர்.

ஆழிப்பேரலை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டோர்களுக்கு அரச சார்பற்ற நிறுவனங்களால் வீட்டுத்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன. இவ் வீட்டுத்திட்டங்களில் வடமராட்சி வடக்கு (பருத்தித்துறை) பிரதேசத்தில் 95 வீதமான வீட்டுத் திட்டங்கள் பூர்த்தி செய்யப்பட்டு பயனாளிகளிடம் கையளிக்கப்பட்டு, அவர்கள் அவ்வீடுகளில் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். ஏனைய பூர்த்தியடையாத 5 வீதமான வீட்டுத்திட்டங்களுக்கான கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

எனினும் இது குறித்துப் பருத்தித்துறை பிரதேச செயலகத்தில் உத்தியோக பூர்வமான தகவல்களைப் பெற முயற்சித்தபோதும், அது கைகூடவில்லை.

இதற்கு எதிர்மாறாக வடமராட்சி கிழக்குப் பிரதேசத்தில் ஆழிப்பேரலை பாதிப்பு வீட்டுத்திட்டம் 95 வீதம் நிறைவேறவில்லை. இப்பிரதேசத்தில் குடத்தனை, அம்பன் ஆகிய இடங்களில் மாத்திரம் குறிப்பிட்ட எண்ணிக்கை கொண்ட வீடுகள் கட்டப்பட்டு பயனாளிகளிடம் கையளிக்கப்பட்டுள்ளன. சுனாமிக்குப் பின்னரான யுத்தம், இடப்பெயர்வு காரணமாக இவை நிறைவேறவில்லை. எதிர்காலத்திலாவது இவ்வீட்டுத்திட்டங்களை விரைவாக நிறைவேற்றி பாதிக்கப்பட்ட மக்களுக்கு அவ்வீடுகள் வழங்கப்பட வேண்டும் என்பதே அனைவரினதும் எதிர்பார்ப்பாகும். இந்த எதிர்பார்ப்பை நிறைவேற்ற அரசியல்வாதிகள், அரச அதிகாரிகள் முன்வரவேண்டும்.

ஆழிப்பேரலை அனர்த்தம் நடைபெற்றதைத் தொடர்ந்து பேரலையால் பாதிக்கப்பட்டோர்களுக்கென மேற்கொள்ளப்படும் புனர்வாழ்வு, புனரமைப்புத் தொடர்பாக யாழ். அரச அதிபர் தலைமையில் வடமராட்சியில் அடிக்கடி ஆலோசனைக் கூட்டங்கள் நடைபெற்று வந்தன. இக்கூட்டங்களில் அரச அதிகாரிகள், திணைக்களத் தலைவர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் எனப் பலர் கலந்து கொண்டிருந்தனர்.

எதிர்காலத்தில் சுனாமி போன்ற அனர்த்தம் ஏற்படாமல் தடுக்க கரையோரப் பிரதேசங்களில் சில முன்னேற்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என இக் கூட்டங்களின்போது தெரிவிக்கப்பட்டதுடன் தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

அத்தீர்மானங்களின் பிரகாரம் வடராட்சி வடக்கில் தொண்டை மானாறு தொடக்கம் முனைவரையான கரையோரப் பகுதியில் தடுப்பு அணைச்சுவர் கட்டப்படுவதுடன், வடமராட்சி கிழக்கு,வடமராட்சி வடக்கு ஆகிய இரு பிரதேச கரையோரப்பகுதிகளில் சுனாமி எச்சரிக்கை மையங்கள் அமைப்பது எனத் தெரிவிக்கப்பட்டது.

அத்தீர்மானங்கள் நிறைவேற்றப் [illegible] ஆண்டுகள் நிறைவுற்ற போதும் அவை எதுவும் இன்றுவரை நிறைவேற்றப்படவில்லை.

புயல், சூறாவளி, கடற்கொந்தளிப்பு ஆகியவற்றிலிருந்து மீனவர்களைப் பாதுகாப்பதற்குக் குறிப்பிட்ட மையங்கள் இக்கடற்பிரதேசங்களில் ஆங்காங்கே அமைக்கப்பட வேண்டும். கடற்பெருக்கு, கடல் அரிப்புகளிலிருந்து பாதுகாத்துக் கொள்ளத் தொண்டைமானாறு தொடக்கம் முனைவரை தடுப்பு அணைச்சுவர் கட்டப்பட வேண்டும்.

**திவ்வியன்**

இவற்றைச் செய்வதன் மூலம் எமது மீனவர்கள் முன்எச்சரிக்கையுடன் நடந்துகொள்ளப் பெரிதும் உதவுவதுடன், தம்மைப் பாதுகாத்துக் கொள்ளும் நிலை தானாகவே ஏற்படும்.

எனவே, இவ்விரு திட்டங்களையும் வடமராட்சிக் கரையோரப் பகுதியில் மேற்கொள்ள உரிய நடவடிக்கைகள் இனிமேலாவது எடுக்கப்படுமா? அல்லது தீர்மானம் எடுக்கப்பட்டு 5 ஆண்டுகளாகக் கிடப்பில் உள்ளது போல தொடர்ந்து கிடப்பில்தான் இருக்கப் போகிறதா? இது உரியவர் களின் கவனத்திற்கு வடமராட்சி மீன வர் கள் சார்பாகத் தெரிவிக்கப்படுகிறது....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுனாமி நினைவான சிற்பக் கண்காட்சியும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் தெல்லிப்பழையில் இன்று!

வலி.வடக்கு,டிசெ.26



சுனாமிப்பேரலைகளின் கோர நிகழ்வுகளில் பலிகொள்ளப்பட்டவர்களின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும் சுனாமிப் பேரலையின் கோர நிகழ்வுகளின் சிற்பக்கண்காட்சியும் இன்று காலை 9 மணிக்கு தெல்லிப்பழை துர்க்கா புரம்,காங்கேசன்துறையில் அமைந்துள்ள சிற்பக்கலைஞர் கலாபூஷணம் கே.எஸ். ஆனந் தனின் சிற்பாலயத்தில் நடைபெறவுள்ளது.

வரலாற்றுப் பதிவான சுனாமிச் சிற்பத் தின் முன்னால் பலியானவர்களின் நினைவாக மெழுகுவர்த்திகள் ஏற்றுவதுடன் நிகழ்வுகள் ஆரம்பமாகவுள்ளன. நிகழ்வில் இரங்கல் உரையை அருட்திரு ஜெயக்குமார் அடிகளாரும் நினைவுரையை நல்லை ஆதீன குரு முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞான சம்பந்த பரமாச்சாரிய சுவாமிகளும் நிகழ்த்தவுள்ளார்கள்.

அதனைத் தொடர்ந்து அனர்த்தங்களும்,புலம் பெயர்வுகளும், கலாசார சீரழிவுகளும் என்னும் பொருளில் யாழ். பல்கலைக்கழக கல்வியியற் துறை பேராசிரியர் மா.சின்னத்தம்பியும்,நாங்கள் எதிர்கொள்ளும் அழிவுகளும் மீண்டும் எழுவதும் சம்பந்தமாக விவசா[illegible] விரிவுரையாளர் மிகுந்தனும் புவியியல் மாற்றமும் அதனைக் [illegible]ட்டுப்படுத்தலும் தொடர்பாக புவியியல்துறை விரிவுரையாளர் பிரதீபராஜாவும் உரையாற்றவுள்ளார்கள். (04-86)

## பொன்சேகாவின் பாதுகாப்பில் மாற்றம் ஏற்படுத்தக் கூடாது

### தேர்தல் ஆணையாளர் தெரிவிப்பு

கொழும்பு, டிச. 25

எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாளர் ஜெனரல் சரத் பொன்சேகாவிற்கு வழங்கப்பட்டுள்ள பாதுகாப்பு ஏற்பாடுகளில் மாற்றங்களை ஏற்படுத்தக் கூடாது - என்று தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸாநாயக்க தெரிவித்துள்ளார். சரத் பொன்சேகாவிற்கு வழங்கப் பட்டுள்ள பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் மற்றும் வாகனங்கள் அகற்றப் படக் கூடாது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஜெனரல் சரத் பொன்சேகாவின் தேர்தல் பிரசாரக் காரியாலயமொன்றில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்ட அவரது ஊடகப் பேச்சாளர் அனுரகுமார திஸாநாயக்க இந்தத் தகவல்களை வெளியிட்டார். ஜெனரல் சரத் பொன்சேகாவிற்கு தொடர்ந்தும் பாதுகாப்பு தேவைப்படுவதாகவும் தேர்தல் ஆணையாளர் சுட்டிக்காட்டியுள்ளார்.

## பத்தொன்பதாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் நாகலிங்கம் குமாரமூர்த்தி

(நில அளவையாளர்- மண்டைதீவு)

தோற்றம் 15★04★1936

மறைவு 26★12★1990

நீதிநெறி வழுவா நின்றன் நிழலிலே வளர்ந்த நாங்கள்
நிமிர்ந்ததுமே நிற்றல் காணா(து) நீவீரேன் மறைந்தீர் அப்பா?
கூடியே உங்களோடு குதூகலித்திடாத சோகம்
சுடுதே உள்ளம் தன்னில் தணியாத தாகமாக.

துரையப்பா றேடர்ஸ்,
தொல்புரம், சுழிபுரம். (91853)

நீங்காத நினைவில்:
மகன், மருமகள்.

## அந்தியேட்டி அழைப்பு

உதிப்பு 28 . 07 . 1927



உதிர்வு 27 . 11 . 2008

### முருகன் தம்பன் (பூசாரி)

கடந்த 27.11.2009 இல் இறைபதமெய்திய எமது அன்புத் தெய்வத்தின் அந்தியேட்டி மற்றும் சபிண்டீ கரணக் கிரியைகள் நாளை 27.12.2009 ஞாயிற்றுக் கிழமை எமது இல்லத்தில் நடைபெறும். உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் கிரியைகளில் கலந்துகொண்டு அன்னாரின் ஆத்ம சாந்திக்குப் பிரார்த்திக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

கரம்பைக் குறிச்சி,
வரணி. (சி/ 563479)

பிள்ளைகள்
(த.ஞானசேகர் குடும்பம்- லண்டன்)


## வேலையாட்கள் தேவை

1. சிற்றுண்டி தயாரிப்பவர்கள்
2. சிற்றுண்டி பரிமாறுபவர்கள் (சப்பிளையர்)
3. கைவேலை செய்வதற்கு (பெண்கள், ஆண்கள்)
4. சமையல் தெரிந்தவர்கள் (அசைவம்)
5. காசாளர் (கணக்கு மெசின் பாவித்து பில் கணக்குகள் செய்யக் கூடியவர்)

உடனடியாகத் தொடர்பு கொள்ளவும்.
சம்பளம் பேசித் தீர்க்கப்படும்
தொடர்பு:
DILAN HOTEL
133, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். (சி/563489)

## விற்பனைக்கு

பாடசாலை மாணவர்களுக்கான சப்பாத்துகள், சொக்ஸ் உட்பட அனைத்து வகையான காலணிகளும், பாடசாலை உபகரணங்களும், பயிற்சிப் புத்தகங்களும் மலிவான விலையில் ஒரே கூரையின் கீழ் பெற்றுக்கொள்ள நீங்கள் நாட வேண்டிய ஒரே இடம்.

சுப்பர் சூஸ்
7/1, செங்குந்தா நவீன சந்தை,
மேல்மாடி, கல்வியங்காடு (சி/563499)

## கோழிக்குஞ்சு விநியோகம்

BAHIRA NO-1 புறொயிலர் குஞ்சுகள் 30.12.2009 விநியோகிக்கப்படும்.
பதிவுகளை மேற்கொள்ளவும்.
தொடர்பு:
★ றாஜீவ் கால்நடைத் தீவன விற்பனைநிலையம்,
நவாலி வீதி, ஆனைக்கோட்டை. (91800)


## வாகனச் சில்லு ஏறியதில் இருவர் காலில் காயம்

யாழ்ப்பாணம், டிசெ.26

வாகனச் சில்லுக்குள் கால் விரல்கள் அகப்பட்டு இருவர் காயமடைந்த சம்பவங்கள் கடந்த புதன்கிழமை இடம் பெற்றுள்ளன.

மீசாலையில் உழவு இயந்திரப் பெட்டிச் சில்லுக்குள் கால் அகப்பட்டதில் ந.நிதர்சன் (வயது 20) என்பவரும், கொடிகாமத்தில் மினிபஸ்ஸில் ஏற முயன்றவேளையில் சில்லுக்குள் கால் அகப்பட்டதில் க.கணபதிப்பிள்ளை (வயது 76) என்பவரும் காயமடைந்தனர்.

காயமடைந்தவர்கள் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

(04-207)

## தொழில் வாய்ப்பு

யாழ்ப்பாணம், டிசெ.26

வெளிநாட்டில் சொகுசுப் பேருந்துச் சாரதிகளுக்கான தொழில் வாய்ப்புக்குச் செல்ல விரும்புவோர் இலக்கம் 375, கே.கே.எஸ் வீதியில் அமைந்துள்ள இலங்கைத் தொழில் பயிற்சி அதிகார சபை அலுவல கத்தில் தொடர்பு கொள்ளுமாறு தொழிற்பயிற்சி அதிகார சபையின் யாழ். மாவட்ட இணைப்பாளர் இரா.அகிலன் அறிவித் துள்ளார்.

தொடர்பு கொள்ள வருவோர் சாரதி அனுமதிப்பத்திரத்தையும் (AD) தேவையான ஆவணங்களையும் கொண்டு வருவதுடன் ஆங்கில அறிவும் பத்து வருட அனுபவமும் உடையவர்களாக இருக்க வேண்டும் என அவர் மேலும் கேட்டுள்ளார்.

(04-201)

## விபத்தில் காயம்

யாழ்ப்பாணம், டிசெ. 26

மோட்டார் சைக்கிள் கட்டுப்பாட்டினை இழந்து மரத்துடன் மோதியதில் மோட்டார் சைக்கிளில் அமர்ந்து சென்ற பெண் தூக்கி வீசப்பட்டுக் காயமடைந்தார்.

வடமராட்சி திக்கம் பகுதியில் கடந்த புதன்கிழமை இடம்பெற்ற இந்த விபத்தில் சாவகச்சேரியைச் சேர்ந்த ரி. புனிதலோஜினி (வயது 30) என்பவரே காயமடைந்தார்.

இதேவேளை நு[illegible]வில் பகுதியில் இடம்பெற்ற மோட்[illegible]ார் சைக்கிள் - மிதி வண்டி விபத்தில் ரி. துளசி (வயது 15) என் னும் மாணவி காயமடைந்துள்ளார்.

காயமடைந்த இருவரும் சாவகச் சேரி ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

(04-207)

## மலிவு விலையில் புராணபடன நூல்

திருவாதவூரர் புராண படன நூலை இ[illegible]லவாகவும் மலிவு விலைக்கும் வழங்க சுழிபுரம் பஜனைச் சபையார் ஏற்பாடுகள் செய்துள்ளனர். தேவையானோர் செயலாளர், பஜனைச் சபை, சுழிபுரம் என்னும் முகவரியுடன் தொடர்பு கொள்ளுமாறு வேண்டப் பட்டுள்ளனர். (04-28)

# மரண அறிவித்தல்கள்

## பொன்னுத்துரை துரைசிங்கம்(ஐயா)

(கண்ணகைஅம்மன் கோயில், அரசடி வீதி, இந்துக்கல்லூரி ஒழுங்கை)



திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும் வண்ணார் பண்ணை, 47, அரசடி வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னுத்துரை-துரைசிங்கம் அவர்கள் நேற்று (25.12.2009) வெள்ளிக்கிழமை அதிகாலை சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னுத் துரை -விசாலாட்சி (சாமி அம்மா) தம்பதியரின் ஏக புத்திரனும், காலஞ்சென்ற மயில்வாகனம்-அன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் பரமேஸ்வரியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற தியாகராஜா -தங்கம்மாவின் அன்புக் சகோதரரும், காலஞ்சென்ற வீ.கனகரத்தினத்தின் அன்புச் சகலனும், நகுலேஸ்வரியின் அன்பு மைத்துனரும், ச.பாலசொரூபி, பு. பாலஜெயந்தி (UK), க. திருக்குமார் (ஜேர்மனி), த.கருணாவதி, க.சர்வதயாளன் (பிரான்ஸ்), க.அரவிந்தன் (கனடா) ஆகியோரின் பாசமிகு சிறிய தந்தையாரும், சரவணநாதன், A.J. புஸ்பநாதன் (UK), தயாவதி (ஜேர்மனி), தவக்குமார், சொர்ணவதனா (பிரான்ஸ்), வினோதா (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும், சோதிராஜ் (J.H.C. A/L 2010 Bio), அமலராஜ் (K.H.C. O/L 2009), தர்சிகா (UK), சாம் (UK), கௌசிகன் (ஜேர்மனி), கஜனி (ஜேர்மனி), தாட்சாயினி (ஜேர்மனி), நிதன் (கனடா), றீனா (கனடா) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (26.12.2009) சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

47, அரசடி வீதி,
தட்டாதெருச் சந்தி,
யாழ்ப்பாணம். (91851)

தகவல்: த.சரவணநாதன் (மருமகன்)
த.தவக்குமார் (மருமகன்)
க.திருக்குமார் (பெறாமகன்)

## திருமதி அன்னம்மா இராசரெத்தினம்



வேலணை மேற்கு, முடிப்பிள்ளையார் கோயிலடியைப் பிறப்பிடமாகவும் நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அன்னம்மா இராசரெத்தினம் 23.12.2009 அன்று (புதன்கிழமை) காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை- நாகமுத்து தம்பதியினரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான மயில்வாகனம்- ஆச்சிமுத்து தம்பதியினரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற இராசரெத்தினத்தின் அன்பு மனைவியும், சகுந்தலா தேவி, யோகேஸ்வரி, சதானந்தன், சண்முகானந்தன், தயானந்தன், கிருபானந்தன் ஆகியோரின் அன்புத்தாயாரும், பரமநாதன், அருணகிரிநாதன், சிவநாயகி, சுகந்தா, உதயசந்திரிகா, அனுசியா ஆகியோரின்அன்பு மாமியாரும், துளசிகா- சுஜீபன், சயந்திகா-ஸ்ரீபரன், பிரசாந், தனுசாந்,கிரிசாந், நிருஷா, அருண்ராஜ், கார்த்திகா, மைதிலி, வானதி, சுதன், அக்சரன், கஸ்தூரி, அபிநயா, காருண்யா, கவிக்னன், மகிஷா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், சரணி, சகானா, ஹாரணி ஆகியோரின் அன்புப் பூட்டியும், செல்லத்துரையின் அன்புச் சகோதரியும், சுந்தரம், சிவப்பிரகாசம் ஆகியோரின் உடன்பிறவாச் சகோதரியும், காலஞ் சென்றவர்களான இரத்தினசபாபதி, லட்சுமி, கனகரெத்தினம், லீலாம்பிகை மற்றும் ஞானேஸ்வரி ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (27.12.2009) ஞாயிற்றுக்கிழமை மு.ப 9 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

40,நாயன்மார் வீதி,
நல்லூர்.
தொ.பே: 021 222 6762

தகவல்: குடும்பத்தினர்
பொ.அருணகிரிநாதன்
(அதிபர், வேலணை மத்திய கல்லூரி). (91797)

## செல்லையா வாலாம்பிகை



யாழ்.இந்து மகளிர் கல்லூரி வீதி, கந்தர்மடத்தைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட செல்லையா வாலாம்பிகை நேற்று (25.12.2009) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராமலிங்கம்-நாகமுத்து தம்பதியரின் அன்பு மகளும் செல்லையாவின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை-இராசம்மா தம்பதியரின் மருமகளும் அழகேந்திரன் (ராசா), சுலோஜனா (ராசாத்தி), சரோஜா (அப்பு), ஜெயக்குமார், உதயகுமார், சந்திரகுமார் ஆகியோரின் அன்புத் தாயும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

66/4, இந்து மகளிர் கல்லூரி வீதி,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம். (91856)

தகவல்:
கணவர்,
பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுனாமி அலைகள் கோரமாக எழுந்து ஐந்து ஆண்டுகள்; ஆயினும் இன்னமும் நீங்கவில்லை மக்களின் அவலம்!

ஐந்து ஆண்டுகளுக்கு முன்பு 2004ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 26ஆம் திகதி காலை எட்டு மணி சுமத்ராதீவில் ஏற்பட்ட சுனாமிப் பேரலை வேகம் கொண்டு வங்காள விரிகுடா வழியே முல்லைத்தீவையும், காலை 8.45 மணியளவில் வடமராட்சி கிழக்கையும், காலை 9 மணியளவில் வடமராட்சி வடக்கையும் ஆக்கிரமித்து ஆயிரக்கணக்கானோரைக் காவுகொண்டதுடன் வீடுகள், பாடசாலைகள், தேவா லயங்கள், கோயில்கள் மற்றும் உயர்ந்த கட்டடங்கள் அனைத்தையும் உருட்டி, உடைத்து தரைமட்டமாக்கியது.

யாழ்.மாவட்டத்தின் கரையோரக் கிராமங்களை முற்றாக அழித்து ஆயிரக்கணக்கான உயிர்களைக் காவு கொண்டு இம்மக்களுக்கு யுத்தத்தால் ஏற்பட்ட அழிவுகளைவிட மிகவும் கூடுதலான அழிவுகளையும், மன உளைச்சல்களையும் சுனாமிப் பேரலை கொடுத்திருந்தது.

1991ஆம் ஆண்டு இடம்பெற்ற ஆனையிறவு முகாம் மீதான தாக்குதலையடுத்து வடமராட்சி கிழக்குப் பிரதேசத்தில் சுண்டிக்குளம் தொடக்கம் செம்பியன்பற்று வரையான மக்கள் இடம்பெயர்ந்து குடாநாட்டின் ஏனைய பகுதிகளிலும், வன்னிப் பகுதியிலும் அகதிவாழ்வு வாழ்ந்துகொண்டிருந்தனர்.

இந்நிலையில் கடந்த 2002ஆம் ஆண்டு புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்பட்ட பின்னர் அம்மக்கள் தமது சொந்த இடங்களுக்கு நம்பிக்கையுடன் திரும்பி ஆழ்கடல் மீன்பிடித் தொழிலை ஆரம்பித்து தமது இழந்த வாழ்வாதாரத்தைக் கட்டியெழுப்பிக் கொண்டிருந்தவேளை, அதனைக் கண்டு பொறுக்கமுடியாத சுனாமிப் பேரலை படுவேகமாக வந்து முழுக்கிராமத்தையும் ஆட்கொண்டது. இந்த அனர்த்தத்தின்போது குழந்தைகள், பெண்கள், வயோதிபர்கள் சுனாமிப் பேரலை வெள்ளத்தால் சுமார் ஒரு மைல் தூரத்திற்கு அப்பால் அடித்துச் செல்லப்பட்டு, உயிரிழப்புகளையும் காயங்களையும் சந்தித்தார்கள். இவர்களது உடல்கள் ஆங்காங்கே சிதறியும், மரக்கிளைகளில் தொங்கியும் காணப்பட்டன. இவர்களுடைய உடல்களை கடல் அலை இழுத்துச் சென்றதனால் அவர்களது உடல்களை உறவினர்கள் காணமுடியாதிருந்தது. அம்மக்களின் வீடுகள் தரைமட்டமாகின. கடற்றொழில் உபகரணங்கள் கடல் அலையினால் அடித்துச் செல்லப்பட்டன. தென்னை, பனை மரங்கள், மற்றும் மரங்கள் வேரோடு சாய்ந்திருந்தன.

உயிர்தப்பிய மக்கள் உடைமைகள் எதுவுமற்று நிர்க்கதியானார்கள். வானுயர்ந்த கோபுரங்களுடன் இருந்த இந்து, கிறிஸ்தவ ஆலயங்கள், பொது நிறுவனக் கட்டடங்கள் முன்பள்ளிகள் என்பன சேதமடைந்திருந்தன.

இக்கோரத்தாண்டவத்தின்போது குடும்பத்தோடு மரணமடைந்தவர்கள், குழந்தைகளை இழந்த பெற்றோர்கள், பெற்றோர்களை இழந்த குழந்தைகள், மனைவிமாரை இழந்த கணவன்மார், கணவன்மார்களை இழந்த மனைவியர், பச்சிளம் பாலகர்களை இழந்த பெற்றோர், வயோதிபர் எனப் பலதரப்பட்ட பாதிப்புகளையும் காணமுடிந்தது. இக்கோர ஊழித்தாண்டவத்தில் வடமராட்சி கிழக்கில் மணற்காடு தொடக்கம் சுண்டிக்குளம் வரையான பகுதிகளில் அண்ணளவாக 1000 பேர் மரணமடைந்திருந்தனர். சுமார் இரண்டாயிரம் பேர் வரை படுகாயங்களுக்குள்ளானார்கள். மரணமடைந்தவர்களில் 956 பேர் உடுத்துறைக் கிராமத்தில் ஒரே இடத்தில் வைத்து அடக்கம் செய்யப்பட்டனர். மணற்காட்டில் 76 பேர் அடக்கம் செய்யப்பட்டனர். ஏனையோர் கட்டைக்காடு, செம்பியன்பற்றுப் பகுதிகளில் அடக்கம் செய்யப்பட்டனர்.

இச்சம்பவத்தில் வடமராட்சி கிழக்கில் சுமார் மூவாயிரம் வீடுகள் தரைமட்டமாகின. இந்த அனர்த்தத்தின் பின்னர் இப்பிரதேச மக்கள் அரச சார்பற்ற நிறுவனங்களால் அமைத் துக் கொடுக்கப் பட்ட தற்காலிக முகாம்களிலேயே தமது வாழ்க்கையைத் தொடர வேண்டிய அவலநிலை ஏற்பட்டது.

திரும்பவும் யுத்தம் ஆரம்பமான் போது கடந்த 2006ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 11ஆம் திகதி மீண்டும் வடமராட்சி கிழக்கைவிட்டு வெளியேறி தற்போதும் சொந்த வீடுவாசல்களின்றி அகதி வாழ்க்கையை வாழ வேண்டிய அவலநிலை ஏற்பட்டுள்ளது.

சுனாமி அனர்த் தத்தின் பின்னர் பாதிக்கப்பட்ட மக் களுக்கு வீடுகள் அமைத்துக் கொடுப்பது முதற்கொண்டு பல்வேறு உதவிகளை அரச, அரச சார்பற்ற நிறுவனங்கள் வழங்க முன்வந்திருந்தன.

ஆனால் இந்த உதவிப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டு வெற்றிலைக்கேணியில் கரித்தாஸ் - கியூடெக் நிறுவனம் சுமார் 100 வீடுகளையும், கட்டைக்காட்டில் சோஆ நிறுவனம் சுமார் 50 வீடுகளையும் கட்டிக் கொடுத்திருந்தது. இவ்வீட்டுத் திட்டங்களை யாழ்.ஆயர் பேரருட்திரு.தோமஸ் சவுந்தரநாயகம் திறந்து வைத்துப் பயனாளிகளுக்குக் கையளித்திருந்தார்.

இவ்வீட்டுத் திட்டத்தைத் தொடர்ந்து வடமராட்சி கிழக்கில் ஏனைய கிராமங்களில் அரச, அரச சார்பற்ற நிறுவனங்கள் வீடுகளைக் கட்டிக் கொடுக்கத் திட்டமிட்டுத் தயாரான போது 2006ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 11ஆம் திகதி ஏ-9 பாதை மூடப்பட்டு யுத்த மேகம் புடைசூழத் தொடங்கவே வீட்டுத் திட்டம் அனைத்தும் கைவிடப்பட்டதுடன் மக்களும் மீண்டும் அகதிகளாக வன்னிக்கு இடம் பெயர்ந்தார்கள்.

வன்னியில் அகதிகளாக வாழ்ந்த மக்கள் அங்கு உக்கிரப்போருக்கு முகம் கொடுத்து, சாவுகளிலிருந்து மீண்டும் வவுனியா, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களில் உள்ள நலன்புரி நிலையங்களுக்கு வந்து சேர்ந்தனர். இவர்களில் பலர் விடுவிக்கப்பட்டு வடமராட்சி வடக்கு, வடமராட்சி கிழக்குப் பகுதிகளில் உள்ள உறவினர், நண்[illegible] வீடுகளிலும், குடத்தனைத் தொ[illegible] மீள்குடியேற்றம் என்ற பெயரில் வாழ்ந்து வருகின்றனர். இன்னுமொரு தொகுதி மக்கள் அல்லாரை நலன்புரி நிலையத்தில் தொடர்ந்து இருந்து வருகின்றனர்.

சுனாமிப் பேரலையின் வேதனை, யுத்தத்தால் பட்ட அவலம் இவற்றை எதிர்கொண்ட வடமராட்சி கிழக்கிலுள்ள நாகர்கோயில்தொடக்கம் சுண்டிக்குளம் வரையான பகுதி மக்களைச் சொந்த இடங்களில் மீள்குடியேற்றம் செய்யப்பட வேண்டும்.



இம்மீள் குடியேற்றத்துடன் அவர்களுக்கான வீட்டுத்திட்டங்கள் உருவாக்கப்பட்டு, பாதிக்கப்பட்ட ஒவ்வொருவருக்கும் வீட்டுத் திட்டங்களை ஏற்படுத்திக் கொடுக்க சம்பந்தப்பட்டோர் முன்வர வேண்டும்.

இதேநேரம் வடமராட்சி கிழக்கில் மற்றொரு கிராமமான மணற்காட்டில் சுனாமியால் 76 பேர் மரணமடைந்திருந்தனர். வீடு வாசல்களை இழந்த இம்மக்களுக்கு மணற்காட்டிலிருந்து சற்றுத் தூரத்தில் இடைத்தங்கல் முகாம் அமைத்துக் கொடுக்கப் பட்டு அங்கு தங்க வைக்கப்பட்டிருந்தனர்.

இவர்களுக்கென 217 வீடுகள் கட்டுவதற்கு திட்டமிடப்பட்டு ஒப்பந்தகாரர் வேலைகளை மேற்கொண்டு இடை நடுவில் கைவிட்டுவிட்டுச் சென்றுவிட்டனர். ஐந்து ஆண்டுகள் ஆகியும் அவ்வீட்டுத்திட்டம் இன்னமும் பூர்த்தியடையவில்லை. தற்போதுதான் இவ்வீட்டுத் திட்டத்தைத் தொடர்ந்து மேற்கொண்டு பூர்த்திசெய்ய யு.என்.ஹபிராட் நிறுவனம் 186 வீடுகளையும், கரித்தாஸ் - கியூடெக் நிறுவனம் 21 வீடுகளையும் கட்டிக் கொடுக்க முன்வந்துள்ளது. இவற்றில் கரித்தாஸ் - கியூடெக் நிறுவனத்தின் வீட்டுத்திட்ட வேலைகள் வேகமாக நடைபெற்று வருகின்றன. யு.என்.ஹபிராட் நிறுவனம் கட்டம் கட்டமாக கொடுப்பனவுகளை வழங்கும் வேகத்தைப் பொறுத்து வீடுகளைப் பயனாளிகள் நிர்மாணித்து வருகிறார்கள்.



சுனாமிப் பேரலையால் பாதிக்கப்பட்ட வடமராட்சி கிழக்கில் மணற்காடு தொடக்கம் சுண்டிக்குளம் வரையான முழுமையான பிரதேசத்தில் குடத்தனை, அம்பன் ஆகிய கிராமங்களில் அமைக்கப்பட்ட சுனாமி வீட்டுத்திட்டம்தவிர ஏனைய எந்தவொரு வீட்டுத்திட்டமும் நிறைவேற்றப்படவில்லை. வெற்றிலைக்கேணி, கட்டைக்காட்டில் முதன்முதலாக அமைக்கப்பட்ட சுனாமி வீடுகள் யுத்தத்தால் சேதமடைந்திருக்கலாம் என யாழ்.ஆயர் பேரருட்திரு.தோமஸ் சவுந்தரநாயகம் அடிகளார் தெரிவித்திருந்தார்.

பருத்தித்துறைப் பிரதேச செயலர் பிரிவில் கடந்த காலங்களில் சுனாமி வீட்டுத்திட்டத் திறப்புவிழா நிகழ்வுகளில் கலந்துகொண்ட யாழ்.அரசாங்க அதிபர் கே.கணேஷ் சுனாமி, யுத்தம் ஆகியவற்றால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வீடுகள் அமைத்துக் கொடுக்கப்பட வேண்டும். அவற்றிற்கான நிதி உண்டு எனத் தெரிவித்திருந்திருந்தார். இதே நிகழ்வுகளில் கலந்து கொண்ட யாழ்.ஆயர் பேரருட்திரு.தோமஸ் சவுந்தரநாயகம் ஆ[illegible] சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களின் நிலை இன்னமும் மேம்படவில்லையே என அழுகையுடன் தனது ஆதங்கத்தை வெளிப்படுத்தியதுடன் இந்த மக்களின் வாழ்வு குறிப்பாக ஏதிலிகளாக வாழ்ந்து வரும் வடமராட்சி கிழக்கு மக்களுக்கு நிம்மதியுடன் கூடிய வாழ்வு கிடைக்க வேண்டும் என்ற தனது எண்ணக் கருத்தை வெளியிட்டு வந்தார்.

தொடர்ந்து ஏதிலிகளாக அங்கும் இங்குமாக வாழ்ந்துவரும் வடமராட்சி கிழக்கைச் சேர்ந்த மக்கள் அனைவரும் சொந்த இடங்களில் குடியமர்த்தப்பட்டு, அவர்களுக்கு சுனாமி, யுத்தப் பாதிப்பு வீட்டுத் திட்டங்களை ஏற்படுத்திக் கொடுக்கப்பட வேண்டும். இதன்மூலமே அம்மக்கள் நிம்மதியாகவும், சுயாதீனமாகவும் வாழ முடியும்.

அடுத்த ஆண்டு - சுனாமிப் பேரவல ஆறாம் ஆண்டு - நிறைவடைவதற்குள் இத்திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு, மக்கள் மகிழ்ச்சிகரமான வாழ்க்கையை எதிர்நோக்க அரச அதிகாரிகள், அரசியல் வாதிகள் மற்றும் அரச, அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் முன்வரவேண்டும். இதுவே சுனாமிப் பேரலையின் தாக்கத்திற்கான பரிகாரமாகும்....

கர்ணன்



## சுனாமி அலையோடு போனவளே நீ எங்கே?

தேடுகிறேன் என் தேவதையை
இதயம் கிழித்து
இரத்தம் வழிந்தோடி
சோர்ந்து கொண்டு
சோகங்கள் புரள்கிறது.

நிலா விண்மீனோடு
தாலாட்டும் என்னவளே!
எங்கே? நீ உள்ளாய்
அலைகளால் எமை
அலங்கரிப்பு செய்வதாய்
அடிக்கொருதடவை சொல்பவளே!
அதுதானா? நீ இன்று
அசுரக் கடல் மடியில்

வே.அகிலேஸ்வரன்
மருதங்கேணி.

## மாற்றமின்றி

உலகத்திற்கும் உனக்கும்
ஏதோ பகையிருக்கலாம்
ஆனால்
எனக்கும் உனக்கும்
உள்ளது ரகசிய
பிணைப்பு
அம்மாவும் நானுமாய்
உன்னிடம் வரும்போது
அலைகளோடு விளையாடும் போது,
கரையிலே கிடங்கு கிண்டி
நன்னீர் பார்க்கும் போது,
சிப்பி பொறுக்கும் போது,
தம்பியோடு உன் தங்க
கரைமீது மணல் வீடு கட்டும் போது,
எல்லாம்.
உன் அந்தரங்கமில்லா
பேச்சில் நானும் கலந்ததுண்டு
காற்றோடு
அன்று
வேகமாய் நீ வந்து எம்
வீட்டை உடைத்து
மரத்தை முறித்து
மொன்டசரி முன்னிருந்த
என் ஊஞ்சலை
விழுத்தி
ஏன்
என்னையும் தம்பியையும் பிரித்து
தண்ணீருக்குள் தத்தளித்து
நினைவிழக்கவைத்து
எத்தனையோ நடந்தபின்
எல்லோரும் உன்னில் உன் கரையில்
புரண்டழுதார்கள்
திட்டினார்கள், ஓலமிட்டனர்.
ஆனால்
எனக்கு எதுவுமே
மாற்றமில்லை
இன்றும்
எனக்கும் உனக்கும் உள்ளது
ரகசிய பிணைப்பு.
ஏன் தெரியுமா
அம்மா உன்னிடம் தான் இருக்கிறாவாம்.
அப்பா சொன்னவர்.
(சுனாமியில் தாயை இழந்த குழந்தையின் குரல்)

லாவண்யா
தரம் -10
யா/ விக்னேஸ்வராக் கல்லூரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீர் அஞ்சலி



சாவகச்சேரி- லயன்ஸ் கழக உறுப்பினர்
லயன் சி.ஜெயசங்கர் அவர்களின்
அன்புத் தந்தை
**வீரகத்தி சிவசுப்பிரமணியம் (J.P.)**
அவர்களின் திடீர் மறைவினால்
துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு
எமது ஆழ்ந்த அனுதாபங்களைத்
தெரிவிப்பதோடு, ஆத்மசாந்திக்குப் பிரார்த்திக்கின்றோம்.

கண்டி வீதி, சாவகச்சேரி. (91852) **சாவகச்சேரி லயன்ஸ் கழகம்.**

## ஓராண்டு நினைவில் ஓயாத துயரில்



### செம்மனச்செல்வி காயத்ரி குகதாஸ்சர்மா

ஜனனத்தின் நினைவு, நிஜத்தின் கனவு
நீ வருவாயென.........
மலரிலும் மெல்லிய உன் மனம்
மலையிலும் வலிமையானது எங்ஙனம்?
உதயத்தில் உதயனைப் படிப்பாயே
நண்பகலில் அஸ்தமிக்குமா ஞாயிறு?
தேனாகப் பேசியதும் சிரித்து விளையாடியதும்
சிந்தும் சிரிப்பழகும் நெஞ்சம் மறப்பதில்லை.

நீ வருவாயென வழிமேல் விழி பதித்துக் காத்திருக்கும்:
அன்பு அப்பா, அம்மா, தங்கை, தம்பிகள், அம்மம்மா, மாமாமார், மாமிமார், பெரியப்பாமார், பெரியம்மாமார், சித்தப்பாமார், சித்திமார், உடன்பிறவாச் சகோதரர்கள், சகோதரிகள், மைத்துனர், மைத்துனிகள், பெறாமக்கள், மருமக்கள், உறவினர்கள், நண்பர்களுடன் தமிழ் கூறும் நல்லுலகு.

ஊரெழு மேற்கு, சுன்னாகம். (91723)

## வழிகாட்டல் கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,டிசெ.26

யாழ்.மாவட்ட மெய்வல்லுநர் தொழில் நுட்ப அலுவலர்கள் சங்கத்தினால் நடத்தப்படுகின்ற மெய்வல்லுநர் தொழில் நுட்ப அலுவலர் பரீட்சைக்கான வழிகாட்டல் கருத்தரங்கு இன்று சனிக்கிழமையும், நாளை ஞாயிற்றுக்கிழமையும் யாழ். இந்து மகளிர் கல்லூரியில் முற்பகல் 9 மணியளவில் நடைபெறவுள்ளது.

இதில் துறைசார் உத்தியோகத்தர்கள் கருத்தரங்கினை நடத்தவுள்ளதால் இதில் கலந்து பயன்பெறுமாறு யாழ்.மாவட்ட மெய்வல்லுநர் தொழில்நுட்ப அலுவலர் சங்கம் அறிவித்துள்ளது.

(9)

## பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம்,டிசெ.26

வடபிரதேச நல்லொழுக்க சம்மேளனத்தின் ஏற்பாட்டில் இவ்வாண்டு ஐந்தாம் தரப் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த சங்கானை, சண்டிலிப்பாய் கல்விக்கோட்டங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கான பரிசளிப்பு விழா நாளை மறுதினம் திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு சங்கானை கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.


வடபிரதேச நல்லொழுக்க சம்மேளனத் தலைவர் க.புஸ்பராசா தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக சமூகசேவைகள் மற்றும் சமூகநலத்துறை அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தா கலந்துகொள்வார்.

சிறப்பு விருந்தினர்களாக வலிகாமம் வலயக்கல்விப் பணிப்பாளர் ப.விக்கினேஸ்வரன், சங்கானை பிரதேச செயலர் திருமதி தே.பாபு, வலி.மேற்கு பிரதேச சபைச் செயலர் சு.புத்திசிகாமணி, சங்கானை கோட்டக்கல்விப் பணிப்பாளர் துரை எங்கரசு, சண்டிலிப்பாய் கோட்டக்கல்விப் பணிப்பாளர் சி.கந்தசாமி ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

(201)

## இரண்டாம் ஆண்டு நினைவலைகள்

ஓம் நமசிவாய நம ஓம்



ஐயப்ப சாமியே சரணம்

### பிரம்ம ஸ்ரீ சிவகணேசக் குருக்கள் கணேசராஜ சர்மா

திதி: நவமி (26.12.2009)

விளக்கைப் பிளந்து விளக்கினை யேற்றி
விளக்கி னுக்குள்ளே விளக்கினைத் தூண்டி
விளக்கில் விளக்கை விளக்க வல்லார்க்கு
விளக்கு டையான் கழல் மேவலுமாமே.

பழைய தபாற்கந்தோர் ஒழுங்கை,
கோப்பாய் தெற்கு, கோப்பாய்.
(91774)

என்றும் நினைவுடன்:
மனைவி- க.தனுசி,
மகன்- க.ஜெகதீஸ்வரசர்மா,
மகள்- க.துர்க்காஜினி.

## மரண அறிவித்தல்



### முருகேசு நல்லம்மா

ஏழாலை மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட முருகேசு நல்லம்மா (22.12.2009) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற முருகேசுவின் அன்பு மனைவியும் அமரசிங்கம், அருந்தவச்செல்வி, திருமலர்ச்செல்வி, சந்திரவதனா, காலஞ்சென்ற திருச்செல்வம் மற்றும் கௌரிகாந்தன், அருட்சோதி, நிறைஞ்சன் ஆகியோரின் அன்புத் தாயும் காலஞ்சென்ற லிங்கநாதன் மற்றும் பாலச்சந்திரன், கருணாலிங்கம், நித்தியானந்தன், செல்வராணி, பரமேஸ்வரி, கிருஷ்ணவேணி ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.12.2009) சனிக்கிழமை மு.ப.11 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் உயத்தியோடை மயானத்திற்கு தகனக் கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

புகையிரத நிலையம் அருகாமை,
ஏழாலை மேற்கு, ஏழாலை. (91770)

தகவல்:
குடும்பத்தினர்.

## நெஞ்சம் நெகிழ்ந்த....

## ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி



அன்னையின் மடியில் 11 . 08 . 1983

ஆண்டவன் பிடியில் 26 . 12 . 2004

### முருகேசு பிரதீப்

கனவோடு கனவாக ஐந்தாண்டுகள் சென்றாலும்
கண்ணிமைக்குள் இருப்பது உன் அழகுக் கோலம்
என்றுமே கனவல்ல, நீ நிஜம்தானடா பிரதீப்
இனிமையான உன் நினைவுகள்
நாம் சாகும்வரை என்றுமே நிஜம்தான்.

"திருப்பதி",
நீர்வேலி வடக்கு, நீர்வேலி. (91734)

தகவல்:
[illegible]

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அன்னை மடியில் 17 . 01 . 1956

அரன் அடியில் 06 . 01 . 2009

### அமரர் நாகலிங்கம் கந்தசாமி

(முன்னாள் E.S.P.முகாமையாளர்)

திதி: பூர்வபக்க தசமி (26.12.2009)

வையக வாழ்வை நீத்து வானுறை தெய்வமாகி
பையவே ஆண்டு ஒன்று பாரினில் கழிந்ததப்பா
கையறு நிலைமை எய்திக் கடுந்துயர் அடைந்த போதும்
செய்திடும் அறங்கள் ஆற்றித் தினம் தினம் நினைவு கூர்வோம்.

வாழ்க்கைக்கு வரை விலக்கணம்
வகுத்த எம் அப்பா உங்கள்
ஆழ்ந்த நற்சொற்கள் யாவும்
ஆயிரங் கோடி பொன் நிகருமன்றோ
வீழ்ந்தது நும் உடல் என்றாலும்
விழுமிய உங்கள் ஆன்மா
சூழ்ந்து நின்றாசி நல்கும்
துதித்து நாம் பூசை செய்வோம்.

என்றும் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல செம்மணத்தம்புலம் வீரகத்தி விநாயகப் பெருமானை வேண்டி நிற்கின்றோம்.

[illegible] (91738)

உங்கள் பிரிவால் துயருறும்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத் தமிழர்கள் படுகொலை குறித்து தமிழக சட்டமன்றின் ந..வடிக்கை என்ன?

2010 ஜனவரி 6 ஆம் திகதியன்று தமிழக சட்டமன்றம் கூடுகிறது. ஈழத்தில் நடந்து முடிந்த பேரழிவிற்குப் பிறகு கூடும் இரண்டாவது சட்டமன்றக் கூட்டத்தொடர் இதுவாகும்.

இதற்கு முந்தைய கூட்டத் தொடரானது ஜூன் - ஜூலை மாதங்களில் 26 நாட்கள் நடைபெற்றது.

இலங்கையில் நடக்கும் தமிழினப் படுகொலையை உடனடியாக நிறுத்த இந்திய அரசு வழி செய்ய வேண்டும் என்பதை "அய்யகோ, இலங்கையில் தமிழ் இனமே அழிகிறது - இந்தியப் பேரரசுக்கு இறுதி வேண்டுகோள்" என்ற தலைப்பில் 2009 ஜனவரி 23 ஆம் திகதியன்று முதல்வர் தலைமையில் தீர்மானம் இயற்றி சரியாக ஒரு ஆண்டு கழிந்து விட்ட நிலையில் கூடும் முதல் சட்டமன்றக் கூட்டத்தொடர் இது.

இலங்கையில் நடந்துவரும் தமிழ் இனப் படுகொலையில் முக்கிய பங்காற்றியுள்ள ராஜபக்ஷவும், சரத் பொன்சேகாவும் அந்த நாட்டில் ஜனவரி 26 ஆம் திகதியன்று நடக்கவிருக்கும் தேர்தலில் போட்டியிடுகின்றனர். அந்தத் தேர்தலுக்கு முன்பாகத் தமிழ் நாட்டில் கூடும் சட்டமன்றத் தொடர் இது என்பதால் இது வரலாற்று முக்கியத்துவத்தைப் பெறும் ஒரு தொடராக அமைகின்றது.

மேற்குலக நாடுகளில் புலம்பெயர்ந்து வாழும் ஈழ மக்கள் மத்தியில் - இலங்கையா? ஈழமா? எது அவர்களுக்கான தீர்வு - என்பதை அறியும் வெளிப்படையான வாக்கெடுப்பு நடந்து முடியவுள்ள நாள்களில் கூடும் சட்டமன்றத் தொடர் இது. அவர்களின் முடிவுக்கு உதவுவதற்கான தக்க நடவடிக்கைஒன்றைத் தமிழ்நாட்டு மக்களும், அவர்தம் அரசியல் பிரதிநிதிகளும் எடுக்க வேண்டிய காலகட்டத்தில் இந்த சட்டமன்றத் தொடர் கூடுகிறது.

இந்தசட்டமன்றத் தொடரில் ஈழத் தமிழ் மக்களுக்கான தீர்வை முன்வைக்காவிட்டால் அவர்களின் எதிர்காலம் நிரந்தரமானதொரு இருளைச் சந்திக்க வேண்டி வரும் என்பதை



உணர வேண்டிய அவசியமான நேரம் இதுவேயாகும்.

ஈழத்தமிழ் மக்களை சிங்கள அரசின் இனப்படுகொலையில் இருந்து காப்பாற்ற கடந்த ஓராண்டு காலமாகத் தமிழக சட்ட மன்றமும், அதில் உள்ள அரசியல் கட்சிகளும் தவறிவிட்டிருக்கின்றன என்பதுதான் உண்மை. இந்தக் கடைசி நேரத்திலாவது ஈழத்தில் வாழும் தமிழ் மக்களைக் காப்பாற்ற அவை என்ன செய்ய வேண்டும் என்பதை சிந்திப்பதற்கான நேரம் இதுதான்.

அடுத்து வரும் நாள்களில் ஈழத் தமிழ் மக்களைக் காப்பாற்றும் முயற்சியில் ஈடுபடும் முன்பாகக் கடந்த ஓராண்டு காலத்தில் தமிழக அரசியல் கட்சிகளும், சட்டமன்றமும் இந்தப் பிரச்சினையில் எவ்வளவு தூரம் தன்னலம் மிகுந்தும், அசிரத்தையாகவும், பாராமுகமாகவும் இருந்து வந்துள்ளன என்பதை அறிந்து கொள்வது அவசியமானது.

ஏனெனில்,அடுத்துவரும் நாள்களிலாவது இந்தக் கடந்தகாலத் தவறை மீண்டுமொருமுறை செய்துவிடக்கூடாதல்லவா?

## ஈழத் தமிழர் இனப்படுகொலையும் தமிழக சட்டமன்ற அரசியல் கட்சிகளும்

மே 22 ஆம் திகதியன்று காங்கிரஸ் கூட்டணி மத்தியில் ஆட்சி அமைத்தது.

மே 23 ஆம் திகதியன்று ஐ.நா.சபையின் தலைவர் பான் கி மூன் முள்வேலி முகாம்களுக்குள் அடைக்கப்பட்ட வன்னித் தமிழ் மக்களை சந்தித்தார். உலகம் முழுதும் உள்ள பல அகதிகள் முகாம்களுக்கு நான் சென்று வந்திருக்கிறேன். ஆனால் இங்கு உள்ளதைப்போல கொடூரமான சூழலில் அமைந்துள்ள முகாமை நான் கண்டதில்லை என்று அவர் கூறினார்.

மே 27 ஆம் திகதியன்று ஐ.நா.சபையின் மனித உரிமை ஆணையகத்தில் இலங்கையில் நடந்த படுகொலைகளை விசாரிக்க வேண்டும் என்ற தீர்மானத்தை ஐரோப்பிய ஒன்றியம் கொண்டு வந்தது. ஆனால் அந்தத் தீர்மானத்தை இலங்கை அரசுக்கு ஆதரவாக செயல்பட முடிவெடுத்த இந்திய, சீன, ரஷ்ய அரசுகளின் தலைமையிலான கூட்டணி அரசுகள் முறியடித்தன. காங்கிரஸ் கூட்டணி அரசின் தமிழ் இன எதிர்ப்புப் போக்கினை ஜூன் மாதம் கூடிய தமிழக சட்டமன்றம் கண்டிக்கவில்லை.

இருப்பினும் ஜூன் 6 ஆம் திகதியன்று இலங்கை அரசு மீதான போர்க்குற்ற விசாரணையை நடத்த வேண்டும் என்று மீண்டும் ஒரு முறை பான் கி மூன் தெரிவித்தார்.

ஈழப்போரின் கடைசி சில நாள்களில் மட்டும் 20 ஆயிரத்துக்கும் மேலான அப்பாவித் தமிழ் மக்களை சிங்கள இராணுவம் கொன்று குவித்தது என்பதற்கான மறுக்க முடியாத ஆதாரங்களை இங்கிலாந்து நாட்டின் டைம்ஸ் ஒன்லைன் பத்திரிகை மே 29 ஆம் திகதியன்று வெளியிட்டது. இந்த ஆதாரங்களின் அடிப்படையில், இலங்கையில் நடந்து கொண்டிருக்கும் இனப்படுகொலை மீதான வெள்ளை அறிக்கை ஒன்றை வெளியிட வேண்டும் என்று மத்திய அரசிடம் தமிழக நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஜூன் மாதம் கோரிக்கை வைத்தனர். ஆனால், இலங்கை அரசுக்கு ஐ.நா.சபையிலேயே துணை போகத் துணிந்த இந்திய அரசு, அந்தக் கோரிக்கையை இன்று வரை கண்டுகொள்ளவில்லை. கேள்வியை முன்வைத்த தமிழக உறுப்பினர்களும் தங்களின் வேண்டுகோளை ஏன் அரசு ஏற்கவில்லை என்ற கேள்வியைத் தொடுத்து உரிமைக்காகப் போராடவுமில்லை.

ஒகஸ்ட் 25 ஆம் திகதியன்று தமிழ் இளைஞர்களை சிங்கள இராணுவத்தினர் சுட்டுக் கொல்லும் கொடூரமான வீடியோ ஆவணம் ஒன்றை இலங்கையில் நடந்துவரும் தமிழ் இனப்படுகொலைக்கு ஆதாரமாக இங்கிலாந்து நாட்டின் 'சனல் 4' தொலைக்காட்சி வெளியிட்டது. தமிழக சட்டமன்றக் கட்சிகள் இதையு[illegible] அசிரத்தையாகவே கைக்கொ[illegible].

சிங்கள இராணுவத்தால் ஆக்கிரமிக்கப்பட்ட வன்னி நிலத்தில் இலங்கை அரசு மேற்கொள்ளவிருக்கும் வேளாண் பணிகளுக்கு உதவுவதற்காக செப்ரெம்பர் 17 ஆம் திகதியன்று ஆறு பேர் அடங்கிய நிபுணர் குழு ஒன்றினை இந்திய அரசு அனுப்பி வைத்தது. அதில் நான்கு பேர் தமிழர்கள். அவர்கள் தமிழர்கள் என்ற ஒரே காரணத்திற்காக, அவர்களை இந்திய அரசின் பிரதிநிதிகள் என்றும் பாராது, முள்வேலி முகாம்களுக்குள் அடைக்கப்பட்ட தமிழ் மக்களை சந்திக்க சிங்கள அரசு அனுமதி மறுத்து அவமதித்தது. இதன் பின்னரும் கூட, இந்திய அரசு இலங்கை அரசின் போக்கைக் கண்டிக்க முன்வரவில்லை. இலங்கை அரசின் இந்த அவமதிப்பு நடவடிக்கையைத் தமிழக சட்டசபையில் பங்கேற்கும் அரசியல் கட்சிகளும் கண்டுகொள்ளவில்லை.

இருப்பினும், இவற்றை எல்லாம் பிற நாடுகளின் அரசுகள் கவனிக்கத் தவறவில்லை. இலங்கையில் தமிழ் இனப்படுகொலை தொடர்பாக இதுவரை வெளிவந்த பல்வேறு ஆதாரங்களின் அடிப்படையில் ஒக்டோபர் 19 ஆம் திகதியன்று ஐரோப்பிய ஒன்றியமும், ஒக்டோபர் 22 ஆம் திகதியன்று அமரிக்க அரசும் இலங்கை அரசை இனப்படுகொலையில் ஈடுபட்ட அரசாக சுட்டிக்காட்டும் இரண்டு அறிக்கைகளை வெளியிட்டன.

சிங்கள இனவெறி அரசால் முள்வேலி முகாம்களுக்குள் அடைக்கப்பட்ட தமிழ் மக்களையும், இனவெறி ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷாவையும் தி.மு.க. கூட்டணியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒக்டோபர் மாத இடைப்பகுதியில் சந்தித்து விட்டுத் திரும்பிய நாள்களில் அந்த இரு அறிக்கைகளும் வெளியாகியிருந்தன.

எங்கள் அறிக்கையைக் காட்டிலும் உங்களது அறிக்கையானது சிங்கள அரசு மேற்கொண்டுவரும் தமிழ் இனப்படுகொலையை உலக அரசுகளுக்கும், மக்களுக்கும் தெரிவிக்கும் ஒன்றாக இருக்க வேண்டும் என்பதைப் போருக்குப் பிறகு இலங்கைக்கு முதல் முதலாகச் சென்ற இந்திய நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் தெரிவிப்பதற்காகத்தான் அந்த இரு அறிக்கைகளும் அவர்களது இலங்கைப் பயணம் நிறைவடைந்த ஒருவார காலகட்டத்துக்குள் வெளியாகியிருந்தன.

இருப்பினும் ஐரோப்பிய ஒன்றியத்தின், அமெரிக்க அரசின் குறிப்புகளை நாடாளுமன்றக் குழுவினர் கண்டு கொள்ளவில்லை. அவர்கள் இன்றுவரை தங்களது அறிக்கையை வெளியிடவில்லை.

இருப்பினும், முள்வேலி முகாம்களில் அடைத்துவைக்கப்பட்டிருக்கும் அப்பாவித் தமிழர்கள் சந்தித்துவரும் சித்திரவதையை சிங்களவர்களில் உள்ள சில மனிதாபிமானம் மிக்கவர்கள் வெளிப்படையாகப் பேசத் தவறவில்லை.

மே 14 ஆம் திகதியன்று வவுனியாவில் உள்ள முள்வேலி முகாம்களில் இருந்த தமிழ் மக்களைப் பார்த்த இலங்கையின் தலைமை நீதிபதி சரத் நந்தா சில்வா இவர்களுக்கு நாம் மிகப்பெரும் தீங்கை இழைத்துக் கொண்டிருக்கிறோம். இலங்கையின் நீதிஅமைப்பில் இவர்களுக்கு [illegible] போவதே இல்லை. இதைக் கூறுவதற்காக நான் தண்டிக்கப்படலாம் என்று ஜூன் 4 ஆம் திகதி வெளிப்படையாக அறிவித்தார்.

சிங்கள அறிவுஜீவிகளால் நடத்தப்பட்டுவரும் என்ற ஆங்கிலப் பத்திரிகையானது ஜூலை 2 ஆம் திகதியன்று முகாம்களில் அடைக்கப்பட்டுள்ள தமிழர்களின் நிலையை நேரடியாகக் கண்டறிந்த ஒருவரின் அனுபவத்தை வெளியிட்டது. சிங்களத்தில் இருந்து மொழியாக்கம் செய்யப்பட்ட அந்தக் கட்டுரை தமிழ் மக்களை அடைத்து வை[illegible]ள்ள முள்வேலி முகாம்கள் ஹிட்லரின் சித்திரவ[illegible] கொட்டடிகள்தாம் என்பதை உலகுக்கு உணர்த்தின.

ஐக்கிய நாடுகள் சபையில் செப்டெம்பர் 30 ஆம் திகதியன்று பேசிய அமெரிக்க அரசின் செயலாளரான ஹிலாரி கிளிண்டன் இலங்கை அரசானது கற்பழிப்பை ஆயுதமாகப் பயன்படுத்திவருகிறது என்று கூறினார்.

அவரைத் தொடர்ந்து, இங்கிலாந்து நாட்டின் வெளியுறவு செயலாளரான ரால்ப் மிலிபேணட் ஒக்டோபர் 14 ஆம் திகதியன்று வெளியிட்ட அறிக்கையில் முகாம்களின் நிலை மிகவும் மோசமாக உள்ளது. இந்த நிலை தொடருமானால் வரும் காலங்களில் இங்கிலாந்து அரசு அனைத்து நிதி உதவி களையும்நிறுத்திக்கொள்ளும்என்றுஎச்சரித்தார்.

அவரது வார்த்தைகள் வெற்று வார்த்தைகளாக இருக்கவில்லை. இலங்கையில் இருந்து ஐரோப்பிய ஒன்றியத்திற்கு ஏற்றுமதி[illegible]ாகும் பின்னலாடைகளுக்கு [illegible] வரை அளிக்கப்பட்டுவந்த [illegible] சலுகையை ஐரோப்பிய ஒன்றியம் டிசெம்பர் 17 ஆம் திகதியன்று தற்காலிகமாக விலக்கிக் கொண்டது.

சமாதான வெள்ளைக் கொடியுடன் சரணடைய வந்த புலிகளின் தலைவர்களையும் அவர்களின் குடும்பத்தினரையும் படுகொலை செய்யச் சொல்லி இலங்கை இராணுவத்தின் 58 ஆவது டிவிஷனின் தலைவரான பிரிகேடியர் சவேந்திர சில்வாவிற்கு உத்தரவிட்டது இலங்கை ஜனாதிபதியின் சகோதரரும், இராணுவ அமைச்சகத்தின் தலைவருமான கோத்தபாயா ராஜபக்ஷ தான் என்று இலங்கை இராணுவத்தின் தளபதியாக இருந்த ஜெனரல் சரத் பொன்சேகா டிசெம்பர் 12 ஆம் திகதியன்று இலங்கையின் 'சண்டே லீடர்' பத்திரிகையில் வெளிப்படையாகவே பேசினார்.

முகாமில் அடைக்கப்பட்டிருந்த இங்கிலாந்து நாட்டின் தமிழ் பிரஜையான வாணி குமார் டிசெம்பர் 20 ஆம் திகதியன்று இங்கிலாந்து நாட்டின் ஒப்சர்வர் பத்திரிகைக்குக் கொடுத்த நேர்காணலில், முகாமில் உள்ள ஒவ்வொரு தமிழச்சியும் எவ்வாறு கற்பழிப்பு சித்திரவதைக்கு சிங்கள அதிகாரிகளாலும், இராணுவத்தினராலும் உள்ளாக்கப் பட்டனர் என்பதை விவரித்து உள்ளார். அவரது கூற்றை உண்மைதான் என்று இலங்கை அரசின் மனித உரிமை அமைச்சகத்தின் செயலாளரான ராஜீவ் விஜய சேகர ஒத்துக் கொள்ளவும் செய்திருக்கிறார்.

இந்த ஆதாரங்களின் அடிப்படையில் டிசெம்பர் 21 ஆம் திகதியன்று ஐ.நா.சபை மீண்டும் இந்தப் பிரச்சினையைக் கையில் எடுத்திருக்கிறது. முதல் கட்டமாக, வெள்ளைக் கொடியுடன் சரணடைய வந்த புலிகள் இயக்கத்தின் மூன்று தலைவர்களையும், அவர்தம் குடும்பத்தி னரையும் நீங்கள் என்ன செய்தீர்கள்? என்ற கேள்வியை அது இலங்கை அரசுக்கு விடுத்திருக்கிறது.

இவை எவற்றையும் தமிழக அரசியல் கட்சிகள் கண்டுகொள்ளவில்லை.

இராஜ்ய சபையில் டிசெம்பர் 5 ஆம் தேதி சி.பி.ஐ. தலைவர் டி.ராஜா இலங்கையில் நடந்துவரும் இனப்படுகொலை குறித்து பேசியபோது இனப்படுகொலை என்ற வார்த்தையை அவைக்குறிப்பில் இருந்து நீக்க வேண்டும் என்று அவைத்தலைவர் உத்தரவிட்டுள்ளார்.

இராஜ்ய சபை அவைத் தலைவரின் தமிழ் இன எதிர்ப்பு நடவடிக்கையை எதிர்த்துத் தமிழக அரசியல் கட்சி ஒன்றுகூடக் குரல் கொடுக்க முன்வரவில்லை.

## இலங்கை அரசின் நடவடிக்கைகளும் தமிழக சட்டசபை அரசியல் கட்சிகளும்

போர் 2009 மே மாதம் 18 ஆம் திகதியன்று முடிவடைந்தது. இந்தப் போரில் சுமார் ஒரு லட்சத்து 40 ஆயிரம் வன்னித் தமிழ் மக்கள் காணாமல் போயினர். சுமார் 2 லட்சத்து 80 ஆயிரம் பேர் இலங்கை அரசால் முள்வேலி முகாம்களில் அடைக்கப்பட்டனர்.

இவ்வாறு அடைக்கப்பட்ட அல்லது அடைக்கப்படவிருந்த மக்களின் மறுவாழ்வுக்காகவென்று வடக்கின் வசந்தம் என்ற திட்டத்தை இலங்கை அரசு ஏப்ரல் 2009 இல் முன் வைத்தது. வன்னி மக்களின் மறுவாழ்வு என்ற சாக்கில் - போரின் மூலம் தான் கைப்பற்றப்போகும் வன்னிப் பெருநிலத்தையும், ஏற்கனவே தன் [illegible] யாழ் குடா [illegible] தனக்கு சாதகமான நிலப்பகுதியாக எவ்வாறு மாற்றி அமைப்பது என்பதே அந்தத் திட்டத்தின் அடிப்படை நோக்கமாகும்.



இந்தத் திட்டத்தை நடைமுறைப் படுத்துவதற்கான செயற்குழுவினை 2009 மே 7 ஆம் திகதியன்று இலங்கை அரசு ஏற்படுத்தியது. ஜனாதிபதியின் தம்பியும், ஆலோசகருமுமான பஸில் ராஜபக்ஷவின் தலைமையிலான 19 பேரைக் கொண்ட அந்தக் குழுவில் ஒருவர் கூடத் தமிழர் இல்லை என்பதே அந்தத் திட்டத்தின் உண்மை நோக்கத்தைப் புரிய வைப்பதாக அமைந்தது.

இந்த செயற்குழுவானது மூன்று நோக்கங்களுக்காக அமைக்கப்பட்டது:

வட ஈழத்தில் இராணுவ முகாம்களை நிறுவுவதும், சிங்களவர்களைக் கொண்ட சிவில் நிர்வாகத்தை நிறுவுவதும், கண்ணி வெடிகளை அகற்றுவதும் இந்தத் திட்டத்தின் முதல் நோக்கம்.

முகாம்களில் அடைக்கப்பட்டிருக்கும் வன்னி மக்களை மீண்டும் வன்னி நிலத்தில் குடியேற்றுவதும், அதற்குத் தேவையான அடிப்படைக் கட்டுமானங்களை நிறுவுவதும் இரண்டாம் நோக்கம்.

வவுனியா மற்றும் யாழ்ப்பாண நகராட்சித் தேர்தலை நடத்துவதும், 13 ஆவது அரசியல் சட்டத் திருத்தத்தை அமல்படுத்துவதும் மூன்றாம் நோக்கமாகும்.

வடக்கின் வசந்தம் என்று அழைக்கப்படும் இந்தத் திட்டம் முன்வைக்கப்பட்ட மறு நாளே இந்திய அரசு இந்தத் திட்டத்திற்கு 100 கோடி ரூபாய் நிதி உதவியை அறிவித்தது. மே 23 ஆம் திகதியன்று இந்தத் தொகை 500 கோடி ரூபாயாகக் கூட்டப்பட்டது. ஜூன் 25 ஆம் திகதி இலங்கை ஜனாதிபதியின் தம்பியும், அந்த நாட்டின் நிழல் ஜனாதிபதியாக செயல்பட்டுவரும் பஸில் ராஜபக்ஷ புதுடில்லி வந்திருந்த போது இந்தத் தொகையை 1000 கோடி ரூபாயாக உயர்த்தவும் மன்மோகன் அரசு முன்வந்திருப்பதாக செய்திகள் வெளியாயின.

தமிழ் மக்களை உள்ளடக்காத வடக்கின் வசந்தம் திட்டத்தின் நிர்வாகக் குழுவை எதிர்த்து தமிழக சட்டசபையோ, அதன் அரசியல் கட்சிகளோ வாய் திறக்கவில்லை. மாறாக, சிங்களவர்களின் தலைமையில் அமைந்த நிர்வாகக் குழுவிற்கு இந்திய அரசு அளித்த அங்கீகாரத்தை தமிழக ஆளும் கட்சி எவ்விதக் கேள்வியும் இன்றி ஆமோதித்தது. இந்த அடிப்படைத் தவறே அதனை மேலும் பல தவறுகளை இழைக்கத் தூண்டுவதாக அமைந்து விட்டது.

ஜூன் - ஜூலையில் சட்டமன்றக் கூட்டத் தொடர் நடந்துகொண்டிருந்த வேளையில் இலங்கைத் தூதுவரான ரோமேஷ் ஜெயசிங்கேவின் தலைமையில் ஒரு ஆய்வுக்கூட்டம் சென்னையில் நடந்தது ஜூலை 8 ஆம் திகதி நடந்த அந்தக் கூட்டத்தில் இந்து ராம், துக்ளக் சோ போன்றவர்கள் கலந்து கொண்டனர். இவர்களைத் தவிர்த்து ஓய்வு பெற்ற இராணுவ அதிகாரியும், இராணுவ ஆய்வாளருமான லெப்டினண்ட் ஜெனரல் ..ராகவன் கலந்து கொண்டு பேசினார். சிங்கள இராணுவத்தால் ஆக்கிரமிக்கப்பட்ட வன்னி நிலப்பகுதியில் அடுத்து வரும் சில மாதங்களிலேயே சிங்கள இராணுவம் மற்றும் பொலிஸ்துறையைச் சேர்ந்த சுமார் 2 லட்சத்து 50 ஆயிரம் பேர் குடியமர்த்தப்படலாம் என்ற தகவலை வெளியிட்டார். அவரது கருத்தை அந்த ஆய்வரங்கத்தில் இருந்த இலங்கைத் தூதர் மறுக்கவில்லை. ஜூலை 15 ஆம் திகதியன்று இதே கருத்தை சரத் பொன்சேகாவும் வெளியிட்டார்.

தமிழர்களுக்குச் சொந்தமான பகுதியில் சிங்களக் குடியேற்றத்தையும், இராணுவமயமாக்கலையும் உறுதிப்படுத்தும் இந்தக் கருத்துக்களை அப்போது நடந்து கொண்டிருந்த தமிழக சட்டமன்றம் கருத்தில் கொள்ளவில்லை. எனவே, ஈழ மக்களின் வாழ்வாதாரமான நிலத்தைப் பறிக்கும் சிங்கள இனவெறி அரசின் திட்டத்தை எதிர்த்து எவ்விதத் தீர்மானத்தையும் அவையில் கொண்டுவர இயலவில்லை.

வடக்கின் வசந்தம் என்ற நயவஞ்சகத் திட்டத்தினைப் புரிந்து கொள்ளாத காரணத்தினாலேயே ஒக்டோபர் 6 ஆம் திகதியன்று சீனாவுக்கு ராஜபக்ஷா அரசினால் அவசர அவசரமாகக் கொடுக்கப்பட்ட சாலை மற்றும் ரயில் பாதை ஒப்பந்தங்களை தமிழக அரசியல் கட்சிகள் புரிந்து கொள்ளவில்லை. பளைக்கும் காங்கேசன்துறைக்கும் இடையில் உள்ள ரயில் பாதையை அமைப்பதற்கும், வட ஈழத்தின் அனைத்து சாலைகளையும் செப்பனிடுவதற்குமான ஒப்பந்தத்தை சீன அரசு நிறுவனங்களுக்குத் தமிழ் மக்கள் எவரையும் கேட்காமலேயே ராஜபக்ஷ அரசு அளித்தது. இந்தப்பணிகளை செயல்படுத்த சீனர்கள் பெருமளவில் வட ஈழ நிலத்திற்கு வந்துள்ளனர்.

(12ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

CHILDREN'S WORLD

ஆரம்பம் 22.01.2010

சர்வதேச தரம் வாய்ந்த பாலர் பராமரிப்பு மற்றும் பாலர் பாடசாலை

இடம்:- No 16,2nd Lane Palaly Road Jaffna.

அமைதியான, பாதுகாப்பான சூழலில் பாலர் கல்வி மற்றும் பராமரிப்பில் காணப்படும் குறைகள் அனைத்தையும் நிவர்த்தி செய்யும் வகையில் விசேட திட்டங்களை உள்ளடக்கியது.

அனுமதிகள் மற்றும் மேலதிக விபரங்களுக்கு ARRUL GLOBAL EXPRESS இல 01, பிறவுண் வீதி, நாவலர் வீதி சந்தி யாழ்ப்பாணம் எனும் முகவரியில் தொடர்பு கொள்ளவும். T.P- 0778733576



நீங்கள் பீனிசம், பீனிச வாய்வு இளநரை, தலையிடி, தலைப்பாரம், மூக்கினால் இரத்தம் வடிதல், காதடைப்பு, கண்மங்கல் என்பவற்றால் அவதிப்படுகிறீர்களா?
இதோ பாவியுங்கள்

கண்ணுக்குக் குளிர்ச்சியும் முகத்திற்கு அழகும் உண்டாக்கி கூந்தலை நீளமாகவும் கறுப்பாகவும் அழகாகவும் வளரச் செய்யும் சித்த ஆயுர்வேத முறைப்படி தயாரிக்கப்பட்ட

சித்தாரா பொன்னாங்காணி தைலம்

பொன்னாங்காணித் தைலம் வாங்கும்போது வர்ணமூடியுடன் சித்தாரா டிஸ்பென்ஸரி வைத்திய முத்திரை குறியீடு உள்ளதா என பொதி செய்யப்பட்ட பெட்டியைத் திறந்து சரிபார்த்து வாங்குங்கள்

Manufactured By:
Sithara Products
Puttalam, Road, Chilaw.
(Reg.No: 6382)AR/PR/No.228

யாழ்.மாவட்ட ஏக விநியோகஸ்தர்
சிவா நறுமணப்பூங்கா
இல.288,ஆஸ்பத்திரிவீதி, யாழ்ப்பாணம்,
தொ.பே: 021 222 2567


## வீடு விற்பனை

பருத்தித்துறை வீதியில் இருபாலைச் சந்தி, பழம் வீதியை முகப்பாகக் கொண்ட இடத்தில் புதுக் கல்வீடும் அதற்குரியதுமான காணியும் விற்பனைக்குண்டு.

கே.நவரட்ணம்,
இல.4, கோயில் வீதி ஒழுங்கை,
கல்வியங்காடு,
0213219747

S.ரகுநாதன்
இருபாலைச் சந்தி,
பருத்தித்துறை வீதி,கோப்பாய் தெற்கு.
T.P: 0779239355

(91598)

## தவறவிடப்பட்டது

No. 23, 5ஆம் ஒழுங்கை, அரசடிறோட், நல்லூர், யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் வசிக்கும் சிவராசா பிரசண்ணா என்பவரது தேசிய அடையாள அட்டை (781160318v), அலுவலக அடையாள அட்டை, விசேட அடையாள அட்டை, வாகன அனுமதிப் பத்திரங்களுடன் ஒரு தொகைப்பணமும் (19, 150/=) 20.12.2009 அன்று அல்லைப்பிட்டிக்கும், மண்டைதீவுக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் மேற்படி முகவரியில் ஒப்படைக்கவும் அல்லது கீழ்வரும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

தொ.பே: 0776258289, 0776787915

Note: அடையாள அட்டை அவசரமாகத் தேவைப்படுவதால் கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து உடனடியாகத் தொடர்பு கொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (91787)

## சட்டவிரோத மின் இணைப்பு; 6 பேருக்கு அபராதம்

சுன்னாகம் மின்சார சபை ஊழியர்களும், பொலிஸாரும் இணைந்து கடந்த புதன்கிழமை இரவு மேற்கொண்ட நடவடிக்கையின் போது சட்டவிரோதமாக மின் இணைப்பைப் பெற்றிருந்த 6 பேர் கண்டுபிடிக்கப்பட்டு கைது செய்யப்பட்டுள்ளனர்.

மல்லாகம், ஊரெழு, சுன்னாகம், ஏழாலை ஆகிய இடங்களில் சட்ட விரோத மின்பாவனையைக் கட்டுப்படுத்தும் நோக்கில் மேற்கொள்ளப்பட்ட இந்தத் திடீர் நடவடிக்கையின்போதே இந்த 6 பேரும் கைது செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இவர்கள் மல்லாகம் நீதிவான் நீதிமன்றத்தில் நேற்று ஆஜர் செய்யப்பட்டனர். அதன்போது தலா 15 ஆயிரம் ரூபா அபராதமாக இவர்களிடம் அறவிடப்பட்டது. (04)

## தடகளக் கருத்தரங்கு

யாழ்ப்பாணம், டிசெ.26

யாழ்.பல்கலைக் கழக விளையாட்டு விஞ்ஞான மாணவர் ஒன்றியமும் யாழ். மாவட்ட மெய்வல்லுனர் சங்கமும் இணைந்து ஏற்பாடு செய்துள்ள விளையாட்டு விஞ்ஞான அலகில் கல்வி கற்கும், கல்வி கற்று வெளியேறிய மாணவர்களுக்கான தடகளக் கருத்தரங்கு இன்று சனிக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் திருநெல்வேலி முத்துத்தம்பி மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

இக்கருத்தரங்கினை இலங்கை மெய்வல்லுநர் சங்கப் பொதுச் செயலாளர் நடத்தவுள்ளார். (04-09)

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி சபாரத்தினம் அன்னம்மா

அன்னையின் மடியில் 02.03.1934

ஆண்டவனின் அடியில் 19.12.2007

திதி: தசமி (26.12.2009)

''வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்''

அம்மா! எங்களின் இதயத் தெய்வமே!
உங்களின் உயர்ந்த இலட்சியங்களை
எங்களின் நெஞ்சினிலே சுமந்து
நீங்கள் காட்டிய சத்தியப் பாதையில்
நாங்கள் உறுதியுடன் செல்லுவோம்!
உங்கள் ஆத்மா சாந்தியடைய
நாங்கள் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்நி!!!

இமையாணன் மேற்கு,
அல்வாய் வீதி,
உடுப்பிட்டி.

பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(91776)

## நெஞ்சை விட்டகலாத 5 ஆம் ஆண்டு நினைவில்

மலர்வு: 08 - 01 - 1980

உதிர்வு: 26 - 12 - 2004



### அமரர் தனுசியா கொன்சன்ரைன்

(யாழ். தேசிய கல்வியியற் கல்லூரி முகிழ்நிலை ஆசிரியை, யா/ தும்பளை சிவப்பிரகாச வித்தியாலய உள்ளகப் பயிற்சி ஆசிரியை)

எம் இனிய செல்லமே!
எம்மைப் பாதி வழியில் பரிதவிக்க விட்டோடி
ஆண்டுகள் ஐந்து ஆனதம்மா- ஆனால் ஆறவில்லை எம்மனவலி.
கோடி தவமிருந்தாலும் தேடிட முடியுமா உங்களை
ஏங்கித் தவித்துத் துடிக்கின்றோம்
ஏனிந்தக் கதியெமக்கு எப்படித்தான் தாங்கிடுவோம்
எண்ணி எண்ணித் தவிக்கின்றோம் எப்போ எம்மிடம் வருவீரென...

இலக்குமி வாசா, மாரக்காய்.
புலோலி தெற்கு,புலோலி.

குடும்பத்தினர்.

## 5 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு: 05.01.1924

உதிர்வு: 26.12.2004



அமரர்

### கந்தப்பு கிருஷ்ணபிள்ளை(விசகடி வைத்தியர்)

அள்ளி அணைத்துச் சீராட்டிப் பாராட்டி
அவனியிலே எம்மை ஆளாக்கி விட்டுவிட்டு
உங்களை நாம் பார்க்கும்போது உலகைவிட்டுச் சென்றீர்களே!
உங்களது இனிய வதனத்தை இனி எங்கு காண்போம் ஐயா!

'இலக்குமி வாசா',
மாரக்காய்,
புலோலி தெற்கு; புலோலி.

(சி/563480)

குடும்பத்தினர்.

## 5 ஆம் ஆண்டு நினைவலைகள்

அன்னை மடியில் 25.07.1960



கந்தசாமி மனோகரன்

அன்னை மடியில் 15.01.1991



மனோகரன் செந்தூரன்

ஆழியின் பிடியில் 26.12.2004

கடலுக்குள் பள்ளி கொண்டு காவியராய் மாறிவிட்டீர்
அலைகளுக்குள் அள்ளுண்டு ஐந்தாண்டு ஒழிந்துவிட்டீர்
எம்இனிய உறவுகளே! பன்னிருசெல்வங்களே!
காணுகின்றோம் உமை என்றும் காளித்தாய் பாதத்தில்

மில் ஒழுங்கை,
மல்லாகம்.

பாலன்மோகனா
பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வார வசந்தம்



# பரதக் கலைச் சிற்பங்கள்

நாட்டிய கலாவித்தகர் உ. உமாமகேஸ்வரி (B.F.A), உடுவில் தெற்கு.

(கடந்தவாரத் தொடர்ச்சி)

மாமல்லபுரத்திலே தண்டு முனிவருக்கு சிவபெருமான் பரதத்தை கற்பிப்பதும் தண்டு முனிவர் பரதமுனிவருக்கு கற்பிப்பதையும் குறிக்கும் சிற்பங்கள் செதுக்கப்பட்டிருப்பதைக் காணலாம். பல்லவ மன்னன் மகேந்திர வர்மனால் கட்டப்பட்ட சீயமங்கலம் குடைவரைக் கோயில் தூணின் மேற்புறத்தில் நான்கு கைகளுடன் கூடிய நடராஜர் வடிவம் ஒன்று காணப்படுகிறது. இச்சிற்பம் சிவபெருமான் ஆடல் வல்லானாகக் காட்சி தரும் சிற்பங்களில் பழமையானதாகும். இதனைக் கொண்டே சோழமன்னர்கள் நடராஜரின் செப்புத்திருமேனிகளை உருவாக்கினர் என்றும் கூறலாம். 3ஆம் குலோத்துங்க சோழர்கால திரிபுவன கம்பஹரேஸ்வரர் கோயிலில் உள்ள நாட்டியமாடும் நங்கையர், இசைக் கருவிகளை இசைப்போர், இராமாயணக் காட்சிகள் போன்ற சிற்பங்கள் காணப்படுவதுடன் புள்ளமங்கை பசுபதிக் கோயிலின் விமானத்தில் ஆடற்பெண்டிர், இசைக்கலைஞர் போன்ற 19 சிற்பங்கள் காணப்படுகின்றன. சிற்பங்கள், ஓவியங்கள் ஊடாக கரணங்கள் பற்றிய ஆய்வினை அண்மையில் மேற்கொண்ட குரு கலாநிதி பத்மா சுப்ரமண்யம் அவர்கள் தனது ஆய்விலே குறிப்பிட்ட ஒரு சிறு பகுதியை இங்கே தருகின்றேன்.

"அனேகமாக இன்று கிடைத்துள்ள நடன சிற்பங்கள் யாவுமே கி.பி 11-13ஆம் நூற்றாண்டு காலத்தவையே! இவை பிற்காலச் சோழர்காலத்து நடன செய்முறையை விளக்குவன... தேர்வடிவில் அமைந்திருந்த சபை ..... நான்கு திசைகளிலும் வானளாவி ஆகாயத்தோடு உறவாடும் கோபுரவாயில்களின் உட்சுவர்களில் விளங்கும் கரணச் சிற்பங்கள்....... ராஜாக்கள் தம்பிரான் திருமாளிகை என்ற பெயரில் திருச்சுற்று மாளிகையாக இருக்கிறது. அதன் அடிப்புறத்தில் பல்லாயிரக் கணக்கான நடனச் சிற்பங்கள்..... " இவர் குறிப்பிட்ட இவ்விடயங்கள் சிதம்பரம் கோவிலைச் சார்ந்ததாகும். பரத நாட்டியத்தில் மார்க்கம், தேசி ஆகிய இரண்டு நடன உத்திகளையும் இச்சிற்பங்கள் வாயிலாக இவர் ஆராய்ந்தார்.

பரதக்கலைச் சிற்பங்களிலே எம்பிரானின் தாண்டவ சிற்பங்களே அதிகம் எண்ணிலும், எழுத்திலும் அடங்காதவை எனினும் சில முக்கியமானதும் சிறப்பானதுமான சிற்பங்கள் வருமாறு:

* தில்லைச் சிதம்பரம் கோயில் கோபுரங்கள், நடராசர்கோயில் சுற்று சுவர்களிலும் தில்லை சிவகாமியம்மன் கோயில் சுற்றுச் சுவர்களிலும் 108 கரணங்கள் உள்ளன.
* தில்லை நடராஜர் கோயிலில் மூலவராக அருளும் ஐம்பொன்னலான ஆடல் வல்லான் திருமேனியும், அதன் எதிரே கொடிமரத்தருகே உள்ள நிருத்த சபையிலுள்ள கருவறையில் கல்லாலான ஊர்த்துவ தாண்டவ மூர்த்தியும் மிகச்சிறப்பானவை.
* பாண்டியமன்னன் இராசசேகரனுக்காக சிவபெருமான் கால்மாறியாடியதாக திருவிளையாடல் புராணம் கூறும் இக்கதையை விளக்கும் கால்மாறியாடிய தாண்டவமூர்த்தியின் சிற்பம் மதுரை மீனாட்சியம்மன் ஆலயத்தில் காணப்படுகின்றது.
* இடது காலை மடித்து முன்புறமாக ஊன்றி, வலது காலைப் பின்புறம் மடித்து வைத்து இடது கையை மேலேயும் வலதுகையை டோலமாகவும் விட்டு அதே இடது கையில் பந்தை எறிந்து பிடிக்கும் வியத்தகு நடனமான லதா விருச்சிக கரண மூர்த்தியை காஞ்சிக் கைலாசநாதர் கோயிலின் வெளி மண்டபத்தின் வலப்புற, இடப்புற சுவர்களில் காணலாம்
* சென்னை ஸ்ருதி கலைக்கூடத்தினர் இறைவனின் 108 தாண்டவ நிருத்தங்களில் ஒன்றாகிய சங்காவஹரனர் வினை 5 1/2 அடி உயரத்தில் செதுக்கி வைத்துள்ளனர். ஒரு கையை நிலத்தில் ஊன்றி இரண்டு கால்களையும் மேலே செங்குத்தாய்த் தூக்கியிருப்பதாக கங்காவதஹரனா கரணம் அமைந்திருக்கும்.
* வீணாதர தட்சணாமூர்த்தியைக் காட்டிலும் மிருதங்கத்தைக் கையில் வைத்திருக்கும் தட்சணாமூர்த்தியின் சிற்பமொன்று 'வெட்டுவான் கோயிலில் இருப்பதாகக் கூறப்படுகின்றது.
* திருப்பரங்குன்றம் குடைவரைக் கோயிலில் சப்தமாதர்கள் நடனக்கோலத்தை சிலையாக அமைத்திருப்பதைக் காணலாம்.
* பல விஷ்ணு ஆலயங்களில் விஷ்ணு பவானின் பத்து அவதாரங்களும் சிற்பமாக்கப்பட்டுள்ளன.

இவற்றைவிட பரதநாட்டியத்தில் பயன்படுத்தப்படும் பக்கவாத்தியங்களும் சிற்பமாக ஆலய சுவர்களை அலங்கரிக்கின்றன. பறை, முழவு, முரசு, உடுக்கு, புல்லாங்குழல், யாழ், தாளம் என்பன சிற்பங்களில் இடம்பிடித்திருகின்றன. அதாவது ஆடல் வல்லான் கையில் உடுக்கையும், நந்தியம் பெருமான் கையில் முழவும் (மத்தளம்) ஆடல் வல்லானுக்கு அருகே குடமுழவும், திருமால் கையில் சங்கும், கிருஷ்ணன் கையில் புல்லாங்குழலும், கலைமகள் கையில் வீணையும், சில சக்தியின் உருவங்களில் வீணையும், திருஞானசம்பந்தர் கையில் தாளமும் செதுக்கப்பட்டிருப்பதைக் காணலாம். சிற்பங்கள் குறிப்பிடும் ஒப்பனையும் இங்கு நோக்குதற்குரியது. சிற்பங்களில் காணப்படும் மகுடம், காது, குண்டலம், ஹாரம் (மாலை), கடிபந்தனம் (ஒட்டியானம்) போன்றவையும் இன்றும் பலவும் ஆடை வடிவமும், தலையலங்காரமும், பரத நாட்டிய ஒப்பனைபற்றிய செய்தியைக் கூறுகின்றன. நாட்டியக் கலையில் பிரசித்தி பெற்றவர்களான ஸ்ரீமதி ருக்குமணிதேவி ஸ்ரீமான் உதயசங்கர், ஸ்ரீமதி ராகினிதேவி, ஸ்ரீமதி மேனகா போன்றோர் தமது நடனத்திற்கு வேண்டிய ஆடை, ஆபரண ஒப்பனைகளை இவ்வாறான சிற்பங்கள் ஓவியங்களிலிருந்தே அறிந்து மேற் கொண்டிருந்தனர்.

இவ்வாறாக நாட்டியக் கலைச் சிற்பங்கள், அதன் தொகை என்பன இவ்விரு கலைகளுக்குரிய தொடர்பினையும், ஒற்றுமைப் பாங்கினையும், ஒன்றை ஒன்று தங்கியிருக்கும் நிலையினையும் எடுத்துக் காட்டுகின்றன. எப்படியிருப்பினும் பரதக் கலைச் சிற்பங்கள் என்னும் தலைப்பு இன்றும் பன்மட்ங்கு ஆராயப்பட வேண்டிய ஒன்று என்பது உண்மை. * * *

# இலங்கையில் தமிழ் நாடகம்

(கடந்தவாரத் தொடர்ச்சி)

நான், பள்ளி மாணவனாக இருந்த காலத்தில் இலங்கையில், குறிப்பாக யாழ்ப்பாணத்தில், பாடசாலையிலும் சரி, வெளி உலகிலும் சரி நாடகங்கள் நடிக்கப்படுவதில்லை என்றே சொல்லலாம். எங்காவது எப்பொழுதாவது நாட்டுக்கூத்துக்கள் நடக்கும். அவற்றை அவ்வப்பகுதி மக்கள் சென்று பார்ப்பார்கள்.

பம்மல் சம்பந்த முதலியாரது நாடகங்களால் கவரப்பட்ட கலையரசு சொர்ணலிங்கம் அவரது நாடகங்கள் சிலவற்றை இலங்கையில் பல இடங்களிலும் நடித்துக் காட்டினார். ஆனால் அவர் தொடக்கி வைத்த நாடக மரபு தொடர்ந்து வளரவில்லை என்று வரலாறு சொல்கிறது. அங்கொன்றும் இங்கொன்றுமாக ஒரு சிலர் அவரது நாடகங்களைப் பின்பற்றி நாடகங்கள் நடித்திருக்கலாம். எல்லோரும் ஒரு சில நாடகங்களுடன் களைத்துப்போவர்.

நாடகங்கள் இருந்தால் தானே நடிப்பதற்கு? தென்னிந்திய நாடகங்கள் எல்லோருக்கும் கிடைக்கவில்லை. அவற்றில் இலங்கையருக்கு ஈர்ப்பும் இல்லை. அந்தக் காலத்தில் நாடகங்களை நடிப்பதற்கேற்ற வசதிகளும் குறைவு. அந்தக் கால வாழ்க்கை முறை அப்படி!

இலங்கையில் தொழில் முறை நாடகக் குழுக்கள் என்றுமே எங்குமே இருந்ததில்லை. நடிக்கப்பட்டவை நாடகங்களாயினும் சரி, நாட்டுக் கூத்துகளாயினும் சரி அவற்றின் அரங்கேற்றங்களுக்குப் பிரவேசம் இலவசம்!

தென்னிந்தி[illegible]க் குழுக்கள் சில[illegible] தெருக்கூத்து[illegible] சொல்லப்படுகி[illegible] இலங்கைக் கலைஞர்களும் அவர்களுடன் சேர்ந்து அவற்றை நடித்தனர். தெருக்கூத்துக்கள் எங்காவது எப்பொழுதாவது திருவிழாக் காலத்தில், சில கோயில்களில் நடக்கும். அவற்றில் எல்லாமே கர்நாடக சங்கீதப் பாட்டுத்தான்.

காட்சிகளுக்கிடையில் பபூன் என்று அழைக்கப்படும் கோமாளி மேடையில் தோன்றி கதைத்தொடர்புகளைச் சொல்வதுடன், யாழ்ப்பாணப் பேச்சு வழக்குத் தமிழில் பகிடிகளும் விடுவார். சிரிப்பூட்டுவதற்காகவே அந்தக் காலத்தில் யாழ்ப்பாணப் பேச்சு வழக்குத் தமிழ் மேடைகளில் பயன்படுத்தப்பட்டது.

## பேராசிரியர் கணபதிப்பிள்ளையின் நாடகப்பணி

இந்தப்பின்னணியில் வைத்துத்தான் பேராசிரியர் கணபதிப்பிள்ளையின் நாடகப் பணியை மதிப்பிட வேண்டும். பேராசிரியரது நாடகப்பணி:

1. நாடகங்களே இல்லாதிருந்த தமிழ் மொழிக்கு நவீன நாடகங்கள் தந்தார்.
2. இலங்கை மக்களது வாழ்க்கையைச் சித்திரிக்கின்ற நாடகங்களை முதன் முதலில் எழுதினார்.
3. யாழ்ப்பாணப் பேச்சு வழக்கால் தமிழுக்கு ஒரு இலக்கிய அந்தஸ்தைப் பெற்றுக் கொடுத்தார்.

நாடகம் என்பது நடிப்பதற்கு உரியது. நாடகத்தை நடிக்கும் பொழுது தான் அதிலிருந்து உச்சப் பயன்பாட்டைப் பெறுகின்றோம். நடிக்கப்படாத நாடகங்களால் அதிக பயனில்லை!

கலாநிதி வித்தியானந்தன் பேராசிரியரது நாடகங்களை உடனுக்குடன் தயாரித்து அரங்கேற்றியமையால் தான் பேராசிரியரும் புத்தூக்கம் பெற்று, மேலும் மேலும் நாடகங்களை எழுதினார். தமிழ் மக்களும் மண்வாசனை நாடகங்களின் சிறப்பை அறிந்து கொண்டனர்.

## பேராசிரியர் பேச்சு வழக்கில் நாடகங்கள் எழுதியது ஏன்?

பேராசிரியர் தனது இரு நாடகங்கள் என்ற நூலின் முன்னுரையில் பம்மல் சம்பந்த முதலியாரது நவீன நாடகங்களை முன்னுதாரணம் காட்டியிருக்கிறார். அது மட்டும் காரணமன்று.

அவர் லண்டன் பல்கலைக்கழகத்தில் மொழி ஆராய்ச்சி படித்துக் கலாநிதிப் பட்டம் பெற்றவர். அங்கே பல மொழிகளைப் படித்திருப்பார். மொழிகளின் இயல்பு, ஆற்றல், வளர்ச்சி என்று பல்கோணங்களில் இருந்து ஆராய்ச்சி செய்திருப்பார். பேச்சு வழக்கில் எழுதப்பட்ட ஹென்றிக் இப்சன், அன்ரன் செக்காவ், பெர்நாட்ஷா போன்றோரது நாடகங்களை நிச்சயமாக வாசித்திருப்பார். அதன் காரணமாகவே அவர் பேச்சு வழக்கில் நாடகங்கள் எழுதத் துணிந்திருப்பார்.

இலங்கைப் பல்கலைக்கழகத்தின் முதலாவது தமிழப் பேராசிரியராக இருந்த சுவாமி விபுலானந்தரும் பேராசிரியரது நாடகங்களைப் பாராட்டியிருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

## பேராசிரியரது நாடகங்களின் செல்வாக்கு

இலங்கை வானொலியின் தமிழ் சேவையினரே பேராசிரியரது நாடகங்களின் சிறப்பை உடனடியாக அறிந்து கொண்டனர். ஆரம்பத்திலிருந்து தென்னிந்தியப் பேச்சு வழக்கு நாடகங்களை ஒலிபரப்பிக் கொண்டு வந்த தமிழ்ச் சேவை, திடீரென்று இலங்கை மண்வாசனை நாடகங்களை ஒலிபரப்பத் துவங்கியது. அன்றில் இருந்து, அது இலங்கை மண்வாசனை நாடகங்களை ஒலிபரப்புவதையே கொள்கையாகக் கொண்டு செயற்பட்டு வருகிறது.

அந்த நாடகங்களைப் பலர் எழுதினர். ஆனால் இலங்கையர்கோனது பெயர் மட்டும் தான் எனக்கு ஞாபகம் இருக்கிறது. துரதிர்ஷ்டவசமாக அவர் தமது நாடகங்கள் எதனையும் அச்சுவாகனம் ஏற்றவில்லை. நூலாக்கியிருந்தால், இன்று வளராமல் கிடக்கிற தமிழ் நாடகத்துறைக்கு அது பெரும் பங்களிப்பாக இருந்திருக்கும்!. அடுத்து வந்த முஸ்லிம் சேவையும் இலங்கை வாழ் முஸ்லிம்களது சமகால வாழ்க்கையைச் சித்திரிக்கும் நவீன நாடகங்களையே தயாரித்து ஒலிபரப்பி வருகிறது. பேராசிரியரது நாடகங்களின் அரங்கேற்றங்களை எத்தனை பேர் பார்த்திருக்கப் போகிறார்கள்? இலங்கை வானொலி நாடகங்களை இலங்கையர் எல்லோரும் கேட்டு மகிழ்கின்றனர். இலங்கை மண்வாசனை நாடகங்களின் சிறப்பைப் பிரபல்யப்படுத்தியதில் இலங்கை வானொலிக்கும் பெரும் பங்கு உண்டு. இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனமும் இலங்கை மண்வாசனைத் தமிழ் நாடகங்களையே ஒளிபரப்பி வருகிறது.

## மேடை நாடகங்கள்

இலங்கையின் மேடை நாடகங்கள் நடிக்கப்படுவது குறைவு. அப்படி நடிப்பவர்களும் இலங்கை மண்வாசனை நாடகங்களை விரும்பி நடித்ததாகத் தெரியவில்லை. புராண, இதிகாச நாடகங்கள், கவிதை நாடகங்கள், பண்டாரவன்னியன் போன்ற வரலாற்று நாடகங்கள், நாட்டுக் கூத்துக்களே மேடைகளில் பெரிதும் நடிக்கப்பட்டதாகத் தெரிகிறது.

யாழ்ப்பாணக் குடாநாட்டில் ஒரு காலத்தில் அடங்காப்பிடாரி, வெளிக்கிட்டி விஸ்வமடுவுக்கு, தம்பி கொழும்பிலை போன்ற மேடை நாடகங்கள் அட்டகாசமாக அரங்கேற்றப்பட்டன. அவை யாழ்ப்பாணப் பேச்சு வழக்கில் எழுதப்பட்ட நகைச்சுவை நாடகங்கள். அவை நடிக்கப்படாத கிராமங்களே யாழ்ப்பாணக் குடாநாட்டில் இல்லை என்று சொல்லலாம்.

அந்தமாதிரி வேறும் பலர் இலங்கையின் வெவ்வேறு பாகங்களில் மண்வாசனை நாடகங்களை எழுதி நடித்திருக்கலாம். அவை எல்லாவற்றையும் நான் பார்த்தேனா என்ன? இது ஒரு முழுமையான நாடக வரலாற்றுக் கட்டுரையுமல்ல. எனக்குத் தெரிந்ததை எழுதுகிறேன். நவீன நாடகங்களின் சிறப்பையும் வளர்ச்சியையும் கூறுவதே எனது நோக்கம். இன்று அதுதான் நாடகம். ஏனையவை எல்லாம் நவீன நாடகம் எழுதமாட்டாதவர்களாலும், எதையாவது வித்தியாசமாகச் செய்ய விரும்புவர்களாலும் எழுதப்படுபவையே!

## நாடகப் பணி

கலாநிதி தயாரித்த பேராசிரியரின் கடைசி நாடகம் துரோகிகள். அதிலும் சுந்தரம் எங்கே? நாடகத்திலும் நான் நடித்தேன். பேராதனைப் பல்கலைக்கழக நாடகங்களில் நடிக்கக் கிடைத்த வாய்ப்பை நான் ஒரு பெரும் பாக்கியமாகவே கருதுகிறேன். அதனால்தான் துணிவும் தன்னம்பிக்கையும் பெற்று, நேர்கோட்டில் முன்னேறினேன். இல்லையென்றால் எது சரி, எது பிழை என்று தெரியாமல் தடுமாறிக் கொண்டு நின்றிருப்பேன். இது ஆண்டவன் எனக்குக் கொடுத்த வாய்ப்பு என்றே நினைக்கிறேன்!

## நவீன நாடகங்களின் இன்றைய நிலை.

### தமிழ்த்தின போட்டிகள்

முன்பெல்லாம் தமிழ்த்தின போட்டிகளுக்கான சுற்றறிக்கைகளில் மேடை நாடகம் 30 நிமிடங்கள் என்று பொதுவாகப் போடுவார்கள். போட்டிக்கு புராண இதிகாச நாடகங்கள், கவிதை நாடகங்கள், குறியீட்டு நாடகங்கள், இலக்கிய நாடகங்கள், நவீன நாடகங்கள் எல்லாம் வரும். நடுவர்கள் பாடு பெரிய சங்கடமாய் போய்விடும். முடிவுகள் அறிவிக்கப்பட்டதும் நடுவர்களுக்கு திட்டுகளும் வசவுகளும் தாரளமாகக் கிடைக்கும். நானே இரண்டு முறை நடுவராகப் போய் திண்டாடியிருக்கிறேன். அத்தோடு அந்த வேலைக்கே ஒரு கும்பிடு போட்டுவிட்டேன்.

சிலர் சுற்றறிக்கைகளை வாசித்தால் சிரிக்கலாம். "நாடகத்தின் கதை சமகாலத்ததாக இருக்க வேண்டும். ஆனால் உரையாடல் நியமத்தமிழில் இருக்க வேண்டும்." என்றது ஒரு சுற்றறிக்கை அது எப்படி முடியும் யோசித்துப் பாருங்கள், பேசிப்பாருங்கள் சிரிப்புத் தானாகவே வரும். இவற்றை எல்லாம் சுட்டிக்காட்டி நான் பத்திரிகைகளுக்கு கட்டுரைகள் எழுதினேன். எனது நூல்களிலும் எழுதினேன்.

அதன் பிறகு நாடகம் சமூக நாடகமாக இருக்க வேண்டும். பாத்திரங்கள் தமது இயல்பான மொழியில் பேச வேண்டும். அது எல்லோருக்கும் நன்கு விளங்க வேண்டும். என்று சுற்றிக்கை வந்தது. தமிழ்த்தினப் போட்டிகளில் சில ஆண்டுகள் சமூக நாடகங்கள் அரங்கேறின.

இந்த ஆண்டு தமிழ்த்தினப் போட்டிக்கு இலக்கிய நாடகங்களை அனுப்பி வைக்கும் படி ஒரு சிறிய அறிவுறுத்தல் மட்டும் பாடசாலைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டது. இருக்கவே இருக்கின்றனவே எங்கள் புராண இதிகாசங்கள். எல்லாப் பாடசாலைகளும் புராண இதிகாச நாடகங்களையே போட்டிக்கு அனுப்பி வைத்தன. பழைய படி வேதாளம் முருங்கை மரத்தில் ஏறிவிட்டது! நான் தமிழ்த்தின விழா நாடகப் போட்டிகளைப் போய்ப் பார்க்கவில்லை. பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்ட போட்டி முடிவுகளை வாசித்து அறிந்த விடயம் இது.

### அரசாங்க விழாக்களில்....


பிரதேச செயலர் பிரிவுகள் தோறும் கலைவிழாக்கள் நடத்தப்பட்டன. அவற்றில் நாடகங்கள் குறைவு. சிலவற்றில் நாட்டுக்கூத்துக்கள் ஆடப்பட்டன. வட மாகாண சபையின் தமிழ் சபையின் தமிழ் இலக்கிய விழா இந்த ஆண்டு யாழ்ப்பாணத்தில் நடந்தது. அதில் ஒரு நவீன நாடகம் கூட நடிக்கப்படவில்லை. இரண்டு நாட்டுக் கூத்துக்கள் ஆடப்பட்டன.

### இலங்கையில் தமிழ் நாடகத்துறை வளர...

ஒரு வரையும் குறை சொல்லக்கூடாது. பாடப்புத்தகங்களில் புராண இதிகாச நாடகங்களும் மிருகங்களின் நாடகங்களும். பல்கலைக்கழகங்களில் கவிதை நாடகங்களையும் நாட்டுக்கூத்துக்களையும் கற்பிக்கிறார்கள். எனவே தமிழ் மக்கள் அவைதான் சரியான நாடகங்கள் என நினைத்து, அவற்றையே படித்தும் நடித்தும் இன்புறுகின்றனர்.

முதலில் மாணவர்களுக்கு நவீன நாடகம் கற்பிக்க வழி செய்ய வேண்டும். அப்போது தான் இலங்கையிலும் தமிழ் நாடகத்துறை வளரும். * * *

கலாபூசணம் அராலியூர், ந.சுந்தரம்பிள்ளை



கருத்தும் ஓவியமும்: எஸ்.கே. கிருபா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### ஈழத்தமிழர்கள் படுகொலை....

(09 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அவர்களது செயல்பாடுகள் சாலைப் பணிகளோடு நின்றுவிடுமா அல்லது தமிழ் மக்களை எதிர்காலத்தில் முற்றிலுமாக ஒடுக்குவதற்கான திட்டமிடலில் சிங்கள அரசுடன் அவர்களது செயல்பாடுகள் கைகோர்க்குமா என்பதுதான் இன்று கேள்விக்குறியாக உள்ளது.

ஜூன் மாதம் தொட்டு முகாம்களில் இருந்து தமிழ் மக்களை விடுவிக்க வேண்டும் என்ற கோஷமே தமிழகத்தில் ஓங்கி ஒலித்தது. ஆனால், முகாமில் இருந்து புலிகள் என்று முத்திரை குத்தப்பட்டு காணாமல் போன பல்லாயிரக்கணக்கான இளைஞர்கள் குறித்து தமிழக அரசியல் கட்சிகள் எவ்விதக் கவலையையும் கொள்ளவில்லை. சிங்கள இராணுவத்தால் கைது செய்யப்பட்ட புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த போராளிகளை சர்வதேச போரியல் சட்டங்களின் அடிப்படையில் போர்க் கைதிகளாகத்தான் பாவிக்கவேண்டும் என்ற கருத்தை சர்வதேச அளவில் மனித உரிமை இயக்கங்கள் வலியுறுத்தின. சிங்கள அரசின் சித்திரவதைக் கொட்டடிகளில் வீழ்ந்து கிடக்கும் ஆயிரக்கணக்கான தமிழ் இளைஞர்களைக் காக்கும் அந்த அதி முக்கியக் கருத்தையும் தமிழக சட்டசபைக் கட்சிகள் கண்டுகொள்ளாமல் இருந்து விட்டன.

முள்வேலி முகாம்களில் இருந்து மீள்குடியேற்றம் எவ்வாறு நடத்தப்படும் என்ற முக்கிய கேள்வியைக் கேட்கவும் அவை மறந்து போயின.

ஒக்டோபர் 11 ஆம் திகதியன்று இலங்கைக்கு சென்ற தமிழக எம்.பிக்கள் குழு தமிழகம் திரும்பிய ஐந்தாவது நாளில் முகாம்களில் அடைக்கப்பட்ட அரைவாசிப்பேர் அவரவர் இடங்களில் குடியமர்த்தப்படுவார்கள் என்பதை தமிழக ஆளும் கட்சியின் கூட்டணியானது தனது வெற்றியாக சித்தரித்தது. இருப்பினும், விடுவிக்கப்பட்ட மக்கள் அவர்தம் இடங்களுக்குச் செல்லும்போது எப்படிப்பட்ட அவலத்தை சந்திக்கவேண்டிவரும் என்பது குறித்து அது பேச மறந்து போனது.

சிங்கள இராணுவத்தால் கைகாட்டப்பட்ட இடத்தில் மட்டுமே - தத்தம் குடும்பத்து இளைஞர்களையும், அனைத்து வாழ்வாதாரத்தையும் இழந்த - தமிழ்த் தாய்மாரர்களும், வயோதிபர்களும், சிறார்களும் குடியேறவேண்டிய உச்சபட்ச அவல நிலை... இப்படிப்பட்ட ஒரு அவல நிலையை விடுதலை என்று கூறும் தமிழக சட்டமன்ற அரசியல்வாதிகளின் சிந்தனையை என்னென்று கூறுவது? முகாம்களில் இருந்து விடுதலை செய்யப்பட்ட அவர்களின் தற்போதைய கொடூரமான சூழ்நிலையை ஐ.நா.சபையின் மனித உரிமை செயலகத்தின் செய்திப் பிரிவு வெளியிட்ட செய்தி ஒன்று மிகத் தெளிவாகத் தெரிவிக்கிறது.

#### ஈழத் தமிழர் மீதான இலங்கையின் இனப்படுகொலைக் குற்றம்

உலக சமூகத்தின் போர் நியதிகளை சிங்கள அரசு மீறத் துணிந்ததால் கடந்த இரண்டு ஆண்டுகளுக்குள் சுமார் ஒன்றரை லட்சம் தமிழர்கள் காணாமல் போயுள்ளனர். சர்வதேச நாடுகளைச் சேர்ந்த பல்வேறு அரசுகளும், மனித உரிமை அமைப்புகளும், ஐ.நா.சபையும் இலங்கை அரசின் இந்த நடவடிக்கையையே ஈழத் தமிழ் மக்களின் மீது அது இழைத்த போர்க்குற்றமாக அறிவித்து வருகின்றன.

தமிழக சட்டமன்றம் இலங்கை அரசை தமிழ் இனப்படுகொலைக்கான அரசாக அறிவிப்பதற்குத் தயங்க வேண்டிய அவசியம் இல்லை . உலகின் பல நாடுகளின் மாநில அரசுகள் இதுபோன்ற தீர்மானங்களை பல்வேறு இனப்படுகொலைகளையொட்டி எடுத்துள்ளன. வேற்று நாடுகளின் அரசோ அல்லது இந்தியாவில் உள்ள வேறொரு மாநில அரசோ இந்தத் தீர்மானத்தை எடுக்கும் முன்பு தமிழக சட்ட மன்றம் இந்தத் தீர்மானத்தை நிறைவேற்ற வேண்டும் என்பதே அனைத்துத் தமிழ் மக்களின் வேண்டுகோளாகும்.

இலங்கையில் நடந்து வருவது இனப் படுகொலையே என்பதை அறிவிக்கும் முயற்சியில் பல்வேறு மனித உரிமை அமைப்புகளும், பத்திரிகைகளும், நாட்டரசுகளும், நிறுவனங்களும் இறங்கியுள்ளன. இந்த முயற்சிகள் யாவும் கைகூடுவதற்கு இன்னும் சில ஆண்டுகள் ஆகலாம். ஏனெனில், பல பத்தாண்டுகளுக்கு முன்பாக நடைபெற்ற ஆர்மேனிய, யூத இனப்படுகொலைகளைக் கூட இன்றளவும் பல்வேறு நிறுவனங்களும், அரசுகளும் மெதுவாகவே ஏற்றுக்கொண்டு வருகின்றன என்பதுதான் உண்மை நிலை.

இது இனப்படுகொலைதான் என்பதை எந்த ஒரு நிறுவனமாவதோ அல்லது அரசோ முதலில் அதிகாரப்பூர்வமாக அறிவித்தாக வேண்டும். இனப்படுகொலைக்கு எதிரான தமிழர் அமைப்பு இதற்கான முயற்சியில் ஈடுபட்டுள்ளது. அந்த அமைப்பத் தவிர, இங்கிலாந்து நாட்டின் டைம்ஸ் ஒன்லைன் பத்திரிகை இந்த அறிவிப்பை மே 29 ஆம் திகதியன்று முன்வைத்துள்ளது. அதன் பின்னரே இந்த அறிவிப்பைப் பரிசீலிக்கும் செயல்பாடுகளைப் பல்வேறு நாட்டரசுகள் தொடங்கியுள்ளன.

தமிழக சட்டமன்றம் இலங்கை அரசை இனப்படுகொலைக்கான அரசாக அறிவித்தால் இலங்கை அரசு ஈழத் தமிழர்களை மேலதிகமாக சித்திரவதைக்கு உள்ளாக்கி விட்டால் என்ன செய்வது? எனவேதான் அந்த அரசோடு நீக்குப் போக்காக இருக்க வேண்டும் என்ற கருத்தும் இருக்கத்தான் செய்கிறது. இருப்பினும் இது ஒரு பத்தாம்பசலிக் கருத்தேயொழிய வேறில்லை.

சிங்கள அரசின் செயல்பாடுகளின் மீது சர்வதேச அரசுகள் மற்றும் நிறுவனங்களின் கண்காணிப்புப் பார்வை குவியத் தொடங்கியிருக்கும் இன்றைய சூழ்நிலையில் தமிழக சட்டமன்றத்தின் நடவடிக்கையால் ஈழத் தமிழர்கள் மேலதிகமான சித்திரவதைக்கு உள்ளாக வேண்டிவரும் என்பது நகைப்புக்கு உரிய கருத்தாகவே இருக்கும்.

மாறாக, தமிழக சட்டமன்றத்தால் இயற்றப்படும் அப்படிப்பட்டதொரு தீர்மானம் சிங்கள இன வெறி அரசுக்கு எதிரான நாட்டளவிலும், சர்வதேச அளவிலும் நடத்தப்படும் ஒரு வெற்றிகரமான பரப்புரையாகவே இருக்கும். ஈழத் தமிழர்களைக் காக்கும் கவசமாக அது அமையும்.

மத்திய அரசின் தீர்ப்பு மகேசன் தீர்ப்பல்ல!

இன்றைக்கு சரியாக 41 ஆண்டுகளுக்கு முன்னர் - அதாவது 1968 ஜனவரி 23 ஆம் நாளன்று - நடந்த நான்காவது தமிழக சட்டமன்றத்தின் இரண்டாவது கூட்டத் தொடரின் இரண்டாவது அமர்வை இன்றளவும் தமிழ் இனம் மறக்க முடியுமா? இந்தியைத் தமிழ்நாடு ஏற்காது என்ற தீரம் மிக்க தீர்மானத்தை இயற்றிய நாளல்லவா அது? இந்தி எதிர்ப்புப் போராட்டத்திற்கு வித்திட்ட இராஜாஜியின் 1937 ஓகஸ்ட் 11 ஆம் திகதி அரசாணைக்கு 30 ஆண்டு காலப் போருக்குப் பின் திட்டவட்டமாக முடிவு கட்டிய நாளல்லவா அது? ஸ்டாலின் ஜெகதீசன், பொன்னுசாமி, குமாரசாமி, மூவலூர் ராமாமிர்தம் அம்மாள், நடராஜன், தாளமுத்து போன்ற மொழிப்போர் வீரர்களால் ஊட்டப்பட்ட நெஞ்சுரமானது இந்தியை அறியாதவர்கள் இந்தியாவை விட்டு வெளியேறுக என்ற துலேகரின் வார்த்தைகளைக் கொன்றொழித்த நாளல்லவா அது? சியாம பிரசாத் முகர்ஜி, லால் பகதூர் சாஸ்திரி, மொரார்ஜி தேசாய், குல்சாரி லால் நந்தா ஆகியோரையெல்லாம் தமிழக சட்ட மன்றம் வெற்றிகண்ட நாளல்லவா அது? 30 ஆண்டுகளாகத் தமிழ் இனம் பட்ட ஏளனத்தை இல்லாதாக்கிய நாளல்லவா அது?

1968 ஜனவரி சட்டமன்றக் கூட்டத் தொடருக்கு இணையான கூட்டத்தொடர் இன்னும் சில தினங்களில் மலரவுள்ளது. 2010 ஜனவரி 6 ஆம் நாள் மலரவுள்ள அந்தக் கூட்டத் தொடரில் கடந்த 50 ஆண்டுகளாக இலங்கையில் சிங்கள இன வாதிகளாலும், அவர்தம் அரசாலும்,. அவர்களுக்குத் துணை நின்ற இந்திய அரசாலும் ஏளனப்படுத்தப்பட்டும், கொடுந்துன்பங்களுக்கு உள்ளாக்கப்பட்டும் வந்த ஈழ மக்களின் விடியலுக்கான தீர்மானம் நிறைவேற்றப்பட்டாக வேண்டும்.

முத்துக்குமார், ஜெனிவா முருகதாசன், சீர்காழி ரவிச்சந்திரன், சென்னை அமரேசன், மலேசியா ராஜா, பள்ளபட்டி ரவி, கடலூர் தமிழ்வேந்தன், சென்னை சிவப்பிரகாசம், ஜெயங்கொண்டம் ராஜசேகர், சென்னை சதாசிவம் ஸ்ரீதர், புதுக்கோட்டை பாலசுந்தரம், விருதுநகர் கோகுலகிருஷ்ணன், வாணியம்பாடி சீனிவாசன், கடலூர் நாகலிங்கம் ஆனந்த ஆகியோரின் ஈகைக்கு நாம் செய்யக்கூடிய ஒரே கைமாறு இதுதான்.

அந்த வீரர்களின் நினைவினை தமிழக சட்டமன்றமானது தன் மனதில் ஏந்தி, இலங்கை அரசு ஈழத் தமிழர்களை இனப்படுகொலைக்கு உள்ளாக்கிவரும் அரசு என்ற தீர்மானத்தினை இந்த உலகமயமாதல் யுகத்தில் இயற்றிட வேண்டும்.

இந்த செயல்பாடே ஈழத் தமிழர்களுக்கும், உலகத் தமிழ் இனம் முழுமைக்குமேயான விடியலாக அமையும். ★

முத்துக்குமார் நண்பர்கள்
தமிழ் நாடு.

---

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமக

## ஐந்தாம் ஆண்டில் ஈரவிழிகளுடன்....



அன்னை மடியில்
20.07.1983
அலையின் பிடியில்
26.12.2004

அமரர் செல்வன்

### இராசேந்திரன் நிஷாந்தன்

ஆண்டுகள் ஐந்து
ஆனதுவோ
ஆறவில்லை எம்
துயரம்.

உங்கள் பிரிவால் துயருறும்:
**குடும்பத்தினர்.**
''விக்ன பவனம்'',
காளிகோயிலடி,
மல்லாகம்.
(91739)

---

# ஐந்தாம் ஆண்டு நினைவலைகள்



கொழும்பு மாநகரில் மக்கள் வங்கியின் பிராந்திய முகாமையாளரும்
கடந்த 26.12.2004 அன்று ஆழிப்பேரலை அனர்த்தத்தால் அவருடன் காவு கொள்ளப்பட்டவர்களான

## அமரர் ஐ.பராபரனும் அவர் தம் குடும்பத்தினரும்

இல்லார்க்கு ஈயவெனச் சென்றீர் நீவிர்- உமை
சொல்லாமல் எடுத்ததுவோ சோகந்தந்த சுனாமி
கல்லானோர் நெஞ்சமெல்லாம் கரைந்துருக- நாமும்
நில்லாது நீர்க்குமிழி வாழ்வு எனத் தேற்றினோர் பலர்

பொல்லாத மனங்களையா பொறுத்திடுமா நும் பிரிவை
எல்லோரும் சேர்ந்திருக்க நீர் மட்டுமில்லை- எங்கள்
வல்லோனே வல்லோனடி சேர்ந்து வருடமைந்தாச்சே
கொல்லாமல் கொல்லச் சென்ற சுனாமி உனை அணைச்சே

வரவேற்பு எல்லாம் நும் புன்சிரிப்பாலாகும்- பரனே
தரமேற்று நிற்பீர் தரும நிறை பண்பதால்
உரமாகும் உம்பதிலே உம்மிடத்தில் உதிரும்- நின்
கரமிரண்டும் நாளும் கனத்த தருமம் செய்யும்

இரப்பவரின் அன்பாம் இதயத்தில் இருந்தீர்- என்றும்
வரம்பலம் அதுவால் வகை தரம் பெற்றீர்
இரங்கிடும் இதயம் உமக்கிருந்தென்ன- பரனே
இரங்காத சுனாமிக்கு இதயந்தான் இல்லையே!

நிலையில்லா வாழ்வில் உம் நிலையிலே உயர்ந்தீர்
விலை மதிப்பிட முடியா உளத்தினால் நிலைத்தீர்
கலை நிலை வாழும் வாழ்க்கையைக் கண்டீர்- சுனாமி
அலையுடன் போகும் அவலம் ஏன் கொண்டீர்???

எண்ணி எண்ணி ஏங்கும் ஈரவிழிகளுடன்:
**குடும்பத்தினர்.**
ஆவரங்கால் கிழக்கு, புத்தூர்.
(91726)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




16.08.1986

★ அரசுமற்றும் த.வி.கூட்டணிக் குழுவுக்கும் இடையேயான இரண்டாம் கட்டப் பேச்சு வார்த்தைகள் கொழும்பில் ஆரம்பம்.

★ இனப்பிரச்சினைத் தீர்வு குறித்த நடவடிக்கைகளின் அவசியம் காரணமாக அணி சேரா மாநாட்டில் கலந்து கொள்ள சிம்பாப்வே செல்வதை ஜனாதிபதி ஜே.ஆர். தவிர்ப்பு.

★ போராளிகளின் தாக்குதல்களைத் தொடர்ந்து யால வனவிலங்குச் சரணாலயம் மூடப்பட்டது.

17.08.1986

★ ஆயுத உற்பத்தித் தொழிற்சாலையொன்றை இலங்கையில் நிறுவுவது தொடர்பாக யூகோஸ் லேவேகியாவுடன் பேச்சு நடத்த இலங்கை அரசு, தனது அதிகாரிகளுக்கு அனுமதி வழங்கியது.

★ மாகாண சபை யோசனைகளை எதிர்த்து 27 அமைப்புக்கள் நடத்தவிருக்கும் எதிர்ப்புப் போராட்டம் காரணமாக கொழும்பின் பாதுகாப்பை அரசு பலப்படுத்துகிறது.

★ கல்முனைக் கலவரத்தில் கடலில் மிதந்து வந்து கரை ஒதுங்கிய சடலங்களின் எண்ணிக்கை 12 ஆக அதிகரிப்பு.

18.08.1986

★ தமிழ்பேசும் மக்களின் தாயகத்தைப் பிரிப்பதற்கு அரசு மேற்கொள்ளும் முயற்சிக்கு கிழக்கு முஸ்லிம்கள் எதிர்ப்பு.

★ மன்னார் நகரப்பகுதியில் படையினரால் ஆண்கள், பெண்கள், சிறுவர்கள் என்ற வேறுபாடின்றி ஆயிரம் பேர் கைது செய்யப்பட்டு விசாரணையின் பின்னர் விடுவிப்பு.

★ இது முச்சந்தி முரளியாரின் விமர்சனம்.

''ஆள்களைப் பிடிக்கிறதிலையும் விடுறதிலையும் ஒரு விதமான சந்தோசம் போலை அவைக்கு... எடுக்கிற சம்பளத்துக்கு ஏதாவது வேலை செய்து காட்ட வேணுமே...

20.08.1986

★ நாளைய பேச்சுவார்த்தையின் போது த.வி.கூட்டணியால் முன்வைக்கப்படும் தமிழ்மொழி பிராந்தியக் கோரிக்கையே அரசு-கூட்டணிப் பேச்சுக்களின் வெற்றி, தோல்வியை நிர்ணயிக்கும்.

★ த.வி.கூட்டணிக்குழு, தேசிய பாதுகாப்பு அமைச்சர் அத்லத்முதலியைச் சந்தித்து சட்டம் ஒழுங்கு பற்றிப் பேச்சு.

21.08.1986

★ தமிழர் தாயகத்தை மீட்டெடுக்கும் போராட்டத்தை ஒன்றிணைத்து நடத்துவதென கருத்து உடன்பாடொன்றை ஐந்து தமிழ் விடுதலைப்போராளி அமைப்புக்கள் எட்டியுள்ளதாக புதுடில்லியிலிருந்து சர்வதேச செய்தி ஸ்தாபனமொன்று அறிவிப்பு.

★ வடக்கு-கிழக்கு மாகாணங்களில் தமிழ் பேசும் மக்களின் தாயகம் ஒன்றை உருவாக்குவது குறித்து உடன்பாடொன்றைக் காண கிழக்கிலங்கை முஸ்லிம் பிரமுகர்களும் த.வி.கூட்டணித் தலைவர்களும் சந்தித்துப்பேச்சு.

★ தம்மைச் சந்தித்துப் பேசிய ஐந்து தமிழ்ப்போராளி அமைப்புக்களின் தலைவர்களது சந்திப்பின் பின்னர் கருத்து வெளியிட்ட இந்திய வெளியுறவு அமைச்சுச் செயலாளர் ஏ.பி.வெங்கடேஸ்வரன், அரசு-கூட்டணி பேச்சுக்களில் இன்னமும் பல முரண்பாடுகள் உள்ளதாகத் தெரிவிப்பு.

26.08.1986

★ யாழ்ப்பாண நகரில் நேற்று முன்தினம் இடம்பெற்ற கடும்ஷெல் தாக்குதல் பாதிப்புக் காரணமாக நேற்று உதயன் பத்திரிகையை வெளியிட முடியாது போயிற்று.

★ நேற்றுமுன்தினம் யாழ் .நகரில் இடம்பெற்ற கடும் ஷெல் தாக்குதலில் சிக்கி ஹற்றன் நஷனல் வங்கியின் யாழ். கிளை முகாமையாளர் உயிரிழப்பு. அவரைத் திருமணம் செய்யவிருந்த வங்கியின் பெண் ஊழியர் செய்தியறிந்து நஞ்சருந்தி மரணம்.

★ தமிழ் மக்களுக்கு நம்பிக்கை தரத்தக்க செய்தி எதனையும் தம்மால் சொல்ல இயலாதுள்ளது என த.வி.கூட்டணி செயலாளர் அமிர்தலிங்கம் தமது பிறந்ததினச் செய்தியில் தெரிவிப்பு.

27.08.1986

★ யாழ்.கோட்டை இராணுவ முகாமை அகற்றக்கோரி யாழ்.நகரில் பிரமாண்டமான மௌன ஊர்வலமும் பூரண கடையடைப்பும் இடம்பெற்றன.

★ இந்த ஆண்டுக்குள் இனப்பிரச்சனைக்குத் தீர்வு காண இயலாவிட்டால் சிறிமாவோவையும் மகாசங்கத்தையும் தம்முடன் இணைத்துக்கொண்டு யுத்தத்துக்குச் செல்லப் போவதாக ஜே.ஆர்.சூளுரை.

★ வடக்கு-கிழக்கு இணைப்பை இலங்கை அரசு நிராகரித்துவிட்ட பின்னர் கூட்டணியினர் இன்னமும் அரசுடன் ஏன் பேச்சுக்களைத் தொடரவேண்டும் என தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பின் தலைவர் பிரபாகரன் சென்னையில் வைத்துக் கேள்வி.

28.08.1986

★ யாழ். கோட்டை இராணுவ முகாமிலிருந்து நடத்தப்பட்ட ஷெல் தாக்குதலால்மெதடிஸ்த தேவாலயமான சென்.பீற்றர்ஸ் தேவாலயம் சேதம்.

★ ஈழத் தபால் முத்திரைகளைப் புழக்கத்தில் விட்டு. யாழ்.குடாநாட்டில் உள்ளூர் தபால் சேவைகளை நடத்தும் சட்ட மறுப்பு இயக்க மொன்றைத் தாம் ஆரம்பிக்கப்போவதாக ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (ஈ.பி.ஆர்.எல்.எவ்)தெரிவிப்பு.

★ இனப் பிரச்சினை சம்பந்தமாக மூன்றாவது நாடொன்றில் முத்தரப்புப் பேச்சுக்கள் இடம்பெறுமென்றும், அதில் இந்திய அதிகாரிகள் அவதானிகளாகக் கலந்து கொள்வர் எனவும் கொழும்பு அரசியல் வட்டாரங்களில் பேச்சு அடிபடுகிறது.

29.08.1986

★ புதுடில்லியில் அடுத்த மாதம் நடைபெறவிருக்கும் தென்கிழக்காசிய நாடுகளில் உள்ள இந்தியத் தூதுவர்கள் மாநாட்டிலும் இலங்கை இனப்பிரச்சினை விடயம் குறித்தே பிரதானமாக ஆராயப்படும்.

★ இலங்கை இனப்பிரச்சனைத் தீர்வுக்காக அரசு எடுத்துவரும் நடவடிக்கைகள் குறித்து அமெரிக்கா, பிரிட்டன், கனடா,அவுஸ்திரேலியா உட்பட இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் தூதுவர்களைத் தனித்தனியாக வெளிநாட்டமைச்சுக்கு அழைத்து இலங்கை அரசு விளக்கம் தெரிவிப்பு.

★ திருகோணமலை மாவட்டத்திலுள்ள சிங்களக் கிராமங்களில் மேலதிக ஊர்காவல் படையினரை நிறுத்த அரசு முடிவு.

30.08.1986

★ வடக்கு-கிழக்கு இணைந்த மாநிலக்கோரிக்கை குறித்து இலங்கை அரசு மூன்று அம்ச மாற்றுத் திட்டமொன்றை முன்வைப்பு.

★ வயாவிளான் மத்திய மகாவித்தியாலயத்தில் அமைக்கப்பட்டிருந்த மினி இராணுவ முகாம் மூடப்பட்டது.

★ இனப்பிரச்சனைத் தீர்வு தொடர்பாக நிலவும் வேறுபாடுகளைக் களைவதற்கு இந்தியா அடுத்த கட்டப் பேச்சுக்களின் போது உதவ வேண்டும் என ஜனாதிபதி ஜே.ஆர் இந்தியத் தூதுவர் ஜே.என்.டிக்ஸிற்றிடம் தெரிவிப்பு.

31.08.1986

★ இனப் பிரச்சினைத் தீர்வு தொடர்பாக புதுடில்லியில் அடுத்த மாதம் இடம்பெறவுள்ள மூன்றாம் கட்டப்பேச்சுக்களில், போராளிகளின் அமைப்புக்களும் கலந்துகொள்ள அழைக்கப்பட்டுக் கலந்து கொண்டால் மாத்திரமே தாமும் அதில் கலந்து கொள்வரென இலங்கை, இந்திய அரசுக்களுக்கு த.வி.கூட்டணியினர் தெரிவிப்பு.

★ புதுடில்லியில் நடைபெறவிருக்கும் மூன்றாம்கட்டப் பேச்சுவார்த்தையில் அரச தரப்புக்குழுவுக்கு அமைச்சர் லலித் அத்துலத் முதலி தலைமை வகிப்பார்.

★ மூடப்பட்ட வயாவிளான் மத்திய மகாவித்தியாலய மினி முகாமுக்குப் பதிலாக பலாலி விமான நிலையச் சந்தியில் இராணுவத்தினர் புதிய மினிமுகாம் அமைத்தனர்.

# புத்தகசாலை

## மரணித்த மனிதம்



வல்வை மு.ஆ.சுமன் எழுதிய மரணித்த மனிதம் கவிதைத் தொகுப்பு நூல் வெளிவந்துள்ளது.

''யுகம் யுகமாய் நெருப்புப் பிளம்பைக் கக்கிக் கொண்டிருக்கும் சூரியனின் தாகத்தையும் காலத்தின் ஆழத்தில் புதைத்து கிடக்கும் ஞானத்தையும் ஒரு தேநீர்க் கோப்பைக்குள் வழங்குகிறது கவிதையின் தியானம்'' என்று தமிழகத்தின் கவிஞர் பா.விஜயின் ஆசிச்செய்தியுடன் மரணித்த மனிதம் நூல் வெளிவந்துள்ளது.

மரணித்த மனிதம் எமது ஈழத்து அவலங்களையும் சமுகக் கருத்தமைப்புகளையும் கொண்டதாக விளங்குகிறது.

## துர்க்கேஸ்வரம் தலபுராணம்




இணுவைப் பண்டிதர் ச.வே.பஞ்சாட்சரம் கனடா துர்க்கேஸ்வரம் தேவஸ்தானம் மீது பாடிய துர்க்கேஸ்வரம் தல புராணம்'' நூல் வெளியிடப்பட்டுள்ளது.

காப்பு, கடவுள் வாழ்த்து, நாட்டுப்படலம், நகரப்படலம், உற்பத்திப்படலம், தலப்படலம், அற்புதப்படலம், ஆற்றுப்படலம், நூற்பயன் என அம்சங்கள் இணுவைப் பண்டிதர் ச.வே.பஞ்சாட்சரத்தின் கவிநயத்தோடு துர்க்கேஸ்வரம் தலபுராணம் வெளிவந்துள்ளது.

## கல்வித் துறையில் உள்ளோர் பயன்பெறக் கூடிய நூல்



கல்வி முகாமைத்துவத்தில் விடய ஆய்வு

இந்தத் தலைப்புடன் நூல் ஒன்றை எழுதி வெளியிட்டுள்ளார் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் உப பீடாதிபதி பா.தனபாலன்.

நூலின் தலைப்பைப் பார்கையிலேயே இது சாதாரண வாசகர்களுக்குரிய நூலன்று. கல்வித்துறையில் ஈடுபட்டுள்ளவர்கள்-அதுவும் கல்வித்துறை சார்ந்த ஆய்வுகளில் ஈடுபட்டுள்ளவர்களுக்கான நூல் என்பதைப் புரிந்து கொள்ளலாம்.

இம்மாதிரி நூல்களில் வரும் ஆய்வுக் கருத்துக்களும் சரி, சொற் பிரயோகங்களும் சரி, சொற்றொடர்களும் கூட அத்துறைகளைச் சார்ந்தவர்களுக்கே புரிவதாக அமைந்து விடுகின்றன. எழுதுபவர்களும் பொதுவான வாசகர்களுக்கென்று எழுதுவதில்லை.

எனவே கல்வித்துறையாளர்களுக்கென்றே நூல் எழுதப்பட்டுள்ளது என்பது தெளிவு. விடய ஆய்வு என்றால் அதன் கருத்தென்னவென்பதை ஆசிரியர் விளக்குகின்றார். வேலைத் தளங்களில் நாங்கள் எதிர்நோக்குகின்ற யதார்த்தமான, அனுமானத்துடன் கூடிய சூழ்நிலையின் முரண்பாடுகள், நிகழ்வுகள் மற்றும் செயற்பாடுகளின் பிரச்சினைகள் என்பனவே விடய ஆய்வு ஆகும். விடய ஆய்வு எமது நிஜ வாழ்க்கையின் சிக்கலான தன்மை தீர்மானத்தில் எவ்வாறு செல்வாக்குச் செலுத்துகிறது என்பதைக் கண்டறிய உதவுகின்றது. விடய ஆய்வானது வாசிப்பவர்களுக்குத் தீர்க்கக்கூடிய பிரச்சினையாக இருக்க வேண்டும். விடயமானது போதியளவு தகவல்களைக் கொண்டதாகவும் வாசிப்பவர்கள் விளங்கக்கூடிய பிரச்சினையாகவும் தகவல்களை பகுத்தாராய்ந்து சிந்திக்கக் கூடியதாகவும் அமைதல் வேண்டும்.

இவ்வாறு விளக்கம் தரப்பட்டுள்ளது குமரன் புத்தக இல்லத்தினால் வெளியிடப்பட்டுள்ள இந்நூலுக்கு பேராசியர் சபா.ஜெயராஜா அணிந்துரை வழங்கியுள்ளார்.

# மக்கள் முகம்



நயினாதீவு, 3ஆம் வட்டாரத்தைச் சொந்த இடமாகவும் திருநெல்வேலி, இல. 26/15 வளாக ஒழுங்கையை வசிப்பிடமாகவும் கொண்ட பாலசுந்தரம்-காசிநாதன் யாழ்.பல்கலைக்கழகத்தில் முதுகலைமாணி பட்டப்படிப்பில் (தமிழ்) அதிவிசேட சித்தியினைப் பெற்றுள்ளார்.

யாழ் . சென்ஜோன்ஸ் கல்லூரியில் சிரேஷ்ட ஆசிரியராகக் கடமையாற்றும் இவர் சமூகச் சேவைகளில் அதிக ஈடுபாடுடைய இவர் யாழ். பாலர் கல்விக்கழகத்தின் நீண்ட கால உறுப்பினராச் சேவை புரிவதுடன் கழக நிர்வாகத்தில் இயங்கும் 14 ஞானக்குழந்தை இல்லங்களின் தலைவராகவும் பணிபுரிந்து வருகின்றார்.

# மனிதப் பேரவலங்களின் இடம்பெற்ற 10 நாடுகளின் பட்டியலில் இலங்கை

## எல்லைகளற்ற வைத்தியர்களுக்கான அமைப்பு தகவல்

கொழும்பு, டிசெ. 26

உலகளவில் பல பகுதிகளில் இடம்பெற்ற மோதல்களின்போது மிகப்பெரிய மனிதப் பேரவலங்கள் இடம்பெற்ற 10 நாடுகளின் பட்டியலை எல்லைகளற்ற மருத்துவர்களுக்கான அமைப்பு (எம்.எஸ். எவ்.) வெளியிட்டுள்ளது.

இதில் இலங்கையையும் அது பட்டியலிட்டுள்ளது. பாகிஸ்தான், சோமாலியா, ஆப்கானிஸ்தான், ஏமன், கொங்கோ ஆகிய நாடுகளும் இடம்பெறுகின்றன.

மோதல்களின்போது பொதுமக்கள் அவர்களுக்கான உயிர்காப்பு உதவிகளை பெறுவதில் இருந்து தடுக்கப்படுவது அதிகரித்து வருகிறது என பிரான்ஸை தளமாகக் கொண்டு செயற்படும் எம்.எஸ். எவ். என்னும் அந்த அமைப்பு கூறியிருக்கிறது.

விடுதலைப்புலிகளுக்கு எதிரான இலங்கை அரசின் இறுதிக்கட்டப் போரின் போது, ஆயிரக் கணக்கான மக்கள் உதவிகள் துண்டிக்கப்பட்டும், மட்டுப்படுத்தப்பட்ட மருத்துவ பராமரிப்புடனும் பெரும் [illegible]னர் எனவும் அந்த [illegible]ள்ளது.

இலங்கையில் மோதல்கள் இடம்பெற்றவேளையில் அந்தப் பகுதிக்குச் செல்ல தாம் அனுமதிக்கப்படவில்லை என்றும், மோதல் வலயத்துக்கு வெளியில் தான் தாம் பணிசெய்ய அனுமதிக்கப்பட்டனர் எனவும் அந்த அமைப்பைச் சேர்ந்த வனசாவான் ஸ்கோர் தெரிவித்தார். அதனால் தாங்கள் பல சிரமங்களை எதிர்கொண்டனர் எனவும் அவர் கூறினார். (சி)

# மந்திகை வைத்தியசாலையில் கட்டடப்பணிகள் பூர்த்தி

நல்லூர்,டிசெ.26

பருத்தித்துறை மந்திகை வைத்தியசாலையில் ''நிக்கொட்'' திட்டத்தின் 'ராப்' நிதியத்தினர் 14 மில்லியன் ரூபா செலவில் புதிதாக அமைக்கப்பட்ட மருந்துக் களஞ்சியம் 2.4 மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்பட்ட ஆலோசனை அறைக்கட்டடப் பணிகள் பூர்த்தியாகியுள்ளன.

இதனையடுத்து மேற்படி கட்டடங்கள் யாழ்.சுகாதார சேவைகள் பணிப்பாளரிடம் கையளிக்கப்பட்டுள்ளது. விரைவில் இந்தக் கட்டடங்கள் பாவனைக்காகத் திறந்து வைக்கப்படவுள்ளதாகவும் தெரிய வருகின்றது. (04-111)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 5 ஆம் ஆண்டு நீங்காத நினைவலைகளில்..

மருத மண்ணில் முத்தாக
1966 ★ 05 ★ 08





மருத மண்ணில் முத்தாக
1995 ★ 03 ★ 29


ஆழிப் பேரலையில் வித்தாக 2004.12.26

**வேலாயுதம்பிள்ளை மல்லிகாமலர்**　　**வேலாயுதம்பிள்ளை இளவரசி**

பெற்றவளே! எம்மை விட்டுப் போனவளே !
உற்றதுணை யாருமில்லை உறவெல்லாம் தூரப்பகை
தங்கையே! எங்கள் செல்வமே!
தரணிக்கோர் இளவரசி நீதானே !
விட்டில்களாய் எம் கனவுகள் கருகிப்போவதால் - உம்
திருமுகம் ஒருமுறை தரிசனம் காட்டீரோ ?

மருதங்கேணி வடக்கு,
தாளையடி.　　(91731)　　பிரிவால் துயருறும்:
குடும்பத்தினர்.

## 5 ஆம் ஆண்டு நினைவலைகள்



தோற்றம் 25.06.1955
மறைவு 19.12.2004
திதி : நவமி

### அமரர் கிருஷ்ணன் தர்மலிங்கம்
### (ஆசிரியர், யா/ஞானாசாரியர் கல்லூரி, கரவெட்டி)

ஆண்டுகள் ஐந்துதனில் கண்ணீர்த் துளிகள்
பனிநீரோடை ஆகின்றன - அப்பாவே உங்கள் நினைவால்
தண்ணீரில் எழுதாத சோகத்தை கண்ணீரால் எழுத வைத்து
மனதினை மோதவிட்டு மௌனித்துப் போனதேனோ அப்பாவே?
உங்கள்
அன்பில் நிறைந்த எம்மைத் துயரில் நிறைய வைத்துவிட்டு
விண்ணகத்து உலாப் போனதேனப்பா ?
உங்கள் உயிருள்ளவரை உங்கள் நினைவிருக்குமப்பா ..
ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

முடக்காடு,
நெல்லியடி கிழக்கு.　　(91795)　　குடும்பத்தினர்.

## 5 ஆம் ஆண்டு நினைவலைகள்

அன்னை மடியில்
30 * 11 * 1977



ஆழியின் பிடியில்
26 * 12 * 2004

### அமரர் குமாரசாமி பிரதீபன்

எம் அருமைப் புதல்வனே! எங்கள் அன்புச் சகோதரனே!
அன்புக்கும் நேசத்திற்கும் நெஞ்சம் நிறைந்தவராக வாழ்ந்து
எல்லோருக்கும் ஆதரவாய் இருந்தாயே
இன்று எங்களைப் பிரிந்து ஐந்து வருடங்கள் ஆகின்றன.
ஆனால் என்றும் எங்கள் இதயங்களிலும்
எமது இல்லத்திலும் ஒளிவிளக்காய்த் திகழ்வாய்
உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல காளித்
தாயை வேண்டுகின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

என்றும் உன் நினைவுடன் :
மில்லேன்,
மல்லாகம்.　　(91783)　　குமாரசாமி குடும்பத்தினர்.
(பொன்னர்)

## மரண அறிவித்தல்



**செல்லத்துரை செல்வநாயகம் (செல்வம்)**
(உரிமையாளர், அம்பாள் தேநீர்க்கடை)

சுதுமலை வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத்துரை செல்வநாயகம் நேற்று (25.12.2009) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.12.2009) சனிக்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக மானிப்பாய் பிப்பிலி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சுதுமலை வடக்கு,
மானிப்பாய்.　　தொ. பே : 0779779797　　தகவல்:
சு.லோகதாஸ் (பேரன்).

## கலை விழா

கைதடி, டிசெ 26

கைதடி தெற்கு மின்னொளி மழலைகள் கல்விப்பூங்கா மாணவர்களின் வருடாந்தக் கலைவிழாவும், பரிசளிப்பு விழாவும் நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கைதடி தெற்கு சனசமூக நிலையத் தலைவர் வே.செல்வராசா தலைமையில் மின்னொளி கலையரங்கில் நடை பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கைதடி மக்கள் நலன் பேணும் கூட்டுறவுத் தலைவர் வி.செல்லத்துரை கலந்து சிறப்பிக்கவுள்ளதுடன் மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெறும். (201 - 288)

## ப.நோ. கூ. சங்க பொதுக்கூட்டம்

கைதடி, டிசெ.26

தென்மராட்சி மேற்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு சங்க மண்டபத்தில் சங்கத் தலைவர் நா.சிவதிருச்செந்தூரநாதர் தலைமையில் நடைபெறவுள்ளது.

இக் கூட்டத்தில் சங்கக்கிளைகளின் அபிவிருத்தி சம்பந்தமாக கலந்துரையாட இருப்பதனால் சங்கத் தலைவர்களை தவறாது கலந்துகொள்ளுமாறு கேட்கப் பட்டுள்ளது. (201-288)

## திருவாசக முற்றோதல்

வடமராட்சி,டிசெ.26

தென் புலோலி உபயகதிர்காமம் தான்தோன்றி சண்முகஈஸ்வரர் ஆலயத்தில் இன்று சனிக்கிழமை திருவாசக முற்றோதல் இடம்பெறும். (04-236)

## பஸ் சேவை

வடமராட்சி, டிசெ 26

பருத்தித்துறையிலிருந்து வடமராட்சி கிழக்குப் பிரதேசத்திற்கு தற்போது 3 பஸ் வண்டிகள் சேவையிலீடுபடுத்தப்படுகின்றன எனத் தெரிவிக்கப்படுகின்றது. இப் பிரதேசத்திலுள்ள மணற்காடு, பொற்பதி, அம்பன் ஆகிய இடங்களுக்கே இச் சேவை நடைபெற்று வருகின்றது. (04-236)

## புனரமைப்பு

யாழ்ப்பாணம். டிசெ.26

இலங்கை சமுர்த்தி அதிகாரசபையின் நிதிப்பங்களிப்புடன் ''கமநெகும'' திட்டத்தின் கீழ் பாஷையூர் புனித அந்தோனியார் விளையாட்டுக்கழக மைதானத்திற்கு பின்புறமாக அமைத்துள்ள குளத்தின் அணைக்கட்டுப்பகுதி புனரமைப்பு செய்யப்பட்டுள்ளதாக அபிவிருத்தி செயலணி உத்தியோகத்தர் அகிலதாஸ் தெரிவித்தார். (04-23)

## ஒளி விழா

நவாலி, டிசெ. 26

சண்டிலிப்பாய்ப் பிரதேச செயலகத்தின் ஒளிவிழா எதிர்வரும் செவ்வாய்க்கிழமை பிரதேச செயலர் மரியதாஸ் ஜெகூ தலைமையில் செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (1-400)

## வாக்காளர் அட்டை 8ஆம் திகதி முதல் விநியோகம்

கொழும்பு, டிசெ. 26

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலுக்கான வாக்காளர் அட்டைகளை விநியோகிக்கும் பணி ஜனவரி 8 ஆம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ளது.

இதற்கு முன்னோடியாக வாக்காளர் அட்டைகள் 6ஆம் திகதி தபாலகத்தில் ஒப்படைக்கப்படும் எனத் தேர்தல் செயலகப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

இதேவேளை, ஜனவரி 10 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமையன்று வாக்காளர் அட்டைகள் விநியோகிக்கும் விசேட தினமாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. வாக்காளர் அட்டைகளை விநியோகிக்கும் பணி ஜனவரி 18 ஆம் திகதியுடன் நிறைவடையும் எனவும் கூறப்பட்டது. (சி)

## இறைச்சி, முட்டை விலைகள் அதிகரிப்பு

குடாநாட்டில் நத்தார் மற்றும் புதுவருடப் பண்டிகைகளால் இறைச்சி மற்றும் முட்டைகள் என்பவனற்றின் விலைகள் திடீரென அதிகரித்துள்ளன.

கோழி இறைச்சி ஒரு கிலோ 550 ரூபா தொடக்கம் 600 ரூபா வரையிலும் முட்டை 20 தொடக்கம் 22 ரூபா வரையிலும் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. (04)

## வலி தென் மேற்கு கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம் (மட்டுப்படுத்தப்பட்டது)

பதிவிலக்கம்: 2057

**பொதுக் கூட்டமும் புதிய நிர்வாக சபையினர் தெரிவும்**

தலைமை : திரு.தி. இராஜ்குமார் - சங்கத் தலைவர்
காலம் : நாளை (27.12.2009) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 9.30 மணி
இடம் : சங்கக் காரியாலயம், 7 ஆம் கட்டை, சண்டிலிப்பாய்.
பிரதம விருந்தினர் : Dr.செல்வி மீனயோகினி
சிறப்பு விருந்தினர் : திருமதி ஜெ.தர்சினி
(கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர்)

01. மௌன இறைவணக்கம்
02. வரவேற்புரை
03. தலைமையுரை
04. கடந்த பொதுக் கூட்ட அறிக்கை சமர்ப்பித்தல்
05. செயற்பாட்டறிக்கை சமர்ப்பித்தல்
06. 2007ஆம் ஆண்டுக்கான கணக்கறிக்கையைச் சமர்ப்பித்தல்
07. பிரேரணைகளை முன்மொழிதல்
08. விருந்தினர் உரை
09. புதிய நிர்வாக சபைத் தெரிவு
10. நன்றியுரை

மேற்படி பொதுக் கூட்டத்திற்கு தவறாது சமுகமளித்து உதவுமாறு தங்களை அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

(சி/563471)　　செயலாளர்.

## நீங்கா நினைவுகளுடன் ஐந்தாண்டுகள்

மண்ணில்
09 * 06 * 1975



மண்ணில்
26 * 01 * 2004

விண்ணில் : 26.12.2004

திருமதி செல்வந்தா டிலானி ஜெயஞ்சினி
அருட்செல்வம் ஆகாஷ் செல்வந்தா
'கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள்
முதலாவது எழுந்திருப்பார்கள்' (1 தெசலோனிக்கேயர் 4:16)

(91758)

1/1, றக்கா வீதி, சுண்டுக்குளி,
யாழ்ப்பாணம்.　　என்றும் உங்கள் நினைவுடன்:
தாய், சகோதரர்கள்.

## 16 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

தோற்றம்
27 ★ 09 ★ 1925



மறைவு
11 ★ 12 ★ 2009

### திருமதி பாக்கியம் செல்லத்துரை

அன்பினால் அரவணைத்து உயர்ச்சிக்கு வழிகாட்டி
இதயத்தில் இருக்கும் எங்கள் அம்மாவே !
உங்கள் ஆத்மா சாந்தி அடையப் பிரார்த்திக்கின்றோம்

கடந்த 11.12.2009 வெள்ளிக்கிழமை இறைபதம் எய்திய எமது குடும்ப ஒளிவிளக்கின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (26.12.2009) சனிக்கிழமை மு.ப. 10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் இடம்பெறும்.


இந்த நிகழ்வுகளில் தாங்கள் குடும்ப சமேதராய் வருகை தந்து அன்னாரது ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

(இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்)

19/41, செட்டித்தெரு ஒழுங்கை,
நல்லூர், யாழ்ப்பாணம்.　　(91733)　　குடும்பத்தினர்.

## 5 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை அணைப்பில்
14 ★ 02 ★ 1984



ஆண்டவன் அழைப்பில்
26 ★ 12 ★ 2004

### செ. நிக்ஷன் ராஜசெல்வம்

ஆண்டுகள் ஐந்து ஆனதுவோ எம்மை எல்லாம் விட்டு நீ பிரிந்து.....
தவியாய்த் தவிக்கிறோம் இன்னும் உன் நினைவாலே......
எமக்காக ஒருமுறை உம் திருமுகம் காட்டமாட்டாயோ.......

தும்பளை,
பருத்தித்துறை.　　(91740)　　குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ்.பல்கலைக்கழக சட்ட மாணவர் சங்கத்தின் ''நீதம்'' நூல் அறிமுகவிழா நேற்றுமுன்தினம் பல்கலைக்கழக நூலகக் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை.இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் என்.சண்முகலிங்கனும் கௌரவ விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ். மேல்நீதிமன்ற நீதிபதி ஆர்.ரி.விக்னராஜாவும் மங்களவிளக்கேற்றுவதை முதல் இரு படங்களிலும்- பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் என்.சண்முகலிங்கன் மலரை வெளியிட்டு வைக்க அதனை யாழ். மேல்நீதிமன்ற நீதிபதி ஆர்.ரி.விக்னராஜா பெற்றுக்கொள்வதை அடுத்துள்ள படத்தில் காணலாம். நூல் ஆய்வுரையை யாழ்.மேல்நீதிமன்ற ஓய்வுபெற்ற நீதிபதி ஆர்.வரதராஜா நிகழ்த்துவதையும் நிகழ்வில் கலந்துகொண்டோரில் ஒரு பகுதியினரையும் இறுதிப் படங்களில் காணலாம்.

(படங்கள்: சுகந்தன்)

## யாழ். தேர்தல் தொகுதியில் இடம்பெயர்ந்தோரில் 10 சத வீதமானோர் மட்டுமே விண்ணப்பம்

யாழ்ப்பாணம்,டிசெ.26

யாழ்ப்பாணம்,கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களை உள்ளடக்கிய யாழ்ப்பாணம் தேர்தல் தொகுதியில் இடம்பெயர்ந்தவர்களில் 2400 பேர்கள் மட்டுமே ஜனாதிபதி தேர்தலில் வாக்களிக்க விண்ணப்பித்துள்ளனர்.

இடம்பெயர்ந்தவர்கள் வாக்களிக்க விண்ணப்பிக்கும் இறுதித்திகதி நேற்று முன்தினமாகும்.

யாழ்.தேர்தல் தொகுதியில் இடம்பெயர்ந்த 25,687 பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர். இவர்களில் 2,400 பேரே நேற்று முன்தினம் வரை விண்ணப்பங்களைச் சமர்ப்பித்துள்ளனர் என்று யாழ்.பிரதித்தேர்தல் ஆணையாளர் பி. குகநாதன் உதயனுக்குத் தெரிவித்தார். இடம்பெயர்ந்த மக்கள் வாக்களிக்க விசேட வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்படும். அத்துடன் அவர்கள் வாக்களிப்பு நிலையத் துக்குச் செல்ல விசேட போக்குவரத்து வச திகளும் செய்யப்படும் என்று அவர் கூறினார்.




அதேவேளை- வன்னி மாவட்டத்தில் இடம்பெயர்ந்தவர்கள் தொடர்பான முடிவு ஜனவரி முதல் வாரத்தில் தேர்தல் ஆணையாளர் கூட்டும் மாநாட்டில் முடிவு செய்யப்படும் என்றும் அவர் சொன்னார்.

(1-50)

## குடாநாட்டில் அமைதியான முறையில் நேற்று நத்தார் கொண்டாட்டங்கள்

யாழ்ப்பாணம்,டிசெ.26

யாழ்.குடாநாட்டில் உள்ள கிறிஸ்தவ மக் கள் நத்தார் பண்டிகையை நேற்று மிகவும் அமை தியாகவும், தேவாலய வழிபாட்டு டனும் கொண் டாடினார்கள்.

நேற்றுக்காலையில் புத்தாடைகள் அணிந்து ஏராளமாக மக்கள் தேவாலயங்க ளுக்குச் சென்று விசேட நத்தார் திருப்பலிப் பூஜை களில் கலந்து கொண்டனர்.

இந்த முறை நத்தார் பண்டிகை வழமையை விட மிகவும் அமைதியான முறையில் சமய வழிபாட்டுடன் பட்டாசு கொளுத்தியும், இனிப்புப் பண்டங்களைப் பரிமாறியும் குடாநாட்டு மக்கள் கொண்டாடி மகிழ்ந் தார்கள்.

இதேவேளை யாழ்.கரையோரப் பகுதியில் பொதுமக்கள் சிலர் வீதியால் சென்றவர்களுக்கு உணவுப் பொதிகளையும் வழங்கியதைக் காண முடிந்தது.

அத்துடன் கடந்த காலங்களில் நாட்டு நிலைமை காரணமாகத் தேவாலயங்களில் நள்ளிரவுக் கிறிஸ்மஸ் வழிபாடுகளில் கலந்து கொள்ள முடியாதநிலை காணப்பட்டது. எனினும் இம்முறை பாதுகாப்பு நடைமுறையில் காணப்பட்ட தளர்வுநிலை காரணமாக ஏரா ளமானோர் நத்தார் ஆராதனைகளில் பங்கு பற்றியமை குறிப்பிடத்தக்கது.

(04-224-86)

## விண்ணப்பிக்காத இடம்பெயர்ந்த வாக்காளர்களும் ஜனாதிபதித் தேர்தலில் வாக்களிக்க ஏற்பாடு

யாழ்ப்பாணம்,டிசெ.26

இடம்பெயர்ந்த வாக்காளர்கள் அனைவரும் ஜனாதிபதித் தேர்தலில் வாக்களிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படவுள்ளது.

யாழ். மாவட்ட தேர்தல் திணைக்கள வட்டாரங்கள் இத்தகவலை தெரிவித்தன.

இது தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது:

எதிர்வரும் ஜனவரி மாதம் 26 ஆம் திகதி ஜனாதிபதித் தேர்தல் நடைபெறவுள்ளது. இதில் இடம்பெயர்ந்த வாக்காளர்கள் வாக்களிப்பதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டன.

இந்நிலையில் 2 ஆயிரத்து 35 பேர் மட்டுமே தமது விண்ணப்பங்களை இது வரை அனுப்பிவைத்துள்ளனர்.

எனினும் யாழ். தேர்தல் தொகுதியில் 25 ஆயிரத்து 864 இடம்பெயர்ந்த வாக்காளர்கள் உள்ளனர்.

எனவே தேர்தலில் வாக்களிப்பதற்கு விண்ணப்பங்களை அனுப்பி வைக்காத ஏனைய வாக்காளர்களும் ஜனாதிபதித் தேர்தலில் வாக்களிப்பதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

இந்த வாக்காளர்கள் வாக்களிப்பது தொடர்பான முடிவுகள் பெரும்பாலும் இம் மாதம் 30 ஆம் திகதிக்குப் பின்னர் தெரிய வரும் என்று அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

(04-9)

## எம்.ஜீ.ஆர் நினைவு நிகழ்வில் வலுக்குறைந்த முப்பது பேருக்கு உடுபுடைவைப் பொதிகள்

யாழ்ப்பாணம்,டிசெ.26

எம்.ஜீ.ஆரின் 22 ஆம் ஆண்டு நினைவு தின நிகழ்வுகள் குருநகரில் வெகு சிறப்பாகக் நேற்று முன்தினம் கொண்டாடப்பட்டதோடு முப்பது வலுவிழந்தோருக்கு உடுபுடைவைகள் வழங்கப்பட்டன.

யாழ். பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர் கே.தெய்வேந்திரன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் சமூக சேவைகள் மற்றும் சமூகநலத்துறை அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா எம்.ஜீ.ஆர். கழக அமைப்பாளர் மதிமுகராஜா விஜயகாந்த் ஆகியோர் கலந்து கொண்டனர்.

நிகழ்வில் வலுக்குறைந்த 30 பேருக்கு அமைச்சர் டக்ளஸ் எம்.ஜீ.ஆர். நினைவாக உடுபுடைவைப் பொதிகளை வழங்கினார்.

நிகழ்வில் எம்.ஜீ.ஆர். சிலைக்கு மலர் மாலையும் அணிவிக்கப்பட்டது.

(04-224)

## பயணிகளின் எண்ணிக்கை அதிகரிப்பு; நெரிசலில் திணறும் யாழ்.நகரம்!

யாழ்ப்பாணம்,டிசெ.26

தென்பகுதியிலிருந்து யாழ்.குடாநாட்டுக்கு வரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை கடந்த சில நாள்களாகத் திடீரென அதிகரித்துக் காணப்படுகின்றது.

கடந்த இரண்டு நாள்களில் பெரும் எண்ணிக்கையான பயணிகள் வாகனங்கள் மூலம் குடாநாட்டுக்கு வந்துள்ளனர்.

இவ்வாறு குடாநாட்டுக்கு வருகின்ற பயணிகளின் எண்ணிக்கை திடீரென அதிகரித்துள்ளதால் யாழ். நகரில் சன நெருக்கடியும் வாகனப்போக்குவரத்து நெருக்கடியும் ஏற்பட்டிருப்பதாகக் கூறப்படு கின்றது.

இந்த நெரிசலும் கட்டுப்படுத்துவதில் போக்குவரத்து பொலிசார் மும்முரமாக ஈடுபட்டிருப்பதையும் காணமுடிகின்றது.

(04-224)

## நீண்ட கால இடைவெளியின் பின்னர் சமுர்த்தி அதிகாரசபை அதிகாரிகள் யாழ்.விஜயம்

வலிவடக்கு, டிசெ.26

யாழ்.குடாநாட்டிற்குக் கடந்த பல வருடங்களின் பின்னர் சமுர்த்தி அதிகார சபையின் உயர் அதிகாரிகள் சமுகமளித்துள்ளனர்.

கடந்த திங்கட்கிழமை யாழ்ப்பாணத்திற்கு விஜயம் மேற்கொண்ட சமுர்த்தி அதிகாரசபையின் அதிகாரிகளுக்கும் யாழ்.மாவட்ட சமுர்த்தி வங்கிகளின் முகாமையாளர்கள் மற்றும் சமுர்த்தி அபிவிருத்தி அலுவலர்களுடனான சந்திப்பு யாழ்ப்பாணம் சென்ஜோன்ஸ் கல்லூரியில் யாழ்-மாவட்ட அரசாங்க அதிபர் க.கணேஷ் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் சமுர்த்தி அபிவிருத்தி அதிகாரசபைப் பணிப்பாளர் திலகஸ்ரீ ஸ்தாபனப் பணிப்பாளர் ஹெட்டி ஆராய்ச்சி, கணக் காய்வு கண்காணிப்புப் பிரிவுப் பணிப்பாளர் பண்டாரா, யாழ் மாவட்ட சமுர்த்தி உதவிப் பணிப்பாளர் மகேஸ்வரகுமார், மாவட்ட இணைப்பாளரும் செயலக முகாமையாளரு மான ரகுநாதன் ஆகியோர் கலந்துகொண் டனர்.

இச்சந்திப்பில் ஐந்நூறுக்கும் மேற்பட்ட சமுர்த்தி அலுவலர்கள் பங்குபற்றினர்.

(04-86)

## மழையால் சேதமடைந்த வீதிகளுக்கு விமோசனம்; தார்க்கலவை மூலம் சீர்படுத்தும் பணிகள் மும்முரம்!

### வீதி அபிவிருத்தி அதிகார சபை துரித நடவடிக்கை



யாழ்ப்பாணம்,டிசெ.26

மழையால் சேதமடைந்துள்ள பிரதான வீதிகளைத் தார்க் கலவை மூலம் சீர்செய்யும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இந்தப் பணிகளுக்காக கொழும்பில் இருந்து நான்கு வாகனங்களில் வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு தார்க் கலவைகள் எடுத்துவரப்பட்டுள்ளன.

அவசர அவசரமாக கொண்டுவரப்பட்ட இந்த தார்க் கலவை மூலம் வீதிகளில் ஏற்பட்ட சேதங்கள் மற்றும் குழிகள் என்பனவற்றை உடனடியாகச் சீர்செய்யும் பணிகள் நடை பெற்று வருகின்றன.

ஸ்ரான்லி வீதி, மானிப்பாய் வீதி, யாழ்.பிரதான வீதி,கே.கே.எஸ் .வீதி, என்பனவற்றில் காணப்பட்ட சேதங்கள் இந்தத் தார்க் கலவை மூலம் தற்போது புனர்நிர்மாணம் செய்யப்பட்டு வருகின்றன.

நேற்றுத் தொடச்சியாகப் பெய்த மழையையும் பொருட்படுத்தாது வீதிப் புனரமைப்புப் பணிகளில் வீதி அபிவிருத்தி அதிகாரசபை பணியாளர்கள் மும்முரமாக ஈடுபட்டிருந்ததையும் அவதானிக்க முடிந்தது.

(04-224)

## வன்னியிலிருந்து இடம்பெயர்ந்த மனைவியின் மரணச் சான்றிதழை கண்ணீர் மல்கப் பெற்றார் கணவன்

யாழ்ப்பாணம், டிசெ.26

வன்னியில் இடம்பெற்ற யுத்தத்தில் காயமடைந்த, காணாமற்போன தனது மனைவியை கண்டுபிடித்துத் தருமாறு யாழ்.மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அலுவலகத்தில் முறைப்பாட்டினைச் செய்த கணவர் மனைவியின் இறப்புத் தொடர்பான மரணச் சான்றிதழை கண்ணீர் மல்க சோகத்தோடு பெற்றுச் சென்றுள்ளார்.

வன்னியில் இடம்பெற்ற யுத்தம், இடப்பெயர்வு என்பவற்றில் சிக்குண்டு காயமடைந்த தனது மனைவியான (நாகேஸ்வரி-34) வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் பதவியா வைத்தியசாலைக்கு மாற்றம் செய்யப்பட்டதாகவும்,

அவர் தொடர்பான விவரங்களைப் பெற்றுத் தருமாறும் அவரது கணவரான கந்தையா-ரவிகரன் என்பவர் கடந்த நவம்பர் மாத முற்பகுதியில் யாழ். மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அலுவலகத்தில் முறைப்பாட்டினைச் செய்திருந்தார்.

யாழ். மனித உரிமைகள் ஆணைக்குழுவினர் மேற்கொண்ட துரித விசாரணையின் பிரகாரம் நாகேஸ்வரி பதவியா வைத்தியசாலையில் இறந்து போனதாகவும் அவரது உடல் அரச செலவில் அடக்கம் செய்யப்பட்ட தாகவும் கூறி அது தொடர் பான மரணச் சான் றிதழ் யாழ்.மனித உரிமைகள் ஆணைக் குழுவின் அலுவல கத்திற்கு அனுப்பிவைக் கப்பட்டது.

இறந்தவரின் கணவரான கந்தையா ரவிகரன் யாழ். மனித உரிமைகள் ஆணைக் குழுவின் அலுவலகத்திற்கு நேற்று முன்தினம் வருகை தந்து மிகுந்த சோகத்துடனும் கண்ணீருடனும் தனது மனைவியின் மரணச்சான்றிதழைப் பெற்றுச் சென்றுள்ளார். காணாமல்போன தனது மனைவி மீண்டும் கிடைக்கவேண்டும் என்ற எதிர்பார்ப்புடன் மனித உரிமைகள் ஆணைக் குழுவிடம் முறைப்பாட்டினைச் செய்திருந்தார்.

(1-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெலுங்கானாவில் மீண்டும் கலவரம்; பொலிஸார் சூடு; மாணவர்கள் காயம்!

## தமிழகம், டில்லியிலிருந்து கூடுதல் படைகள் விரைவு

ஐதராபாத், டிசெ.26

தெலுங்கானா மாநிலம் அமைக்கும் திட்டத்தை மத்திய அரசு நிறுத்தி வைத்துள்ளதால், தெலுங்கானாப் பகுதியில் மீண்டும் கலவரம் வெடித்துள்ளது. பஸ்கள் எரிக்கப்பட்டன. மாணவர்கள் மீது பொலிஸார் துப்பாக்கிச் சூடு நடத்தினர். இதில் சில மாணவர்கள் காயம் அடைந்தனர். கலவரத்தை ஒடுக்க தமிழகம், டில்லியில் இருந்து கூடுதல் படைகள் விரைந்துள்ளன.

தெலுங்கானா தனி மாநிலம் கோரி, ஆந்திராவில் உள்ள ஐதராபாத் உள்ளிட்ட 10 தெலுங்கானா மாவட்டங்களில் 2 வாரங்களாக கலவரம் நடைபெற்றது.

தெலுங்கானா மாநிலம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று கடந்த 9 ஆம் திகதி மத்திய அரசு அறிவித்ததால், அப்பகுதியில் அமைதி திரும்பியது. அதே நேரத்தில், தெலுங்கானாவுக்கு எதிராக ஆந்திராவின் மற்ற பகுதிகளில் வன்முறை வெடித்தது. தனி மாநிலம் இப்போதைக்கு கிடையாது என்று கடந்த புதனன்று இரவு மத்திய அரசு அறிவித்தது. இதனால் ஆந்திரா பகுதிகளில் அமைதி திரும்பியது.

ஆனால், தெலுங்கானாப் பகுதிகளில் மீண்டும் கலவரம் வெடித்துள்ளது. மத்திய அரசின் முடிவுக்கு எதிராக தெலுங்கானாப் பகுதிகளில் 48 மணி நேர முழு அடைப்பு நடத்த தெலுங்கானா ராஷ்டிர சமிதி உள்ளிட்ட அமைப்புகள் அழைப்பு விடுத்தன.

உடனே கடந்த புதனன்று இரவிலேயே, தெலுங்கானாவுக்கு ஆதரவான மாணவர்களும், போராட்டக்காரர்களும் தெருவில் இறங்கிப் போராடத் தொடங்கினர். அரசு பஸ்களை கல் வீசித் தாக்கினர். அவர்களின் கல் வீச்சில் 200 பஸ்கள் சேதம் அடைந்தன.

12 அரசு பஸ்களும், 8 தனியார் பஸ்களும் தீயிட்டுக் கொளுத்தப்பட்டன. சில தனியார் வாகனங்களும் சேதப்படுத்தப்பட்டன. கடைகள் மற்றும் வணிக நிறுவனங்கள் மீது கல் வீசப்பட்டது. 78 இற்கும் மேற்பட்ட இடங்களில் அரசு அலுவலகங்கள் தாக்கப்பட்டன. இந்த வன்முறைச் சம்பவங்கள் தொடர்பாக, 436 பேர் கைது செய்யப்பட்டனர்.

நேற்றுமுன்தினம் தெலுங்கானாப் பகுதிகளில் வன்முறை நீடித்தது. முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக, 144 தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டு இருந்தது. அதையும் மீறி, ஐதராபாத்தில் உள்ள உஸ்மானியா பல்கலைக்கழக மாணவர்கள், அந்தப் பல்கலைக்கழக வளாகத்துக்குள் ஊர்வலம் செல்ல முயன்றனர். ஐக்கிய முற்போக்கு கூட்டணி தலைவர்களின் உருவப் பொம்மைகளை பாடையில் ஏற்றி ஊர்வலமாக எடுத்து செல்ல முயன்றனர்.

அவர்களைப் பொலிஸார் தடுத்தனர். அப்போது பொலிஸாருக்கும், மாணவர்களுக்கும் இடையே மோதல் வெடித்தது. பொலிஸார் மீது மாணவர்கள் கல் வீச்சுத் தாக்குதல் நடத்தினர். அவர்களைக் கலைந்து செல்லுமாறு பொலிஸார் எச்சரித்தனர்.

ஆனால் மாணவர்களின் தாக்குதல் நீடித்ததால் பொலிஸார் தடியடி நடத்தினர். அதற்கும் மாணவர்கள் கலையாததால், கண்ணீர் புகைக் குண்டுகள் வீசப்பட்டன. அதன்பிறகும் கூட்டம் கலையாததால், பொலிஸார் இறப்பர் தோட்டாக்களை பயன்படுத்தி சுட்டனர். வானத்தை நோக்கியும் துப்பாக்கியால் சுட்டனர். இதில் சில மாணவர்கள் காயம் அடைந்தனர்.

இந்நிலையில், கலவரத்தை ஒடுக்குவதில் ஆந்திர பொலிஸாருக்கு உதவுவதற்காக, கூடுதலாக 10 கம்பெனி துணை இரா ணுவப் படையினரை மத்திய அரசு, ஐதரா பாத்துக்கு அனுப்பி வைத்துள்ளது. இப்படை யினரின் எண்ணிக்கை 1,150 ஆகும். இவர்கள் டில்லி, ஜலந்தர், சண்டிகார் ஆகிய இடங்களில் இருந்து விமானம் மூலம் அனுப்பி வைக்கப்பட்டனர்.

## ஆந்திராவில் போராட்டம் தீவிரமாகியதால் தமிழக ரயில்களில் பாதுகாப்பு அதிகரிப்பு

சென்னை, டிசெ.26

தெலுங்கானாப் பிரச்சினையால் ஆந்திராவில் போராட்டங்கள் தீவிரமாகியுள்ளதையடுத்து, தமிழகம் முழுவதிலும் இருந்து இயக்கப்படும் ரயில்களில் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது.

ஆந்திராவைப் பிரித்து தனி தெலுங்கானா உருவாக்க வேண்டும் என்று ஒரு தரப்பினரும், பிரிக்க கூடாது என்று மற்றொரு தரப்பினரும் கடந்த 3 வாரங்களாக போராட்டம் நடத்தி வருகின்றனர்.

இந்த நிலையில், தனித் தெலுங்கானா முடிவை மத்திய அரசு நிறுத்தி வைத்துள்ளது. இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து தெலுங்கானா ராஷ்டிர சமிதி கட்சி 2 நாள் முழு அடைப்பு போராட்டத்திற்கு அழைப்பு விடுத்தது.

இதைத் தொடர்ந்து, எந்தவித அசம்பாவித சம்பவங்களும் நிகழாமல் இருப்பதற்காக சென்னையில் இருந்து ஆந்திரா செல்லும் கச்சிக்குடா, ஐதராபாத் எக்ஸ்பிரஸ் உட்பட அனைத்து ரயில்களிலும் பாதுகாப்பு அதிகரிப்பட்டுள்ளது.

ஒவ்வொரு ரயிலிலும் ஒரு உதவி இன்ஸ்பெக்டர் தலைமையில் 4 ரயில்வே பொலிஸார் கூடுதலாக பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். இந்தப் பொலிஸாருக்கு நவீன துப்பாக்கிகள் வழங்கப்பட்டுள்ளன. இதே போல், தமிழகம் முழுவதிலும் இருந்து இயக்கப்படும் ரயில்களிலும் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது.

## இந்தியச் செய்திகள்

## ராஜஸ்தான் பாலம் இடிந்து விழுந்ததில் 5 பேர் பலி; 50 பேர் இடிபாட்டில் சிக்கினர்

ஜெய்ப்பூர், டிசெ. 26

ராஜஸ்தானில் பாலம் இடிந்து விழுந்ததில் இதன்போது வேலை பார்த்துக் கொண்டிருந்த 60 இற்கும் மேற்பட்டோர் கட்டுமான இடிபாடுகளுக்குள் சிக்கி உயிரோடு புதைந்தனர். பின்னர் 5 பேரது சடலங்கள் மீட்கப்பட்டன. 6 பேர் படுகாயங்களுடன் உயிரோடு மீட்கப்பட்டனர். இடிபாடுகளுக்குள் சிக்கியுள்ள மேலும் 50 பேரை மீட்கும் தீவிர முயற்சியில் மீட்புப் படையினர் ஈடுபட்டுள்ளனர்.

ராஜஸ்தானில் சம்பல் ஆறு ஓடும் பகுதியில் கோடா - உதய்ப்பூர் நகரங்களை இணைக்கும் விதமாக குண்கதி என்னுமிடத்தில் புதிய பாலம் கட்டப்பட்டு வருகிறது. நேற்றுமுன்தினம் மாலை 5.30 மணியளவில் 300 இற்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் கட்டுமானப் பணியில் ஈடுபட்டிருந்தனர்.

அப்போது பாலத்திற்காக அமைக்கப்பட்டிருந்த ராட்சத கொன்கிரீட் ஒன்று இடிந்து விழுந்தது. இதன்போது வேலை பார்த்துக் கொண்டிருந்த 60 இற்கும் மேற்பட்டோர் கட்டுமான இடிபாடுகளுக்குள் சிக்கி உயிரோடு புதைந்தனர்.

இதையடுத்து, சம்பவ இடத்துக்கு மீட்பு படையினர் அனுப்பி வைக்கப்பட்டனர். அவர்கள் இடிபாடுகளுக்குள் சிக்கி உயிரிழந்த 5 பேரது சடலங்களை மீட்டனர்.

6 பேர் படுகாயங்களுடன் உயிரோடு மீட்கப்பட்டனர். இடிபாடுகளுக்குள் சிக்கியுள்ள மேலும் 50 பேரை மீட்கும் தீவிர முயற்சியில் மீட்பு படையினர் ஈடுபட்டுள்ளனர்.

இந்த விபத்தில் பலியானவர்களின் குடும்பங்களுக்கு தலா 2 லட்சம் ரூபா நிவாரண தொகையாக வழங்கப்படும் என்று மாநில முதல்வர் அசோக் கெலாட் அறிவித்துள்ளார்.

## மேற்கு வங்கத்தில் மாவோ வன்முறை மார்க்., கம்யூ. நால்வர் சுட்டுக்கொலை

மேற்கு மிட்னாபூர், டிசெ. 26

மேற்கு வங்க மாநிலத்தில் மேற்கு மிட்னாபூர் மாவட்டத்தில் மார்க்சிஸ்ட் - கம்யூனிஸ்டு கட்சியைச் சேர்ந்த 4 பேர் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

நேற்றுமுன்தினம் பதார்சாபுரி கிராமத்தில் மார்க்சிஸ்ட் தொண்டர் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டார். அதேபோல் துர்கா சோரேன் என்ற மார்க்சிஸ்ட் தலைவர் மார்க்கெட்டுக்கு செல்லும் வழியில் அவரை மறித்த அடையாளம் தெரியாத சிலர் சுட்டதில் சம்பவ இடத்திலே உயிரிழந்தார்.

இதற்கிடையே போலா கிராமத்திலும், சங்கபங்கா கிராமத்திலும் மார்க்சிஸ்ட் தொண்டர்கள் 2 பேர் உடலில் குண்டு காயத்துடன் பிணமாகக் கிடந்தனர். மேலும் கோல்டூர் கிராமத்தில் 4 மார்க்சிஸ்ட் தலைவர்களின் வீடுகளுக்கு மாவோயிஸ்டுகள் தீவைத்து கொளுத்தினர்.

## 'தமிழினப் படுகொலைகள்: 1956 – 2008' ஆவண நூல் சென்னையில் வெளியீடு!



விழாவில் தமிழக முன்னாள் சட்டப்பேரவைத் தலைவர் புலவர் புலமைப்பித்தன் உரையாற்றுகிறார்.

சென்னை, டிசெ. 26

இலங்கையில் அரங்கேறிய 'தமிழினப் படுகொலைகள்' பற்றிய விவரம் அடங்கிய ஆவணப் புத்தகத்தின் வெளியீடு கடந்த புதனன்று மாலை சென்னையில் வெளியிடப்பட்டது.

1956 ஆம் ஆண்டு முதல் 2008 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் இலங்கை அரசால் தமிழர்களுக்கு எதிராக நிகழ்த்தப்பட்ட இனப்படுகொலைகளின் விவரங்கள் அடங்கிய 'தமிழினப் படுகொலைகள் : 1956 - 2008' என்ற தலைப்பில் புத்தகமாகத் தொகுக்கப்பட்டுள்ளன.

சென்னை நகரின் மத்தியில் அமைந்துள்ள தேவநேயப் பாவாணர் நூலக அரங்கில் புதன்கிழமை மாலை 6 மணிக்கு இடம்பெற்ற நிகழ்வில் தமிழக முன்னாள் சட்டப் பேரவைத் தலைவர் புலவர் புலமைப்பித்தன் புத்தகத்தை வெளியிட்டு வைத்தார்.

தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் பதிப்பிக்கப்பட்ட இரு புத்தகங்களும் வெளிடப்பட்டன. சென்னையைச் சேர்ந்த 'மனிதம் அமைப்பு' புத்தகத்தை பதிப்பித்திருந்தது.

கிளிநொச்சியில் இருந்து செயற்பட்ட வடக்கு - கிழக்கு மனித உரிமைகள் செயலகத்தால் சேகரிக்கப்பட்டுத் தயாரிக்கப்பட்ட ஆவணங்களே தொகுக்கப்பட்டு புத்தகமாக்கப்பட்டுள்ளன.

இந்தப் புத்தகத்தில் 150 படுகொலைகள் பற்றிய விவரங்கள் இருக்கின்றன. அவற்றில் நான்கைந்தைப் படித்தாலேயே ஈழத்தில் இளைஞர்கள் ஏன் ஆயுதம் ஏந்தினார்கள் என்பதை ஒவ்வொருவரும் புரிந்துகொள்ளலாம்.

ஒவ்வொரு கதைகளும் எமது இரத்தத்தைக் கொதிக்கச் செய்யும். ஆத்திரமுறச் செய்யும். அந்தளவிற்கு அங்கு கொடூரம் நிகழ்ந்துள்ளது எனத் தெரிவித்தார் மனிதம் மனித உரிமைகள் அமைப்பின் செயல் இயக்குநர் அக்னி சுப்பிரமணியம்.

ஒவ்வொரு தமிழனும் படிக்க வேண்டிய புத்தகம் இது என்றும் அவர் குறிப்பிட்டார்.

தமிழ், ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளில் இந்த நூல் வெளியிடப்பட்டாலும் மொழிபெயர்ப்பாக அல்லாமல் ஒவ்வொன்றும் அந்தந்த மொழிகளில் தனித் தனியாக எழுதி வெளியிடப்பட்டுள்ளன.

தமிழ்ப் புத்தகத்தில் அதிகளவான விவரங்கள் விரிவாக வழங்கப்பட்டுள்ளது என அக்னி சுப்பிரமணியம் தெரிவித்தார்.

விரைவில் ஜேர்மன், பிரெஞ், இத்தாலி, டச் ஆகிய மொழிகளில் இந்தப் புத்தகத்தை வெளியிடுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்றும் அவர் கூறினார்.

புத்தக வெளியீட்டு நிகழ்வில் சென்னை உயர் நீதிமன்ற சட்டவாளர் அமைப்பின் தலைவர் பால் கனகராஜ், பி.யூ.சி.எல். மனித உரிமைகள் அமைப்பின் தலைவர் சட்டவாளர் திருமதி சுதா ராமலிங்கம், த வீக் ஆங்கில வார ஏட்டைச் சேர்ந்த ஊடகவியலாளர் திருமதி கவிதா முரளிதரன், ஓவியர் புகழேந்தி, ஈழ ஆர்வலர்கள் ஜனார்த்தனன், கிருபானந்தசாமி ஆகியோர் கலந்துகொண்டு சிறப்புரை ஆற்றினர்.

## மாநிலங்களைத் தனித்தனியாகப் பிரிக்க முடியாது என்கின்றார் இல. கணேசன்!



சென்னை, டிசெ. 26

உடலின் அங்கங்கள் போன்று உள்ள மாநிலங்களை எந்தக் காலத்திலும் தனியாகப் பிரிக்க முடியாது - என்று பா.ஜ.க. தமிழ் மாநில தலைவர் இல.கணேசன் கூறியுள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு -

இந்த நாட்டின் அமைப்பு குறித்து இது வரை பேசியவர்கள், பாடியவர்கள் எல்லாம் இமயம் தொட்டு குமரி வரை ஓர் உடல் போன்று அமைப்புடையது என்றே கருதியிருக்கிறார்கள். அது மாத்திரமல்ல, இந்த நாட்டை அன்னையாக மதித்து 'தாய் மண்ணே வணக்கம்' என்றும் 'வந்தே மாதரம்' என்றும் கூற அவை மந்திரச் சொற்களாக மாறியுள்ளன.

உடலின் அங்கங்கள் போன்று உள்ள மாநிலங்களை எந்தக் காலத்திலும் தனியாக பிரிக்க முடியாது. பாகிஸ்தான் பிரிந்ததே கூட பாரத தாயை சிதைத்த முயற்சி என்பதாகத்தான் தேச பக்தர்கள் வேதனைப்பட்டிருக்கிறார்கள். இனி எதிர்காலத்தில் ஓர் அங்குல அடி மண்கூட இந்த நாட்டை விட்டு பிரிவதற்கு இந்த நாட்டு மக்கள் அனுமதிக்க மாட்டார்கள் - என்றுள்ளது.

## 7 வகை இதயக் கோளாறுகள் கொண்டவருக்கு கலப்பின அறுவைச் சிகிச்சை; சென்னையில் சாதனை!

சென்னை, டிசெ. 26

உலகிலேயே முதல் முறையாக 54 வயதானவருக்கு ஏழுவிதமான மாறுபட்ட இதயக் கோளாறுகளுக்கு 6 மணி நேரம் அறுவைச் சிகிச்சை செய்து மியாட் மருத்துவமனை சாதனை படைத்துள்ளது.

சென்னையைச் சேர்ந்தவர் நாராயணசுவாமி (வயது - 54). இவரது மனைவி லட்சுமி. இவர், மயிலாப்பூரில் மருந்து கடை நடத்தி வருகிறார்.

இவர் 13 வயதில், இந்த நோய்க்கு சிகிச்சை பெறுவதற்காக, சென்னை அரச வைத்தியசாலைக்குச் சென்றார். அப்போது, இந்த நோய்க்கு போதுமான சிகிச்சை முறைகள் இல்லாததால் அவரால் சிகிச்சை பெற முடியவில்லை. இவ்வளவு காலமாக இவர் [illegible] மூச்சுத்திணறல், இதயத்துடிப்பு [illegible] பல்வேறு பிரச்சினைகளால் அவதிப்பட்டு வந்தார்.

நோய்களின் தாக்கம் அதிகரித்த நிலையில், கடந்த மாதம் மியாட் வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டார். டாக்டர் குழுவினர் 'ஆஞ்ஜியோகிராம்' உள்ளிட்ட பல்வேறு வைத்தியப் பரிசோதனைகள் செய்து பார்த்ததில், இதயத்தில் ஏழுவிதமான மாறுபட்ட குறைபாடுகள் இவரிடம் இருந்தமை கண்டுபிடிக்கப்பட்டது. இந்தக் குறைபாடுகளை சரி செய்வதற்காக கலப்பின அறுவைச் சிகிச்சை செய்ய டாக்டர்கள் முடிவு செய்தனர்.

கடந்த 8ஆம் திகதி நாராயணசுவாமிக்கு ஒரே நேரத்தில் இந்தக் கலப்பின அறுவை சிகிச்சையை செய்து இதயத்தில் இருந்த ஏழு விதமான கோளாறுகளை டாக்டர்கள் சரி செய்தனர். இப்போது, நாராயணசுவாமி நலமாக உள்ளார்.இவர், இன்னும் 10 ஆண்டுகளுக்கு மேல் நலமாக வாழலாம் அறுவைச் சிகிச்சை செய்த டாக்டர்கள் தெரிவித்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மோதினார் மனநோயாளி; கீழே விழுந்தார் பாப்பரசர்!




வத்திக்கான், டிசெ. 26

கிறிஸ்மஸ் சிறப்பு தொழுகைக்கு வந்த 16 ஆவது ஆசீர்வாதப்பர் மீது ஒரு பெண் முட்டியதால் அவர் கீழே விழுந்தார். எனினும், அவர் சமாளித்துக்கொண்டு சிறப்பு தொழுகையில் கலந்துகொண்டு அருளாசி வழங்கினார். அப்பெண் ஒரு மன நோயாளி எனத் தெரிவிக்கப்பட்டது.

உலகெங்கும் கிறிஸ்மஸ் பண்டிகை நேற்று வெள்ளிக்கிழமை சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. இதனையொட்டி கத்தோலிக்கர்களின் தலைமையிடமான வத்திகான் நகரில் பதினாறாவது ஆசீர்வாதப்பர் அங்கு கூடிய இலட்சக்கணக்கானவர்களுக்கு அருளாசி வழங்கினார்.

கிறிஸ்தவர்களின் தலைமைப் பீடமான வத்திக்கானிலுள்ள புனித பீட்டர் தேவாலயத்தில் கிறிஸ்மஸ் தினத்தையொட்டி 16 ஆவது ஆசீர்வாதப்பர் சிறப்பு பிரார்த்தனை நடத்தி நற்செய்தி வெளியிடுவது வழக்கம். இந்தச் சிறப்பு பிரார்த்தனையில் பங்கேற்க வத்திக்கான் நகர புனித பீட்டர் தேவாலயப் பகுதியில் இலட்சக்கணக்கான கிறிஸ்தவர்கள் திரண்டிருந்தனர்.

நள்ளிரவு சிறப்புப் பிரார்த்தனைக்காக 16 ஆவது ஆசீர்வாதப்பர் வந்தார். அவர் தங்க, வெள்ளை நிற அங்கி அணிந்திருந்தார். 82 வயதான அவரை பலத்த பாதுகாப்புடன் தேவாலய பாதுகாவலர்கள் அழைத்துவந்தனர்.

புனித பீட்டர் தேவாலயத்துக்குள் அவர் வந்தபோது இரு பக்கமும் திரண்டிருந்த கிறிஸ்தவர்கள் அவருக்கு வாழ்த்து தெரிவித்தனர். அப்போது யாரும் எதிர்பாராத வகையில் இளம் பெண் ஒருவர் தடுப்பு கம்பியை தாண்டி குதித்தார். பிறகு அதேவேகத்தில் ஆசீர்வாதப்பர் மீது மோதினார்.

அப்போது ஆசீர்வாதப்பர் அணிந்திருந்த அங்கியை பிடித்துக்கொண்டார்.

இதில் ஆசீர்வாதப்பர் நிலை குலைந்து கீழே விழுந்தார். அவரை பின்தொடர்ந்து வந்துகொண்டிருந்த மதகுருக்களும் கீழே விழுந்தனர். கண் இமைக்கும் நேரத்துக்குள் நடந்துவிட்ட இந்த சம்பவத்தால் புனித பீட்டர் ஆலயத்துக்குள் பரபரப்பு ஏற்பட்டது.

பாதுகாவலர்கள் ஓடி வந்து அந்த பெண்ணை பிடித்துச் சென்றனர். கீழே விழுந்து கிடந்த ஆசீர்வாதப்பரை தூக்கிவிட்டனர். அதிர்ஷ்டவசமாக அவருக்கு காயம் எதுவும் ஏற்படவில்லை. ஆனால், ஆசீர்வாதப்பரை பின்தொடர்ந்து வந்துகொண்டிருந்த 87 வயதான பிரான்ஸ் நாட்டு கத்தோலிக்க மதகுரு ரோஜர் கிட்கரே கீழே விழுந்து காயமடைந்தார். அவர் காலில் முறிவு ஏற்பட்டது. அவர் ஏற்கனவே உடல்நலக்குறைவுடன் இருந்தார். அவரை சக்கர நாற்காலியில் அமர வைத்து உடனடியாக வைத்தியசாலைக்கு அழைத்துச் சென்றனர்.

பதற்றம் இல்லாமல் காணப்பட்ட 16 ஆவது ஆசீர்வாதப்பர் பின்னர் சுமார் 2 மணி நேரம் சிறப்பு பிரார்த்தனை நடத்தினார். எனினும், இளம் பெண் ஒருவர் தடுப்பு பகுதியை தாண்டி குதித்து ஆண்டவரை மோதி தள்ளிவிட்டதால் மதகுருமார் அதிர்ச்சியுடன் காணப்பட்டனர். ஆனால், ஆசீர்வாதப்பர் எந்தவித பரபரப்பும் இன்றி பிரார்த்தனையை வழக்கம் போல் நடத்தினார்.

பாப்பரசர் மீது மோதிய பெண் சிவப்பு நிற மேலாடை அணிந்திருந்தார். அவரிடம் வத்திக்கான நகர பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர். அந்த பெண் யார் என்ற விவரம் உடனடியாக வெளியிடப்படவில்லை. எனினும், அவர் ஒரு மனநோயாளி என்றும் இத்தாலியப் பெண் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

# பெருவின் மலைப் பிராந்தியத்தில் பஸ் விபத்து: 40 பேர் மரணம்

சானா, டிசெ. 26

தென் பெருவிலுள்ள அன்டெஸ் மலைப் பிராந்தியத்தில் பஸ்ஸொன்று பாதையை விட்டு விலகி பள்ளத்தில் புரண்டு விழுந்து விபத்துக்குள்ளானது. இதில் 40 பேர் கொல்லப்பட்டனர். 10 பேர் காயமடைந்தனர்.

அரிகுயிப்பா நகருக்கும், சாந்தோ தோமஸ் நகருக்குமிடையே இக்கோர பஸ் விபத்து சம்பவித்துள்ளது. பெருவின் இரண்டாவது பெரிய நகரம் அரி குயிப்பாவாகும் என அதிகாரிகள் தெரிவித்தார்கள்.

பாதையை விட்டு விலகி, 200 மீற்றர் ஆழப் பள்ளத்தாக்கில் புரண்டுவிழுந்து இந்த பஸ் விபத்துக்குள்ளாகியுள்ளது. கடுமையான மழை, இயந்திரக் கோளாறு ஆகியவற்றால் இவ்விபத்து சம்பவித்திருக்கலாம் எனக் கருதப்படுகிறது எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

நத்தார் பண்டிகை விடுமுறையையொட்டி, பெருந்தொகையான ஊழியர்கள் தம் ஊர்களுக்குத் திரும்பிக் கொண்டிருக்கிறார்கள். ஊர்களுக்குச் செல்லவேண்டிய பெருந்தொகையானோரே இந்த பஸ்ஸில் பயணித்துள்ளனர் என்றும் அவர் விவரித்தார்.

கடும் மழையால் பள்ளத்தாக்கில் மீட்புப் பணிகள் மிகுந்த சிரமங்களுக்கு மத்தியில் மேற்கொள்ளப்பட்டுள்ளன. நீருக்குள் தலைகுப்புற பஸ் மூழ்கிக் கிடக்கிறது என உள்ளூர் தீயணைப்புப் படையைச் சேர்ந்த ஒருவர் ஏ.எவ்.பி. செய்தி நிறுவனத்துக்குத் தெரிவித்தார்.

உலக அரங்கில்

# ஈராக்கில் குண்டுத் தாக்குதல் 23 பேர் பலி; பலர் படுகாயம்!

பக்தாத், டிசெ. 26

ஈராக்கில் இடம்பெற்ற தொடர் குண்டுத் தாக்குதல்களில் 23 பேர் கொல்லப்பட்டனர். இத்தாக்குதல்கள் ஷியா முஸ்லிம்களை இலக்கு வைத்து மேற்கொள்ளப்பட்டுள்ளன. சமீப காலமாக ஈராக்கில் மீண்டும் மதப்பிரிவினைவாத சண்டைகள் பரவலாக தலைதூக்கி வருகின்றன.

தலைநகரான பக்தாத்திலுள்ள ஷியாக்கள் செறிந்துவாழும் பகுதியில் குண்டுத் தாக்குதல்கள் இடம்பெற்றன. இவற்றில் எட்டுப்பேர் கொல்லப்பட்டனர். இவர்களில் பெரும்பாலானோர் பெண்களும் பிள்ளைகளுமாவர்.

இதற்கு முன்னர் தென் பக்தாத்திலிருந்து 100 கிலோ மீற்றர் (62 மைல்) தொலைவில் அமைந்துள்ள ஹிலா என்னுமிடத்தில் இரட்டைக் குண்டுகள் வெடித்தன. இவற்றில் 15 பேர் பலியாயினர். அக்கம் பக்கக் கட்டடங்கள் பலத்த சேதமடைந்தன.

ஈராக்கில் தற்போது ஷியா யாத்திரிகர்கள் அஷுரா பண்டிகையைக் கொண்டாடி வருகிறார்கள். இதனால் சுனி முஸ்லிம் தீவிரவாதிகளின் தாக்குதல்களைத் தடுக்கும்பொருட்டு, நாடெங்கிலும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. பாதுகாப்புப் பணிகளில் பொலிஸாரும், படையினரும் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

ஷியா சமய கலண்டரிலுள்ள முக்கிய பண்டிகைகளில் அஷுராவும் ஒன்று. கி.பி.680 ஆம் வருட தியாகி இமாம் ஹுசைனின் மறைவையொட்டி 40 நாள்கள் துக்கமனுஷ்டிக்கப்படும். இமாம் ஹுஸைன் நபிகள் நாயகத்தின் பேரனாவார்.

பக்தாத்தின் சத்ர் நகரின் புறநகர்ப் பகுதியில் ஷியா மரணச்சடங்கொன்று நடைபெற்றுக்கொண்டிருந்தது. இது நிகழ்ந்து கொண்டிருந்த கூடாரத்தில் குண்டொன்று வெடித்தது. இதில் ஐவர் கொல்லப்பட்டனர் என பொலிஸாரும் வைத்தியசாலை அதிகாரிகளும் ஏ.பி.செய்தி நிறுவனத்துக்குத் தெரிவித்தார்கள்.

கிழக்கு மாவட்டமான ஜாபாரனியாவில் குண்டொன்று வெடித்தது. இதில் ஐவர் கொல்லப்பட்டனர். பலர் காயமடைந்தனர்.

# பாகிஸ்தானில் குண்டுத்தாக்குதல்: நால்வர் பலி; அநேகர் படுகாயம்

பெஷாவர், டிசெ. 26

வடமேற்கு பாகிஸ்தான் நகரான பெஷாவரில் இடம்பெற்ற தற்கொலைக் குண்டுத்தாக்குதலில், நால்வர் கொல்லப்பட்டனர். டசின் கணக்கானோர் காயமடைந்துள்ளனர் என அதிகாரிகள் தெரிவித்தார்கள்.

பெஷாவரிலுள்ள முக்கிய சதார் பகுதியில், பாகிஸ்தான் தேசிய விமானச் சேவை அலுவலகங்களுக்கு அருகில் இக் குண்டுத் தாக்குதல் இடம்பெற்றது. இப்பகுதியில்தான் இராணுவச் சிப்பாய்களின் குடியிருப்புகளும் அமைந்துள்ளன என்றும் அவர்கள் குறிப்பிட்டார்கள்.

குண்டு வெடித்ததும் புகை மண்டலம் எழுந்தது. காயமடைந்தவர்கள் வீதியில் கிடந்தார்கள். கட்டட ஜன்னல் கண்ணாடிகள் நொறுங்கி, எங்கும் சிதறிக்கிடந்தன என நேரில் கண்ட சாஹிட் கான், ஏ.எவ்.பி. செய்தி நிறுவனத்துக்குத் தெரிவித்தார்.

''இக்குண்டுத் தாக்குதலில் நால்வர் கொல்லப்பட்டனர். இவர்களில் இரு பொலிஸாரும் அடங்குவர். இது ஒரு தற்கொலைக் குண்டுத்தாக்குதலாகும்'' என வட மேற்கு முனை மாகாண சிரேஷ்ட அமைச்சர் பஷீர் அஹ்மத் பிலூர், ஊடகமொன்றிற்குத் தெரிவித்தார்.

''பாதசாரியாக வந்த தற்கொலைக் குண்டுதாரி சோதனைச்சாவடியொன்றை அண்மியவாறே குண்டை வெடிக்க வைத்துள்ளார். பெஷாவரில் கடந்த மூன்று தினங்களில் இடம்பெற்ற இரண்டாவது குண்டுத்தாக்குதல் இதுவாகும்'' என்றும் ஓரதிகாரி குறிப்பிட்டார்.

# சீனாவில் மேலும் ஐவருக்கு மரணதண்டனை விதிப்பு

இந்த ஆண்டின் முற்பகுதியில் சீனாவின் ஜின் ஜியாங் பிரதேசத்தின் மேற்குப் பகுதியில் இரத்தக் களரியுடன் இடம்பெற்ற இன வன்முறைகளில் பங்கேற்றார்கள் என்ற குற்றச்சாட்டின்பேரில் மேலும் ஐந்து பேருக்கு சீன நீதிபதிகள் மரண தண்டனை விதித்துள்ளனர்.

கடந்த ஜூலை மாதம் உரும்சீ பகுதியில் பெரும்பான்மை ஹன் சீன மக்களுக்கும் வீகர்களுக்குமிடையே இடம்பெற்ற மோதல்களில் சுமார் 200. பேர் பலியாகியிருந்தனர்.

மரணதண்டனை விதிக்கப்பட்டவர்களில் ஒன்பது பேருக்கு ஏற்கனவே தண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளது.

# பன்றிக்காய்ச்சலால் உலகில் 11 ஆயிரத்து 500 பேர் மரணம்

## சுகாதார அமைப்பு தகவல்

பன்றிக்காய்ச்சலுக்கு உலகம் முழுவதும் 11 ஆயிரத்து 500 பேர் பலியாகியுள்ளனர். இந்தத் தகவலை உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது.

வட அமெரிக்கா, மேற்கு ஐரோப்பிய நாடுகள் ஆகியவை உள்ளிட்ட நாடுகளில் சமீபத்தில் இந்த நோய் பரவலாகத் தாக்கியது.

கடந்த 20 ஆம் திகதி வரை 208 நாடுகளில் 11 ஆயிரத்து 516 பேர் பலியாகியுள்ளார்கள். இந்த நோய் தாக்குதல் கடந்த ஏப்ரல் மாதம்தான் தொடங்கியது.

அது முதல் இந்த நோய் பல்வேறு தரப்பினரையும் தாக்கியுள்ளது. மத்திய ஐரோப்பா, கிழக்கு ஐரோப்பா, மேற்கு, மத்திய மற்றும் தெற்கு ஆசியா ஆகிய நாடுகளிலும் இந்த நோய் தாக்கியுள்ளது.

# குதிரை வண்டியில் வந்து தற்கொலைத் தாக்குதல்

## ஆப்பானில் எண்மர் பலி; 12 பேர் காயம்

கந்தஹார், டிசெ. 26

தென் ஆப்கானிஸ்தான் நகரான கந்தஹாரில் குதிரை வண்டியொன்றில் வந்த தற்கொலைக் குண்டுதாரியொருவர் மேற்கொண்ட குண்டுத் தாக்குதலில் எட்டுப் பேர் கொல்லப்பட்டனர் என பொலிஸ் வட்டாரம் தெரிவித்தது.

குதிரை வண்டியை நிறுத்த பொலிஸார் முற்பட்டனர். எனினும், அதிலிருந்தவர் ஒரு ஹோட்டலுக்கும், அடுத்துள்ள உள்ளூராட்சி மன்ற அலுவலகத்துக்குமிடையே குண்டை வெடிக்க வைத்தார் என்றும் இவ்வட்டாரம் குறிப்பிட்டது.

குண்டுவெடிப்பில் ஐவர் வண்டிக்கருகிலேயே உயிரிழந்தனர். மற்றும் மூன்று பாதசாரிகளும் இதில் கொல்லப்பட்டுள்ளனர். 12 பேர் காயமடைந்துள்ளனர் என்றும் இது விவரித்தது.

குண்டுவெடிப்பில் வண்டி முற்றாக சேதமடைந்தது. இக்குண்டு வண்டிக்குள் வைக்கப்பட்டு, வெடிக்க வைக்கப்பட்டுள்ளது என மாகாண பிரதி பிரதம பொலிஸ் அதிகாரி பஜல் அஹ்மத் சார்ஷாத் பி.பி.ஸிக்குத் தெரிவித்தார்.

# ஈரானில் ஓசாமா பின்லேடனின் மனைவி - குழந்தைகள் கைது

அல்-குவைதா தலைவர் பின்லேடனின் மனைவியரில் ஒருவர், சில குழந்தைகள், பேரக்குழந்தைகள் ஆகியோர் ஈரானில் கைதுசெய்யப்பட்டு, இரகசியமான ஓரிடத்தில் வீட்டுக்காவலில் வைக்கப்பட்டுள்ளனர். பிரிட்டிஷ் பத்திரிகையொன்று இத்தகவலை வெளியிட்டுள்ளது.

பின்லேடனுக்கு பல மனைவிகளும் மற்றும் குழந்தைகளும் உள்ளனர். அவர்களில் ஒரு மனைவியும், சில குழந்தைகளும், பேரக்குழந்தைகளும் முன்னர் ஆப்கானிஸ்தானில் பின்லேடனுடன் வசித்து வந்தனர்.

அமெரிக்காவின் தாக்குதல் தொடங்கியதும் பின்லேடனைத் தவிர ஏனையோர் அங்கிருந்து தப்பி ஈரானுக்கு ஓடிவிட்டனர்.

ஈரான் முஸ்லிம் நாடு என்ற போதிலும், அது ஷியா முஸ்லிம்கள் பெரும்பான்மையினராக வசிக்கும் நாடாகும். பிலேடனும், அவரது அல்-குவைதா தீவிரவாதிகளும் சுனி முஸ்லிம்களாவர்.

பின்லேடனின் [illegible] குழந்தைகள், 11 பேரக்குழந்தைகள் ஆகியோர் ஈரானின் தலைநகரான தெஹ்ரானில் உள்ள ஓர் இரகசிய இடத்தில் தங்கியிருந்தனர்.

இந்நிலையில், கிட்டத்தட்ட 8 ஆண்டுகளுக்குப் பின்னர் அவர்கள் தெஹ்ரானில் பதுங்கி இருக்கிறார்கள் என்பது வெளி உலகத்துக்குத் தெரியவந்தது.

இதையடுத்து, இவர்களை ஈரான் அரசு கைது செய்து இரகசிய இடத்தில் வீட்டுக்காவலில் வைத்துள்ளது என பிரிட்டிஷ் பத்திரிகையொன்று செய்தி வெளியிட்டுள்ளது. பின்லேடன் குடும்பம் ஈரானில் இருப்பது தெரியவந்தால் அமெரிக்கா போன்ற நாடுகளிடமிருந்து தொல்லை வரலாம் என்று கருதி ஈரான் அரசு இந்தத் தகவலை மறைத்துவிட்டது என்றும் கூறப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிறந்தநாள் வாழ்த்துக்கள்



ஆஸ்பத்திரி வீதி, சங்கானையைச் சேர்ந்த

செல்வன்

## நிஷாந்தன் யனோஜனன்

தனது முதலாவது பிறந்த தினத்தை அவரது வீட்டில் வெகு விமரிசையாக இன்று (2009.12.26) சனிக்கிழமை பி.ப.3. மணியளவில் கொண்டாடவுள்ளார்.

இவரை அன்பு அப்பா, அம்மா, அம்மப்பா, அம்மம்மா, அப்பம்மா, பாட்டி, மாமன்மார், மாமிமார், சித்தப்பாமார்,சித்திமார், சகோதரர்கள் அனைவரும் பல்லாண்டு காலம் சீருஞ்சிறப்புமாக பல கலைகள் கற்று வாழ வாழ்த்துகின்றார்கள்.

தகவல்:
அம்மப்பா, அம்மம்மா.

(91799)

---




# சரவணா புடவையகம்

No:1 புதுவருட, தைப்பொங்கல் திருநாளை முன்னிட்டு மலிவு விற்பனை

நல்லூர்

**31.12.2009 வரை மட்டும்**

இன்றே விரையுங்கள்

- ★ இந்தியன் சிக்குன்ஸ் சாறி 1900/- Full Worked
- ★ இந்தியன் திரட்வேக் சாறி 1800/- Full Worked
- ★ இந்தியன் சில்க்சாறி 650/- (Official Saree)
- ★ இந்தியன் கொட்டன் சாறி 850/- (Official Saree)
- ★ இந்தியன் கொட்டன் சாறி 1500/- (Rich cotton vijayalaksmy 6.20m)
- ★ இந்தியன் சில்க் பஞ்சாபித் துணி 1000/- (No.1 Special quality Gurukupa)
- ★ இந்தியன் கொட்டன் பஞ்சாபித் துணி 1300-2400/- வரை (Rich cotton Special quality)
- ★ பாகிஸ்தான் கொட்டன் பஞ்சாபி துணி 700/- (லைனிங் தேவை இல்லை)

மற்றும் இந்தியன் சாறிகள் பஞ்சாபித் துணிகள் ஏராளம்! ஏராளம்!! மிக மிக மகத்தான விலைக் கழிவில் உள்ளது.

" வாருங்கள் வந்து பாருங்கள்"

New Selection

எங்கும் கிடையா விலையில்

**Saravana Tex**

526, பருத்தித்துறை வீதி, நல்லூர் (பின்வீதி) சிவன்கோயில் அருகில் யாழ்ப்பாணம்.

குறிப்பு:
ஏழு நாள்களும் காலை 8 மணிமுதல் இரவு 8 மணிவரை கடை திறந்திருக்கும்.


---

'விராட் வில்வப் பிரம்மனே நமக'

# நீங்கா நினைவில்



| மாயவன் படைப்பில் | சுனாமி அழிவில் |
|---|---|
| 03 * 10 * 1978 | 26 * 12 * 2004 |

அமரர் **நல்லையா பிரகலாதன்** (கண்ணன்)

நடமாடிய தெய்வம் (கண்ணா) நீ
படமாகிப்போனாயே
இடம் இல்லை நம் வீட்டில் - எம்
பாரம் தூக்க யாருளரோ

தாவடி வடக்கு, கொக்குவில்.
இணுவையனை மேற்கு,
உடுப்பிட்டி.

(91007)

என்றும் உன் நினைவுடன் :
தாய், சகோதரிகள்.

---

# முதியோருக்கு உலர் உணவுப் பொதிகள்

நவாலி,டிசெ.26

நவாலி கிழக்கு ஜே/135 கிராம சேவையாளர் பிரிவின் முதியோர் சங்க ஒன்று கூடல் நிகழ்வு கடந்த புதன்கிழமை நவாலி பொது நோக்கு மண்டபத்தில் நடைபெற்றது.

இதில் முதியோர்களுக்கு உலர் உணவுப் பொதிகள் சங்கத்தினரால் வழங்கப்பட்டன. அத்துடன் நவாலி சிக்கன கடனுதவி கூட்டுறவுச் சங்கத்தினால் இவர்களுக்கு சிற்றுண்டி வகைகளும் தேநீரும் வழங்கிக் கௌரவிக்கப் பட்டது.

(ஒ- 100)

---

# வாசனா சம்பத

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இலக்கம்: 799 திகதி: 24.12.2009

| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கங்கள் | | | | போனஸ் இல: |
|---|---|---|---|---|---|
| W | 18 | 48 | 52 | 57 | 16 |

| | கூட்டு | பரிசுத் தொகை | வெற்றி பெற்றோர் |
|---|---|---|---|
| சுப்பர் பரிசு | ஆங்கில எழுத்தும் 4 இலக்கங்களும் சரியாயின் | 10,718,707.50 | - |
| 1ம் பரிசு | 4 இலக்கங்கள் சரியாயின் | 2,000,000.00 | 01 |
| 2ம் பரிசு | 3 இலக்கங்களும் போனஸ் இலக்கமும் சரியாயின் | 100,000.00 | 04 |
| 3ம் பரிசு | 3 இலக்கங்கள் மட்டும் சரியாயின் | 2,000.00 | 288 |
| 4ம் பரிசு | 2 இலக்கங்கள் மட்டும் சரியாயின் | 100.00 | 14835 |
| 5ம் பரிசு | 1 இலக்கம் மட்டும் சரியாயின் | 20.00 | 206690 |

இவ்வாரம் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத் தொகை ரூ.
**8,593,300.00**

சுப்பர் பரிசுத்தொகை அடுத்த வியாழக்கிழமை
**11,079,746.00**

ஐந்து லெட்சம் அல்லது அதற்குக் கூடிய தொகைக்கான பரிசு அரசாங்க வரி சட்டதிட்டங்களுக்கு உட்பட்டது. பரிசைப் பெறுவதற்கு தேசிய அடையாள அட்டை கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

வெற்றி பெறும் டிக்கட்டுகள் சீட்டிழுப்புத் திகதியிலிருந்து 6 மாதங்கள் மட்டுமே செல்லுபடியாகும்.

தேசிய லொத்தர் சபை
234/2, காலி வீதி, கொழும்பு 03.
தொலைபேசி: 2470662, 2470663
அவசர தேவைக்கு: 2473360, 2433631
இணையம் www.nlb.lk

---

# துயர் பகிர்கின்றோம்

எமது பாடசாலையில் பகுதிநேர ஆங்கில ஆசிரியராகக் கல்வி கற்பிக்கும் திரு.அருள்நேசன் அவர்களின் தந்தையாரான

**மரியாம்பிள்ளை அருளானந்தம்**

அவர்கள் 19.12.2009 அன்று அகாலமரணம் அடைந்துள்ளதை அறிந்து அவரின் பிரிவால் துயருறும் அனைவருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

பாடசாலைச் சமூகம்
யா/ இளவாலை றோ.க.த.ஆ. பாடசாலை.

(Γ/563507)

---

# நாளை சிறுவர்களுக்கு படையினர் உபசரிப்பு

நெல்லியடி, டிசெ.26

வரணியில் இயங்கும் 52 ஆவது படையணி தலைமையகத்தின் ஏற்பாட்டில் அல்வாய் சக்கோட்டை செபஸ்தியார் ஆலயத்தில் வைத்து நாளை ஞாயிற்றுக்கிழமை சிறுவர்களுக்கு சிற்றுண்டிகள், பரிசில்கள் வழங்கப்படவுள்ளன.

நத்தார்,புதுவருட கொண்டாட்டங்களை ஒட்டி இந்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக வல்வை இராணுவ முகாம் படையினர் தெரிவித்தனர். (ஒ-1)

---

# அம்புலன்ஸ் தரிப்பிடம் அமைக்க நிதி ஒதுக்கீடு

நவாலி, டிசெ.26

மானிப்பாய் பிரதேச அரசினர் வைத்தியசாலைக்கு அம்புலன்ஸ் தரிப்பிடம் அமைப்பதற்கென 'நிகொட்' அமைப்பு இருபது லட்சம் ரூபா நிதியை ஒதுக்கீடு செய்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

(ஒ - 100)

---

# மரண அறிவித்தல்

## சிதம்பரப்பிள்ளை குலசபாநாதன் (சிவஞானம்)

(தலைமை அதிகாரி, தேயிலைத் தொழிற்சாலை,ஸ்ரெஸ்பி எஸ்ரேற்,மஸ்கெலியா)



கரவெட்டி கிழக்கு, கிழவி தோட்டத்தைப் பிறப்பிடமாகவும் மஸ்கெலியா ஸ்ரெஸ்பி எஸ்ரேற் தேயிலை தொழிற்சாலையின் தலைமை அதிகாரியாகக் கடமையாற்றியவருமான சிதம்பரப்பிள்ளை குலசபாநாதன் 23.12.2009 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சிதம்பரப்பிள்ளை ஆசிரியர் (சோதிடர்) - சின்னத்தங்கம் தம்பதியினரின் சிரேஷ்ட புதல்வனும், சிவக்கொழுந்துவின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற ஆறுமுகம் மற்றும் தங்கம்மா தம்பதியினரின் அன்பு மருமகனும், நிரஞ்சன் (Quantity Surveyor, Dubai), சோபனா (பற்சிகிச்சையாளர், சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை, சாவகச்சேரி) ஆகியோரின் அன்புத் தந்தையும், ஓய்வுபெற்ற ஆசிரியைகள் சரோஜினிதேவி, குலமணிதேவி, இந்திராதேவி மற்றும் திரவியநாதன் (கனடா), சற்குணநாதன் (லண்டன்), சிவச்செல்வநாதன் (இ.போ.ச. நடத்துநர், பருத்தித்துறைச்சாலை) ஆகியோரின் அன்புச் சகோதரனும், தயாபரன் (கணக்காளர், யாழ்.தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச்சபை), சுனீத்தா (லவா) ஆகியோரின் அன்பு மாமனாரும், கிருத்திக், ரிஷானி, சங்கீத் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (27.12.2009) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக சோனப்பு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், ஊழியர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கிழவி தோட்டம்
கரவெட்டி கிழக்கு,
கரவெட்டி.
தொ.பே.: 021 3214714

(சி/563509)

தகவல் :
ஆ.ராஜேந்திரன் (மைத்துனர்)
பிரதிக் கல்விப்பணிப்பாளர்,
யாழ்.கல்வி வலயம்.

---

# டெங்கு ஒழிப்பு குறித்து மக்கள் மத்தியில் பிரசாரம்

யாழ்ப்பாணம்,டிசெ.26

இலங்கை செஞ்சிலுவைச் சங்க தென்மராட்சிப் பிரிவினர் தென்மராட்சிப் பிரதேசத்தில் டெங்கு ஒழிப்பு தொடர்பான விழிப்புணர்வு செயற்பாட்டை மக்கள் மத்தியில்பிரசாரம் மூலம் மேற்கொண்டு வருகின்றனர்.

அண்மையில் [illegible]லை பிரிவு மக்களுக்கான கருத்தரங்[illegible]யசாலை கிராம அபிவிருத்திச் சங்க [illegible]ண்டபத்தில் பிரிவுத் தலைவர் செ.மகேஸ்வரன் தலைமையில் நடைபெற்றது.

நிகழ்வில் பொது சுகாதாரப் பரிசோதகர் யா.நக்கீரன், கிராம அலுவலர் செ.மதியழகன் ஆகியோர் டெங்கு ஒழிப்புப்பற்றிய விழிப்புணர்வு கருத்துக்களை வழங்கினார்.

---

# மரண அறிவித்தல்கள்

## இளையதம்பி திருவிளங்கம்



ஏழாலை மேற்கைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட இ.திருவிளங்கம் (இளைப்பாறிய இ.போ.ச. நடத்துநர்) நேற்று (25.12.2009) வெள்ளிக்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற இளையதம்பி -சின்னம்மா தம்பதியரின் பாசமிகு மகனும், ஐங்கரன் (ஆசிரியர், யா/சென்.மேரிஸ் றோ.க. பெண்கள் வித்தியாலயம்), ஜாமினி (ஆசிரியை,கிளி/முழங்காவில் மகா வித்தியாலயம்) ஆகியோரின் அன்புத் தந்தையும், ஞானசிவத்தின் அன்புச் சகோதரனும் வி.சுப்பிரமணியம் (மணியம் ஸ்ரோர்ஸ், சாவகச்சேரி), வி.வேலாயுதபிள்ளை (கல்வயல்), ஞா.பத்மலோஜினி, ந.கனகம்மா, சி.கமலாதேவி ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.12.2009) சனிக்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக ஏழாலை உசத்தியோடை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கெள்ளவும்.

புதுவளவு, ஏழாலை மேற்கு,
ஏழாலை.

தொ.பே: 0718561886

தகவல் :
குடும்பத்தினர்.

(91860)

## திருமதி பஞ்சாட்சரதேவன் வசந்தமலர் (வசந்தி)

(களபாவோடை, ஏழாலை தெற்கு - ஜேர்மனி)



ஏழாலை தெற்கைப் பிறப்பிடமாகவும், ஜேர்மனியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பஞ்சாட்சரதேவன் வசந்தமலர் 20.12.2009 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 23.12.2009 புதன்கிழமை மாலை ஜேர்மனியில் உள்ள அன்னாரின் இல்லத்தில் நடை பெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

களபாவோடை,
ஏழாலை தெற்கு,
ஏழாலை.

(91861)

தகவல் :
பொ. ரவிச்சந்திரன் (சகோதரன்),
நி. சசிதரன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுபான்மையினரின் வாக்குகள் பொன்சேகாவுக்குக் கிடைக்கலாம்

## ஆய்வாளர்களை மேற்கோள்காட்டி 'ரொய்ட்டர்' தகவல்

கொழும்பு, டிசெ. 26

சிறுபான்மை இனத்தவர்களுக்கு நெருக்கமான ஐக்கிய தேசியக் கட்சி, முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவை ஆதரிப்பதால் இம்முறை ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்கள் அவருக்கு வாக்களிக்கக் கூடும் என ஆய்வாளர்களை மேற்கோள் காட்டி 'ரொய்ட்டர்' செய்தி வெளியிட்டுள்ளது.

யுத்தத்திற்குப் பிந்திய தேசிய நல்லிணக்கம் குறித்து இரு பிரதான வேட்பாளர்ளும் இதுவரை எதனையும் தெரிவிக்காத போதிலும், அரசியல் தீர்வொன்றை முன்வைப்பதற்கான சாதகமான தன்மை சரத் பொன்சேகாவிடம் உள்ளதாகத் தெரிவித்துள்ள 'ரொய்ட்டர்', மேலும் குறிப்பிட்டுள்ளவை வருமாறு:-

முன்னர் விடுதலைப் புலிகளால் ஆதரிக்கப்பட்ட முக்கிய தமிழ்க் கட்சியான கூட்டமைப்பு இரு பிரதான வேட்பாளர்களில் ஒருவருக்கும் இன்னமும் ஆதரவு அளிக்க முன்வரவில்லை.

இலங்கையின் சனத்தொகையில் 12 வீதமாக உள்ள தமிழர்கள், இறுதி நேரத்தில் யாரை ஆதரிப்பது எனத் தீர்மானிக்கப் போகும் வாக்காளர்களில் முக்கியமானவர்களாக உள்ளனர்.

மோதல்கள் காரணமாகப் பல வருடகாலமாக வாக்களிக்கும் உரிமை கிடைக்கப்பெறாத பலருக்கு இம்முறை அதற்கான வாய்ப்புக் கிடைக்கலாம்.

**பொன்சேகா பக்கம் சாயலாம்**

சிறுபான்மை சமூகங்களுக்கு இணக்கமான ஐக்கிய தேசியக் கட்சியின் ஆதரவு முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவிற்கு கிடைத்துள்ளதால் தமிழர்கள் சரத் பொன்சேகா பக்கம் சாயலாம் என ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

யுத்தத்திற்குப் பிந்திய தேசிய நல்லிணக்கம் குறித்து இரு பிரதான வேட்பாளர்களும் தமது கொள்கை எதனையும் இதுவரை தெரிவிக்கவில்லை.

எனினும், அடுத்த இரு வாரங்களில் இவை வெளியாகலாம்.

அரசு மீள்குடியேற்றத் திட்டத்தைத் துரிதப்படுத்தியுள்ளது.

ஆனால், உரிய திட்டமின்றி இதனை அரசு முன்னெடுப்பதாக பொன்சேகா குற்றம் சாட்டியுள்ளார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ யுத்தத்திற்குப் பிந்திய அரசியல் தீர்வை முன்வைத்திருக்கவேண்டும். எனினும் அவருக்கு ஆதரவளிக்கும் கூட்டணிக் கட்சிகளில் உள்ள கடும் போக்காளர்களிடமிருந்து இவ்விடயத்தில் அவர் எதிர்ப்பை எதிர்கொண்டுள்ளார்.

தேசிய நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கு ஜனாதிபதி மேற்கொள்ளும் எந்த முயற்சியும் இவர்களால் பாதிக்கப்படலாம் என ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

**சரத் பக்கத்தில் சாதகத் தன்மை**

அரசியல் தீர்வு குறித்துத் தமது கூட்டணி சகாக்கள் மத்தியில் பரந்துபட்ட உடன்பாடு காணப்படுவதால் சரத் பொன்சேகா இந்த விடயத்தில் சாதகத்தன்மையைக் கொண்டுள்ளார்.

இரு முக்கிய வேட்பாளர்களும் பொருளாதாரம் குறித்துப் பெருமளவு உறுதிமொழிகளை வழங்கியுள்ளனர்.

அரச சேவையைச் சேர்ந்தவர்களுக்குப் பத்தாயிரம் ரூபா ஊதிய அதிகரிப்புக் குறித்த உறுதிமொழியை வழங்கியுள்ள சரத் பொன்சேகா, ஊழல் மற்றும் வீண் செலவு போன்றவற்றிற்கு முடிவு காணப் போகிறார் எனத் தெரிவித்துள்ளார்.

மஹிந்த ராஜபக்ஷ உட்கட்டமைப்பு அபிவிருத்தி குறித்துப் பேசுகிறார். மக்களைக் கவர்வதற்காக மானியங்களை வழங் குவது குறித்தும் அவர் உறுதிமொழியளிப்பார்.

**பொருளாதார வளர்ச்சி குறித்து...**

எனினும், யுத்தத்திற்குப் பின்னரான பொருளாதார வளர்ச்சி குறித்த எதிர்பார்ப்பை எவ்வாறு பயன்படுத்தப் போகிறார்கள் என்பது குறித்து இரு வேட்பாளர்களும் இதுவரை தெளிவாக எதனையும் தெரிவிக்கவில்லை.

பொருளாதாரம் குறித்து இரு வேறு கொள்கைகளை உடைய கட்சிகள் தனது கூட்டணியில் உள்ளதால் பொன்சேகா பிரச்சினைகளை எதிர்கொள்ளலாம்.

இதேவேளை, ராஜபக்ஷ நிர்வாகம் தாங்கள் பொதுக்கூட்டங்களை நடத்துவதைத் தடுப்பதுடன் சுவரொட்டிகளைக் கிழித்தெறிவதாகவும் தெரிவிக்கும் எதிர்க்கட்சிகள் இதனால் தங்களது நிலை பாதிக்கப்படுவதாகக் குறிப்பிடுகின்றன.

அரசமைப்பின் 17 ஆவது திருத்தத்தின் கீழ் உருவாக்கப்பட வேண்டிய சுயாதீன ஆணைக்குழுக்கள் ஏற்படுத்தப்பட்டிருந்தால் இந்த நிலை ஏற்பட்டிருக்காது என ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர் - என்று தெரிவித்துள்ளது. (அ-சி)

# மஹஜன சம்பத லொத்தர் முடிவுகள்

யாழ்ப்பாணம்,டிசெ.26

தேசிய லொத்தர் சபையின் மஹஜன சம்பத 2192 ஆம் இலக்க நேற்றைய சீட்டிழுப்பில் "U" என்ற ஆங்கில எழுத்தும் 7/0/5/6/5/9 என்ற இலக்கங்களும் அதிர்ஷ்டத்திற்குரியனவாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன.

அதன் பிரகாரம் 705659 என்ற இலக்கங்களை இடப்பக்கத்திலிருந்து வலப்பக்க மாகக் கொண்ட சீட்டை வைத்திருக்கும் இருவருக்கு முதலாம் பரிசாக தலா 20 லட்சம் ரூபா கிடைக்கும்.

05659 என்ற இலக்கங்களை ஒழுங்கு முறைப்படி கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 9 பேருக்கு இரண்டாம் பரிசாக தலா ஒரு லட்சம் ரூபா வழங்கப்படும்.

5659 என்ற தொடர் இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 112 பேருக்கு மூன்றாம் பரிசாக தலா 10 ஆயிரம் ரூபா வழங்கப்படும்.

659 என்ற தொடரிலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 1,071 பேருக்கு நான்காவது பரிசாக தலா ஆயிரம் ரூபா கிடைக்கும்.

59 என்ற தொடர் இலக்கத்துடனான சீட்டுக்களை வைத்திருக்கும் 10 ஆயிரத்து 542 பேருக்கு 5 ஆம் பரிசாக தலா நூறு ரூபா கிடைக்கும்.9 என்ற இலக்கத்தை உடைய சீட்டுக்களை வைத்திருக்கும் ஒரு லட்சத்து 5 ஆயிரத்து 695 பேருக்கு ,ஆறாம் பரிசாக தலா 20 ரூபா கிடைக்கும்.

வலப்பக்கத்திலிருந்து இடப்பக்கமாக 70,565 என்ற இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் பத்துப் பேருக்கு ஏழாம் பரிசாக தலா பத்தாயிரம் ரூபா கிடைக்கும்.

7056 என்ற இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 106 பேருக்கு 8 ஆம் பரிசாக தலா ஆயிரம் ரூபா கிடைக்கும்.

705 என்ற இலக்கங்களையுடைய சீட்டுக்களுக்கு உரிய 1,063 பேருக்கு ஒன்பதாவது பரிசாக தலா நூறு ரூபா கிடைக்கும்.

70 என்ற இலக்கங்களையுடைய 10,665 பேர் 10 ஆம் பரிசாக தலா ஐம்பது ரூபா பெறுவர்.

"U" என்ற ஆங்கில எழுத்தை உடைய சீட்டுக்களை வைத்திருக்கும் 42,178 பேருக்கு தலா 20 ரூபா கிடைக்கும். (அ-07)

# பளை பிரதேச செயலர் பிரிவில் விரைவில் ஆயிரம் பேரை மீள்குடியமர்த்த ஏற்பாடு

## அதற்கு வசதியாக செயலகம் ஜனவரி 01 முதல் அங்கு இயங்கும்

யாழ்ப்பாணம்,டிசெ.26.

பளை பிரதேச செயலர் பிரிவில் எதிர்வரும் 05 ஆம் திகதிக்குப் பின்னர் ஆயிரம் பேர் வரை மீள்குடியேற்றப்படவுள்ளனர். இதற்கு வசதியாக எதிர்வரும் முதலாம் திகதி தொடக்கம் பளை பிரதேச செயலகம் முன்னர் இருந்த இடத்திலேயே இயங்கவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பளைப் பிரதேசத்தில் முதலில் பளை நகர்ப்பகுதி, புலோப்பளை மேற்கு, புலோப்பளை கிழக்கு, இத்தாவில் ஆகிய கிராம சேவையாளர் பிரிவுகளிலேயே ஆயிரம் பேரும் குடியேற்றப்படவுள்ளனர்.

இதேவேளை, கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள கரைச்சி பிரதேச செயலர் பிரிவில் ஆயிரத்து 200 குடும்பங்களைச் சேர்ந்த 2 ஆயிரத்து 713 பேர் இதுவரை மீள்குடியேற்றம் செய்யப்பட்டுள்ளனர். இப்பிரதேசத்தில் மீள்குடியேற்றத்திற்காக மேலும் ஆயிரம் பேர் வவுனியா நலன்புரி நிலையங்களில் இருந்து அழைத்து வரப்பட்டுள்ளனர்.

இப்பிரதேச செயலர் பிரிவில் உருத்திரபுரம் கிழக்கு, உருத்திரபுரம் மேற்கு, உதயநகர் கிழக்கு, கனகபுரம், பெரியபரந்தன், ஜெயந்திநகர், திருநகர் வடக்கு, திருநகர் தெற்கு ஆகிய கிராம சேவையாளர் பிரிவுகளைச் சேர்ந்த மக்களே இவ்வாறு மீள்குடியேற்றப்பட்டுள்ளனர்.

அத்துடன் பூநகரி பிரதேச செயலர் பிரிவிலும் ஒரு தொகுதி மக்கள் மீள்குடியேற்றப்பட்டுள்ளனர். (ஓ-236)

# கணிப்பீட்டறிக்கை வழங்கும் நிகழ்வு

அரியாலை சயன்ஸ் அக்கடமியின் வருடநிறைவு பரிசளிப்பும், கணிப்பீட்டறிக்கை வழங்கும் நிகழ்வும் இன்று மாலை 4 மணிக்கு சிரேஷ்ட ஆசிரியர் வி.சுந்தரராஜன் தலைமையில் நடைபெறவுள்ளன. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பிராந்திய மின்சாரசபை மின் அத்தியட்சகர் ந.குகதாசன் கலந்து கொள்வார்.

# நந்தாவில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவதானித்த மற்றைய இளைஞர் ஓடிச் சென்று அப்பகுதி மக்களிடம் தெரிவித்துள்ளார். அப்பகுதிக்கு அவர்கள் விரைந்து வந்த போது ஒருவர் நீரினுல் மூழ்கி இறந்த விட்டார். மற்றவர் உயிருக்குப் போராடிக் கொண்டிருந்தார். அந்த இளைஞரை மீட்டு யாழ்.ஆஸ்பத்திரிக்கு கொண்டு செல்லும் வழியில் அவரும் உயிரிழந்து விட்டார்.

இதேவேளை, இந்தச் சம்பவம் குறித்து வேறு விதமான தகவல்களும் தெரிவிக்கப்பட்டன. அவை குறித்து உறுதிப்படுத்தப் படவில்லை.எனினும், மரணமடைந்த இளைஞர்களுடன் கேணிக்குச் சென்றிருந்த மற்றைய இளைஞர் கூறியிருப்பதாவது:-

தானும், உயிரிழந்தவர்களும் கேணியின் படியில் இருந்த வேளையில் அங்கு வந்த இருவர் திடீரென தாக்குதல் நடத்தினர் என்றும் பின்னர் அவர்கள், அவர்கள் இரு வரையும் கேணிக்குள் தள்ளிவிழுத்தினர் என்றும் அவவேளை தான் அங்கிருந்து ஓடித் தப்பிவிட்டார் என்றும் கூறியுள்ளார்.

இச்சம்பவம் குறித்து கோப்பாய் பொலிஸார் தீவிர விசாரணைகளை மேற் கொண்டு வருகின்றனர். (ஓ-1-49-86)



கொக்குவில், நந்தாவில், அம்மன் ஆலய கேணியில் மூழ்கி உயிரிழந்த மாணவனான ரஞ்சன் மயூரனின் சடலம், மீட்கப்பட்டவுடன் எடுக்கப்பட்ட படம்.*(படம்: பிறேம்சீலன்)*

# உள்நாட்டுக்குள் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொழும்பு - 07, ஐந்தாம் ஒழுங்கையில் உள்ள ரணில் விக்கிரமசிங்கவின் இல்லத்தில் நேற்று முற்பகல் 11 மணி முதல் பிற்பகல் 12.30 மணி வரை இந்தப் பேச்சுகள் இடம்பெற்றன எனத் தெரியவருகின்றது.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாளர் ஜெனரல் சரத் பொன்சேகாவுக்கு ஆதரவு வழங்கி, அவர் அத்தேர்தலில் வெற்றிபெற்றால், அவரது அரசு தமிழர் விடயத்தில் கைக்கொள்ளக் கூடிய போக்குக் குறித்து இந்தப் பேச்சுகளில் ஆராயப்பட்டதாகத் தெரிகின்றது.

தற்போது சிறைவைக்கப்பட்டுள்ள தமிழ்க் கைதிகளின் விவகாரம், அகதிகள் மீள்குடியமர்வு, அதியுயர் பாதுகாப்பு வலயத்தை நீக்கி அங்கு மக்களை மீளக் குடியமர அனுமதித்தல் என்பன பற்றியும் விரிவாகப் பேசப்பட்டதாகத் தெரியவந்தது.

இலங்கை இனப் பிரச்சினைக்கு - வெளிநாட்டுத் தலையீடின்றி - உள்நாட்டுக்குள் உருவாகும் தீர்வு குறித்து வலியுறுத்தப்பட்டு வருகின்றமையால், அது குறித்தும் இரு தரப்பிலும் விரிவாக ஆராயப்பட்டது எனத் தெரிகின்றது.

உள்நாட்டுக்குள் உருவாகும் தீர்வு ஒன்றை எட்டுவதற்காக ஏற்கனவே இனப் பிரச்சினை விவகாரத்தை ஒட்டி இங்கு முன்வைக்கப்பட்ட சில திட்டங்களைக் கவனத்தில் எடுத்துப் பரிசீலிக்கவும் நேற்றைய சந்திப்பில் உடன்பாடு காணப்பட்டதாகத் தெரியவந்தது.

* ஜனாதிபதி பிரேமதாஸ காலத்தில் மங்கள முனசிங்க தலைமையிலான குழுவினால் தயாரிக்கப்பட்ட யோசனைத் திட்டங்கள்.

* 2000 ஆம் ஆண்டில் தீர்வுக்கான உத்தேச திட்டமாக அப்போதைய சந்திரிகா அரசு தயாரித்துப் பிரேரித்த தீர்வு யோசனைகள்.

* 2002 இல் ரணிலின் அரசு விடுதலைப் புலிகளுடன் நடத்திய பேச்சுகளை அடுத்து எட்டப்பட்ட ஒஸ்லோ கூட்டறிக்கை இணக்கம்.

* தற்போதைய மஹிந்த ராஜபக்ஷ அரசு இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்காக நியமித்த அனைத்துக் கட்சிப் பிரதிநிதிகள் குழுவின் சார்பில் சம்பந்தப்பட்ட புத்திஜீவிகள் குழு தயாரித்து சமர்ப்பித்த தீர்வுத் திட்ட யோசனை நகல்.

இத்தகைய நான்கு முக்கிய அம்சங்களையும் அடிப்படையாகவும், பிரதான ஆவணங்களாகவும் வைத்துக்கொண்டு உள்நாட்டில் தயாரான தீர்வுத் திட்டம் ஒன்றை எட்டுவதற்கு முயற்சிக்கலாம் என்று நேற்றைய சந்திப்பில் இணங்கப்பட்டதாகவும் அறிய வந்தது.மேலும் தொடர்ந்து பேச்சு நடத்துவது குறித்தும் தீர்மானிக்கப்பட்டதாக அறியவந்தது. (அ-சி)

# 3 லட்சம்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

'கபே' அமைப்பின் ஊடகப் பேச்சாளர் கீர்த்தி தென்னகோன் இது தொடர்பாகக் கூறியவை வருமாறு:-

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலை ஒட்டி வன்னி அகதிகளில் சுமார் 20 ஆயிரம் பேர் பதிவுசெய்யப்பட்டுள்ளனர். மீதி அகதிகள் இன்னும் விண்ணப்பிக்கவில்லை. இதனால் சுமார் மூன்று லட்சம் அகதிகளின் வாக்குரிமை பாதிக்கப்படும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

இத் தேர்தலில் தற்போதுள்ள பெரிய பிரச்சினை இந்த வாக்குரிமையைப் பாதகாப்பதுதான். இது தொடர்பாக எடுக்கப் பட்டிருக்கும் நடவடிக்கை பற்றித் தெளி வில்லை.

அந்த அகதிகளைப் பதிவுசெய்ய என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது, வாக்களிக்க வைப்பதற்கு இடங்கள் எவ்வாறு தெரிவுசெய்யப்பட்டிருக்கின்றன என்பவையெல்லாம் இன்னும் தெளிவாகவில்லை.

இந்தப் பிரச்சினை தொடர்பாக ஜனாதிபதி வேட்பாளர்கள் வாய் திறக்கவில்லை என்றே சொல்லலாம். அரசியல் கட்சிகளும் மௌனமாகவுள்ளன. தேர்தல் ஆணையாளரும், 22 வேட்பாளர்களும் ஒன்றிணைந்து - கலந்தாலோசித்து - அந்த அகதிகளின் வாக்குரிமையைப் பாதுகாக்க உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும்.

தேர்தல் வன்முறைகளை விடவும் இந்தப் பிரச்சினை பெரும் பிரச்சினையாகவுள்ளது.

சம்பந்தப்பட்ட தரப்பினர் அனைவரும் இந்த விடயத்தில் கவனம் செலுத்தி அகதிகளின் வாக்குரிமையைப் பாதுகாக்க வேண்டும்..- என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர்தல் ஆணையாளருடன் தமிழ்க்கூட்டமைப்பு பேச்சு

## அகதிகள் வாக்களிக்க ஏற்பாடு செய்வதாக

கொழும்பு, டிச. 26

வன்னி அகதிகள் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் வாக்களிப்பதற்கான உரிய வசதிகளைச் செய்து கொடுப்பது குறித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர்களான இரா.சம்பந்தன் எம்.பியும், சுரேஷ் பிரேமச்சந்திரன் எம்.பியும் நேற்று முன்தினம் தேர்தல்கள் ஆணையாளர் தயானந்த திஸநாயக்கவைச் சந்தித்து விரிவான பேச்சுகளில் ஈடுபட்டனர்.

இடம்பெயர்ந்து முகாம்களில் உள்ளோருக்கு வாக்களிப்பதற்காகக் கொத்தணி வாக்குச்சாவடிகளை அமைத்தல், மீளக் குடியேறியோருக்கு அவரவர்களது இடங்களில் வாக்களிப்புக்கு ஏற்பாடு செய்தல், பிற இடங்களில் தங்கியுள்ளோரைக் கடந்த பொதுத் தேர்தலின்போது வசதியளித்தமை போன்று தூர இடங்களில் இருந்து வாக்களிப்பு நிலையங்களுக்கு வாகனங்களில் கூட்டி வருவதற்கு ஒழுங்கு செய்தல் போன்ற பல திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டிருப்பதாகத் தேர்தல்கள் ஆணையாளர் தமிழ்க் கூட்டமைப்புத் தலைவர்களிடம் விளக்கினார்.

இந்த அகதிகளுக்கு வாக்களிப்பதற்கான வசதிகளைச் செய்துகொடுக்கும் விடயங் களைக் கவனிப்பதற்காக விசேட அதிகாரி ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார் என்றும் -

அவர் வவுனியாவில் தங்கியிருந்து செயற்படுவார் என்றும் - இச்சந்திப்பின்போது தகவல் தெரிவிக்கப்பட்டதாக அறியவந்தது. (அ-சி)

# தேர்தல் காலத்தில் அமைச்சுப் பதவி வழங்கப்பட்டமை சட்டவிரோதம்

## முன்னாள் பிரதம நீதியரசர் சரத் என்.சில்வா கருத்து

கொழும்பு, டிசெ. 26

ஜனாதிபதித் தேர்தல் காலத்தில் எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கு அமைச்சுப் பதவிகள் வழங்கப்பட்டமை தேர்தல் சட்டத்திற்கு முரணானதென முன்னாள் பிரதம நீதியரசர் சரத் என்.சில்வா தெரிவித்துள்ளார்.

அண்மையில் ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து ஆளும் கட்சிக்குத் தாவிய ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ மற்றும் இந்திக்க பண்டாரநாயக்க ஆகியோருக்கு அமைச்சுப் பதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

குறித்த உறுப்பினர்களது ஆதரவாளர்களின் வாக்குகளைப் பெற்றுக்கொள்ளும் நோக்கில் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது என அவர் தெரிவித்துள்ளார்.

தனியார் தொலைக்காட்சி சேவை ஒன்றுக்கு வழங்கிய நேர் காணலின்போதே அவர் இதனைச் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஆளும் கட்சிக்கு ஆதரவு வழங்குவதாக குறித்த ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்கள் உறுதியளித்ததன் பின்னரே அமைச்சுப் பதவிகள் வழங்கப்பட்டுள்ளது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

## யாழ். குடாநாட்டிலும் தற்போது 'ஹட்ச்' வலையமைப்புச் சேவை

யாழ்ப்பாணம், டிசெ. 26

யாழ். குடாநாட்டில்'ஹட்ச்', தொலைபேசி வலையமைப்பு செயற்பட ஆரம்பித்துள்ளது.

முதற்கட்டமாக யாழ்ப்பாணம், புலோலி, சாவகச்சேரி ஆகிய இடங்களில் 'ஹட்ச்', தொலைபேசி வலையமைப்பு அஞ்சல் நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

எதிர்காலத்தில் குடாநாட்டின் ஏனைய பகுதிகளுக்கும் இவ்வலையமைப்பு விஸ்தரிக்கப்படவுள்ளது. (ஒ-236-15)

## சுவர்க்கவாசல் ஏகாதசி உற்சவம்

வடமராட்சி, டிசெ. 27

கோப்பாய் கிருஷ்ணர் ஆலயத்தில் சுவர்க்க வாயில் ஏகாதசி தினமான நாளை ஞாயிறு மாலையிலிருந்து விசேட பூசைகளும், ஆன்மீக நிகழ்வுகளும் நடைபெறும்.

அதனைத் தொடர்ந்து நடைபெறும் கலைநிகழ்வுகளின் சிறப்பு நிகழ்வாக பிரபல பேச்சாளர் சொல்லின் சிகரம் பொன்.சுகந்தனின் தலைமையில் யாழ். பட்டிமன்றக் குழுவினர் வழங்கும் பட்டிமன்ற நிகழ்வும் அதனைத் தொடர்ந்து சத்தியதாஸ் வில் லிசைக் குழுவினரின் வில்லிசையும் இடம்பெறவுள்ளன. (1-236)

## ஜி.எஸ்.பி.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கப்படுகின்றன. முக்கியமான விடயம் என்னவென்றால், 'ஜி.எஸ்.பி.' வரிச்சலுகையைப் பெறுவது தொடர்பாக பிரஸல்ஸில் உள்ள அதிகாரிகளுடனும், இலங்கையில் உள்ள தூதரகத்துடனும் பேச்சுகளை மேற்கொண்டு வருகின்றோம் என்பதே - என மஹிந்த சமரசிங்க குறிப்பிட்டுள்ளார்.

ஐரோப்பிய ஒன்றியத்திற்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்போவதாக சர்வதேச வர்த்தக அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தமை வெறுமனே கருத்தே என மேலும் தெரிவித்துள்ள அமைச்சர் மஹிந்த சமரசிங்க, மனித உரிமைகள் தொடர்பாக இலங்கை அரசு முன்வைக்கவுள்ள செயற்திட்டம் ஐரோப்பிய ஒன்றியத்தின் நிலைப்பாட்டில் மாற்றத்தைக் கொண்டு வரும் என நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

இலங்கை அரசின் மனித உரிமை தொடர்பான செயற்திட்டம் குறிப்பிட்ட காலத்திற்குள் முன்னெடுக்கப்படவேண்டிய தந்திரோபாயங்கள் குறித்துத் தெரிவிக்கின்றது.

மனித உரிமை விடயங்களில் முன்னேற்றத்தைக் காண்பதற்கான எமது அர்ப்பணிப்பை இது புலப்படுத்தும் என்றும் அமைச்சர் சமரசிங்க தெரிவித்துள்ளார்.

இடம்பெயர்ந்த மக்கள் மீளக்குடியமர்த்தப்பட்டமை தொடர்பாக ஐரோப்பிய ஒன்றியத்திடமிருந்து சாதகமான சமிஞ்ஞைகள் வெளிவருகின்றன என்றும் தெரிவித்துள்ள அமைச்சர் ஐரோப்பிய ஒன்றியத்தின் இறுதி முடிவு பெப்ரவரி மாதத்திலேயே வெளியாகும், மேலும் அதனை நடைமுறைப்படுத்த ஆறு மாதங்களாகும், எனவே மனித உரிமை நிலைவரத்தை முன்னேற்றுவது குறித்த எமது கடப்பாட்டை புலப்படுத்துவதற்கு ஒகஸ்ட் வரை கால அவகாசம் உள்ளது - என்றார்.

இது இவ்வாறிருக்க, இலங்கையின் உத்தேச சட்ட நடவடிக்கைத் திட்டம் தொடர்பாக இலங்கை அரசிடமிருந்து உத்தியோகபூர்வ தகவல் எதுவும் கிடைக்கவில்லை என இலங்கைக்கான ஐரோப்பிய ஒன்றியத்துதுவர் பேர்னார்ட் சவேஜ் தெரிவித்துள்ளார்.

## பொன்சேகாவின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விசாரணைகளை மேற்கொண்ட மாவனெல்ல பொலிஸார் அவர்களைக் கைது செய்து விசாரணைகளின் முடிவில் பொலிஸ் பிணையில் அவர்களை விடுவித்தனர் மேலதிக விசாரணைகள் தொடர்கின்றன எனவும் கூறப்படுகின்றது. (அ-சி)

## தபால்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குருநாகல் மாவட்டத் தேர்தல் செயலகம் தெரிவித்துள்ளது.

குருநாகல் மாவட்டத்தில் 54 ஆயிரத்து 395 பேரும், கண்டி மாவட்டத்தில் 37 ஆயிரத்து 600 பேரும், காலி மாவட்டத்தில் 28 ஆயிரம் பேரும், கம்பஹா மாவட்டத்தில் 32 ஆயிரம் பேரும், பதுளை மாவட்டத்தில் 26 ஆயிரம் பேரும் விண்ணப்பித்துள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தபால்மூல வாக்களிப்பு ஜனவரி 12ஆம், 13 ஆம் திகதிகளில் இடம்பெறும் எனத் தேர்தல் செயலகம் அறிவித்துள்ளது.

Navalar Institute
ஆனைப்பந்தி. யாழ்ப்பாணம்.
A/L 2012
கணித, உயிரியல் பிரிவுகள்
ஆரம்பம் : 28-12-2009 திங்கள் 3.00மணி
வழமையான ஆசிரியர் குழாம்

புதியபிரிவுகள் ஆரம்பம்
ICT(O/L) (தரம் 10 & 11)
ICT(A/L) (தரம் 12 & 13)
GIT(A/L) (தரம் 12 & 13)
Ms Office2007 & DTP
Graphics Design
Internet & Email
BIT, AAT, ACBF
Accounting Package
Computer Hardware
Programming Languages
Kids Programme (தரம் 01 → 09வரை)
Group Classes
ஏனைய கற்கை நெறிகளுக்கும் புதிய பிரிவுகள் ஆரம்பம்.




முழுமையான கணனிக் கல்விக்கு இன்றே எம்முடன் இணையுங்கள்...
CB Computer Academy Station Road Kondavil. T.P: 021-3217903

STUDY WITH WORK IN UK
A/L பரீட்சை முடிந்ததும் அடுத்தது என்ன?
கவலையை விடுங்கள் !
அங்கீகாரம் பெற்ற College/University களில்
புதிய விசா நடைமுறைகளிற்கு அமைய Visa Process
செய்து தரப்படும்.




பெப்ரவரி ஏப்ரல் 2010 ற்கான பதிவுகளை தற்போது மேற்கொள்ள முடியும்.
அனைத்து கற்கை நெறிகளுக்குமான அனுமதிகள் பெற்றுக்கொடுக்கப்படும்.
B.F.C Services
T.P.0212226113, 0776147174
No 01, பிறவுண் வீதி.யாழ்ப்பாணம். (ARRUL GLOBAL EXPRESS) அருகாமையில்.




RG இரத்தினகோபால்ஸ் 63,65, கன்னாதிட்டி றோட், யாழ்ப்பாணம்.

CHEMISTRY
A/L 2012
ஆரம்பம் : 28/12/2009 (Monday 4.30 p.m.)
S. Vasu B.sc.
NAVALAR Institute
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

யாழ் நகரில்
திறமை, அனுபவம் வாய்ந்த இளம் முன்னணி ஆசிரியர்களின் கூட்டணியுடன்.
A/L 2012
கலை, வர்த்தக, கணித ,உயிரியல் பிரிவுகள்
ஆரம்பம் ஜனவரி 02 சனிக்கிழமை காலை 8.00மணி
அனுமதிகள் இன்றுமுதல்...
NEC Navalar Education Centre
Clock Tower Road. Jaffna

LAVA HOSPITAL
75, கோயில் வீதி, யாழ்ப்பாணம். தொ.பே. 222 4333
ஸ்கான் (Scan), ECG கணனி மயப்படுத்தப்பட்ட ஆய்வுகூட வசதிகள் மூலம் மேற்கொள்ளப்படுகிறது.
Basic Body Checkup
'அடிப்படை உடற் பரிசோதனைகள்
★ உடல் பருமனானவர்களைப் பரிசோதிப்பதற்கான Obesity package - 1200/=
(வி/562626)

யாழ்.கொழும்பு A/C பஸ் ஆசனப் பதிவுகள் இன்று தொடக்கம் இங்கு பெற்றுக்கொள்ளலாம்




யாழ்.போன்சொப்
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 3817, 021 222 7125, 0773611282.

CHEMISTRY
A/L 2010
பௌதிக இரசாயனவியல்
ஆரம்பம் : 29/12/2009 (Tue.) 4.30 p.m.
S. Vasu B.sc.
NAVALAR
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

SM CONSULTANT SERVICE
UK STUDENT VISA
யாழ் மாணவர்களுக்கு லண்டனில் விசா பெற்றுக் கொடுப்பதில் மக்களின் நன் மதிப்பைப் பெற்று முன்னணி வகிக்கும் ஒரே நிறுவனம்.
பெப்ரவரி, ஏப்ரல் மாதங்களுக்கான பிரவேசத்துக்குரிய நடவடிக்கைகள் ஆரம்பமாகியுள்ளன..
விண்ணப்பிக்க விரும்புவோர் உடனடியாகத் தொடர்பு கொண்டு தேவையான விபரங்களை சமர்ப்பித்து தற்போது அமுலில் உள்ள இலகுவான நடைமுறையின் கீழ் விசாக்களை பெற்றுக்கொள்ளுங்கள்.
சந்தர்ப்பத்தினை பயன்படுத்திக்கொள்ளுங்கள்!!!
STUDY IN MALASIYA
குறைந்த கட்டணத்தில் மலேசியாவில் பட்டப்படிப்பு (3 வருடங்கள்).
விரும்பின் 3ம் வருடம் லண்டனில் பட்டப்படிப்பினைப் பூர்த்தி செய்யும் வாய்ப்பு.
மலேசியாவில் கல்வி கற்கையில் பகுதி நேர வேலைவாய்ப்பு.
மலேசியாவில் பட்டப்படிப்பினை பூர்த்தி செய்தால் மத்திய கிழக்கு நாடுகளில் கவர்ச்சிகரமான சம்பளத்துடன் வேலை பெறும் வாய்ப்பு.
STUDY IN EAST EUROPE-UKRAINE-MBBS/MD
Lugansk State Medical University(Ukraine) இல் இணைந்து சிறிலங்கா Medical Concil லினால் அங்கிகரிக்கப்பட்ட டாக்டராக நீங்களும் வர விரும்பினால் எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள்.
G.C.E. O/L தகமையுடன் 7 வருடங்கள் கற்கைநெறி.
G.C.E. A/L தகமையுடன் 6 வருடங்கள் கற்கைநெறி.
உணவு, விடுதி வசதி அனைத்தும் உட்பட.......
அனைத்து விபரங்கட்கும்
தினமும் (ஞாயிறு உட்பட) காலை 8.00 மணிமுதல் மாலை 7.00 மணி வரை அலுவலகத்தில் நேரடியாகச் சந்தித்துச் கொள்ளலாம்.
அனைத்து சேவைகளும் நம்பிக்கைக்குரியவை என்பதனை உத்தரவாதத்துடன் உறுதிப்படுத்துகின்றோம்.
தொடர்புகளுக்கு:
0212223818, 0215673818, 0774528818
e.mail: mg1404_2009@yahoo.com
இல:148,கோவில் வீதி (யுனிசெவ் முன்பாக) யாழ்ப்பாணம்.

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 26.12.2009 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org